Registered as a News-Paper

ஈழநாதம்

விலை: 15.00
பக்கம் : 20

வெள்ளிநாதம் Weekly

நாதம் – 14 | வெள்ளி – 35 | 31 – 06 – நவம்பர் – 2003



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 31.10.2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

ஓயாதஅலைகள்-03 இன் நினைவு

ஓயாத அலைகள் -05 இன் நான்காம் ஆண்டு நினைவு நாள் இன்று. வன்னியில் வாழ்ந்த ஒவ்வொருவனும் இனிமையுடன் நினைவுகூரும் அந்த சுகப்பொழுதுக்குச் சொந்தக்காரன். சும்மா இருந்தாலும் கூட ஒரு பழுதூர்க்கும் வாழ்தலாகவே அன்றைய நாட்கள் கழிந்து கொண்டிருந்தன.

"ஜெயசிக்குறு" காடுகளுக்குள் விரட்டிய மக்கள் ஒரு பெரும் உடைப்பன்றி வாழ்தலுக்கு வேறு வழியின்றியிருந்த காலம். உடைப்பிற்கு மகா அணிதிரள்வு தேவையாகவிருந்த "ஜெயசிக்குறு" தந்த துயரம் அதற்கான கருக்கட்டலாக இருக்கும், அல்லது இருந்தது என்பதை சிறிலங்காவின் படைகள் நினைத்திருக்கவில்லை.

வன்னியில் மையங்கொண்டிருந்த யுத்தம் 25 வருட தமிழர் ஆயுதப் போராட்டத்தை முடிவடைய வைத்துவிடும் என்ற நம்பிக்கையில் சிங்கள தேசம் இருந்தது.

இன்றும் மீதமாக "மீட்கப்பட" வேண்டிய நிலப்பரப்பு என்று இலங்கைப் படைத்துறையால் மக்களுக்கு வெளியிடப்பட்டிருந்த 'பொக்கற் கலண்டர் வரைபடம்' இதற்கான அதிக நம்பிக்கையை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கியிருந்தது.

அதிக பயன் விளைவுள்ள இத்தகைய பிரச்சாரங்களினால் இனவாதிகளின் வழிநடத்தலுக்குட்பட்டிருந்த சிங்கள மக்கள் புலிகள் சேனையின் இறுதித் தோல்விக்கான செய்திக்காகவும் சிங்கக் கொடியேற்றும் காட்சிக்காகவும் காத்துக்கொண்டிருந்தனர்.

வன்னியில் நடக்கும் யுத்தத்தின் முடிவு தமது தலைவிதிகளைத் தீர்மானிக்க வல்லதென்ற வரலாற்று ஞானத்தில் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் வாழ்ந்த மக்கள் எந்தத் துர்ச் செய்தியையும் கேட்கக் கூடாதென்பதற்காக தமது வாழ்வைக் கழித்துக்கொண்டிருந்தனர். அப்போதுதான் புலிகள் அந்தப் பெரும் சமருக்கான அனலை மூட்டினர். அது நெருப்பாற்று வெள்ளமாக பரவலாயிற்று. 'சத்ஜெய', 'ஜெயசிக்குறு', 'ரணகோஷ' என்று அது எதிரியின் வழித்தடங்களை அழித்துக்கொண்டு பாய்ந்தது. வருடக் கணக்கில் பிடித்தவற்றையெல்லாம் நிமிடக்கணக்கில் இழக்க நேர்ந்தன.

இதுபற்றி இப்போது ஏன் விபரிக்க நேர்ந்தது என்றால், "யுத்தத்தில் எப்பொழுதும் சொந்த நிலத்து மக்களே இறுதி வெற்றி அடைவர்" என்ற யுத்தத்தில் வெற்றிக்கான போரியல் நிபந்தனையை மறுதரப்பு ஏற்றுக்கொள்ளும் மனநிலையை இன்றும் அடையவில்லை என்பதைச் சுட்டவே. கெரில்லா யுத்தமுறையில் வெற்றிபெறும் வாய்ப்புப்பற்றி ஒரு கெரில்லாத் தலைவர் கூறிய வாசகம். 'தாயின் மடிச்சூட்டில் ஒரு கெரில்லா வீரன் பாதுகாக்கப்படுகிறான்' என்பது.

ஒரு முதிர்ச்சி பெற்ற விடுதலைப் போராட்டம் வன்னியில் புலிகள் தனிமைப்படுத்தப்பட்டது போன்ற நிலையிலிருந்து மீண்டெழ முடிகிறதென்றால் அதன் அர்த்தம் விடுதலைக்காக அது என்ன விலை கொடுப்புக்கும் தயாராகிவிட்டது என்பதும் அது புறநிலைச் சாதக பாதகங்களுக்கப்பால் முக்கியத்துவத்தை தனது முயல்தலுக்கே வழங்கும் என்பதும் நம்பும் என்பதுமே.

தூரனின் பார்வையில்

காணாமல் ஆக்கப்பட்டோரும்... கன்துடைப்பு அறிக்கையும்...

வடக்கில் இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூரணமாக முடிந்த பாடில்லை.

அதே போன்று காணாமல் போனோரை இழந்து தவிக்கும் குடும்பங்களின் அவலமும் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

இவர்கள் உண்மையில் காணாமல் போனவர்களில்லை. - காணாமல் போகப் பண்ணப் பட்டவர்களே.

அதுவும் சொந்த மண்ணில், சொந்த வதிவிடங்களில் இருந்து எங்கிருந்தோ வந்த அந்நியர்களால், ஆயுதந் தாங்கிய அரச படையினரால் தொலைந்துபோகச்செய்யப் பட்டவர்கள்.

இந்தியப்படை வடபகுதியில் நிலைகொண்டு ஆக்கிரமித்திருந்த காலத்தில் அவர்களாலும் அவர்களின் கூலிப்படையினராலும் ஒரு தொகையிலானோர் காணாமல் போகச்செய்யப்பட்டார்கள்.

அவர்களுக்கு என்ன நடந்தது என்பது விசாரணைகளற்றுப்போன விடயமாகி நிரந்தரக் கேள்விக்குறியாகவே இன்றும் உள்ளது. இந்தியப் படை வந்த வழியே அவமானங்களைச் சுமந்து, வண்ணம் வெளிறியநிலையோடு எமது மண் சோகங்களையும் இழப்புகளையும் சுமந்த வண்ணம் காணாமலாக்கப்பட்டோர் நிரந்தரமாக காணமுடியாத நிலைக்குப் போய்விட்டார்கள் என்ற எண்ணத்துடன் உறுதியாகவே ஏங்கி நின்றார்கள்.

இது நடந்து முடிந்து ஒரு தசாப்தம் முடிவடைவதற்கு முன்னமேயே அடுத்த கொடூரத்தை சிறிலங்காப்படையினர் அரங்கேற்றம் செய்தனர்.

சூரியகதிர் சுட்டெரித்து சுடலையாக்கிய யாழ் குடாவில் மீண்டும் ஒரு தொகையான தமிழ் மக்கள் காணாமலாக்கப்பட்டார்கள். இராணுவ மயமான மண்ணில், அவர்கள் காணாமலாக்கப்பட்ட விதம் ஒவ்வொன்றும் பீதியையும் மரண அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும் தன்மைகொண்டவையாகும்.

சந்திரிகா என்ற சிறிலங்காவின் முப்படைத் தளபதி, ரத்வத்தை என்ற தர அடிப்படையில் தகுதியற்ற இராணுவ ஜெனரலான - உடத்தலவின்ன படுகொலை வழக்குப் புகழ் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் தலைமையிலான படையினரின் அறிவையும் இதயங்களையும் வெல்லும் நடவடிக்கை (Winning Hearts and Minds) என்ற பெயரிலான உளவியல் நடவடிக்கை மூலம் மேற்கொண்ட தமிழின அழிப்பு நடவடிக்கைக்கு செம்மணிப் புதைகுழிகள் சத்தியமான சாட்சியங்களாகும்.

கிளறப்பட்ட புதை குழிகளில் இருந்து கிடைத்த எச்சங்களான எலும்புக்கூடுகள் உட்படமனித தடயங்களில் தங்கள் தங்கள் உறவுகளை இனங்காணத்துடித்து பதைத்த இதயங்களில் கழன்றெரிந்த சுவாலை இன்னமும் அணையவில்லை.

அவர்கள் விடும் ஏக்கப் பெருமூச்சும் மனம் நொந்து சபித்த வார்த்தைகளும், சிறிலங்காவின் இனவாத ஆட்சி பீடத்தை இன்னமும் அல்லாட வைத்த வண்ணமேயுள்ளது.

ஸ்திரமற்ற அரசு, வலுவற்ற பிரதமர், அதிகாரமுள்ள ஆனால், மன அமைதியற்ற சனாதிபதி, குழப்பம்மிக்க அரசியல், முரண்பட்ட இரட்டை ஆட்சி, நாட்டைக்குட்டிச் சுவராக்கும் எதிர்க்கட்சிகள், நம்பிக்கையற்ற சமாதான நகர்வு, நாட்டின் அனைத்து வளங்களையும் அந்நிய ஆதிக்க வல்லூறுகளுக்கு குத்தகைக்கு விடுமளவிற்கு நலிந்துபோய்க் கொண்டிருக்கும் பொருளாதாரம் என சிறிலங்கா அதல பாதாளத்தை நோக்கி - புதை குழிக்கான யாத்திரையை மேற்கொண்டு வருகிறது. எந்த அல்லது எவருடைய சாபத்திற்கு சிறிலங்கா இலக்காகியுள்ளது என்பது சொல்லித்தெரிய வேண்டிய ஒன்றல்ல...

ஆனால், இதற்கான சாப விமோசனம் தற்போதைக்கு இருப்பதாகவும் தெரியவில்லை.

எங்கள் பிள்ளைகளுக்கு, எங்கள் கணவருக்கு, எங்கள் உறவுகளுக்கு, எங்கள் சகோதர சகோதரிகளுக்கு, என்ன நடந்தது என காணாமலாக்கப்பட்டோரின் இரத்த உறவுகள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டியது சிறிலங்காவின் பேரினவாத அரசு மட்டுமே.

படையினர்தான் அவர்களைக் காணமலாக்கினார்கள். ஆனாலும், அவர்கள் அய்யுகள் மட்டுமே...!

எய்தவர்கள் அரச உத்தரவிட்டவர்கள் அரசியல் அதிகாரத்தை தமது கையில் வைத்திருப்போரே...

மனித உரிமைகள் ஆணைக் குழுவினரின் விசாரணைகளுக்கு இராணுவத்தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பது குழுவினரின் குற்றச்சாட்டு.

ஆனால், ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என்ற உத்தரவும் கூட மேலிடத்திலிருந்து படைத் தரப்புக்கு கிடைத்திருக்கலாமல்லவா?

அவர்கள் தானே அறிவையும் மனதையும் மென்மையும் உளவியல் நடவடிக்கைக்கு படையினருக்கு உத்தரவிட்டவர்கள்.

தமிழ் மக்களின் அறிவையும், மனதையும், பீதியையும், மரண அச்சத்தையும் ஊட்டி சொல்லுங்கள் என்பதுதானே அந்த நடவடிக்கையின் உள்ளார்ந்த மறைநோக்கம்.

அதைத்தானே படையினர் செய்தார்கள்.

அது அவர்களின் இராணுவத்தனமான வீருப்பத்திற்குரிய தொழில் என்பது வேறு விடயம்.

அரசு ஆறடி பாய் என்றால் இராணுவம் அறுபதடி பாயும். இது பொது விதி. காணாமல் போகச் செய்யப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பது எல்லோருக்குமே தெரிந்த ரகசியம்.

கைது செய்யப்பட்ட அனைவரும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டு புதைக்கப்பட்டார்கள் அல்லது எரிக்கப்பட்டார்கள்... மேலும் சிலர் மலைக்குழிகள், கிணறுகள், குளங்கள் ஆகியவற்றுள் வீசப்பட்டார்கள்.

எல்லாமே ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பாரம்பரிய குணாம்சத்தின் தன்மைக் கேற்பவே நடந்தது... பேரினவாதிகள் எதனைக் கற்பித்தார்களோ எதற்கு கட்டளையிடப்பட்டார்களோ அதுவே நடத்திமுடிக்கப்பட்டது.

அரசின் திருப்தியே படையினரின் திருப்தி அவ்வளவுதான்!

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கைக்கும் குற்றச்சாட்டுக்கும் என்ன நடக்கும் என தெரியும். குழுவின் சிபார்சுகள் சம்பிரதாய பூர்வமான ஆவணமாக கோவையினுள் சேர்க்கப்படும்.

குழுவின் கடமைப் பொறுப்பு அத்துடன் முடிந்துவிடும்.

காணாமல் போனோரின் - அதாவது காணாமல் போகச் செய்யப்பட்டோரின் குடும்பத்தவரின் அவலம் தொடரவே செய்யும்...

மேலும் பலர் காணாமல் போகச் செய்யப்படவும் கூடும்.

ஏனெனில் சிறிலங்கா பௌத்த சிங்கள குடியரசின் அரசியல் மாப்பில் தமிழ் மக்களை காணாமல் செய்வதற்கான அதிகாரத்தை படைத்துறைக்கு வழங்கும் 'விதி' எழுதப்படாத ஒன்றாக நிரந்தரமாக இணைக்கப்பட்டே இருக்கிறது.

சமாதானம் வேண்டி ரணிலுக்கு மட்டும் காப்பு

பிரவீன்

அண்மைய அரசியல் நிகழ்ச்சிகளின்படி ரணிலுக்கான காலம் மேலும் வாய்த்து வருகிறது. அதன் பிரதி அர்த்தம் சமாதானத்திற்கான காலம் முன்னாரிலும்விட வசப்பட்டு வருகிறது என்பதாகத்தான் இருக்கவேண்டும். ஏனெனில் ரணில் முன்னிறுத்தியிருந்ததும் இருப்பதும் சமாதானத்தையே.

ரணிலுக்கான எதிரணி, ஆட்சிக்கவிழ்ப் பொன்றுக்கு தாம் தயாராகிவிட்டதாக பகிரங்கமாகவே பேசியவேளையில் அதற்கான தருணமாக புலிகள் இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரையை கையளிக்கவிருக்கும் காலத்தை பொருத்தமானதாகக் கருதியிருந்த குழலில் கவிழ்ப்புக்கான வலுவைக்காட்டி அச்சுறுத்தலை வெளிப்படுத்துவதற்காக பத்துலட்சம்பேரை தலைநகரில் திரட்டி பேரணி நடத்தத்தீர்மானித்திருந்தபோது வெரு' சியுற்றுப்போயிருந்த ரணில் அரசாங்கத்தை சமாதான நிகழ்ச்சி நிரலில் சக்திமிக்கவர்களான எல்லோரும் காப்பாற்றியிருந்தனர்.

சமாதானத்தின் பங்காளிகளான விடுதலைப்புலிகள் தாம் தயாரித்திருந்த இடைககால நிர்வாக சபைத்திட்ட வரையை கையளிப் பதற்கான திகதியை முற்கூட்டியே நோர்வேத் தரப்பினூடாக அறிவித்திருந்தபோது அதனை ஒரு வாரகாலம் பிற்போட்டுத்தருமாறு அரசதரப்பு கேட்டுக்கொண்டது. நடக்கவிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொழும்புப் பேரணியின் திகதியையும் அநுராதபுரத்தில் நடக்கவிருக்கும் 'தேசபிறேமி'யின் பேரணியையும் கடந்தொரு நாளில் அதனைக் கையளிக்கவே அனுசரணைத் தரப்பினூடாக அரசு அணுகுவதைப்புரிந்து, அதற்கு ஒத்துழைக்கும் முகமாக கையளிப்புத் திகதியை ஒக்ரோபர் 31ஆக மாற்றிக்கொண்டனர்.

இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரையில் புலிகளின் யோசனைகளை சிங்கள மக்களுக்கான பூதாகரமான விடயமாக உருப்படுத்தி அதனை ஆயுதமாக்கி சமாதானத்தின் தொடர்ச்சியை அதன் காப்பில் முன்னேறிவரும் ரணிலை தாக்கலாம் என்ற அச்சநிலையினாலேயே அரசாங்கம் இப்படியொரு வேண்டுகோளை புலிகளிடம் விடுத்தது. அதனைப் புரிந்துகொண்டு அதற்கு ஒத்துழைக்கும் முகமாகவே புலிகள் கையளிக்கும் திகதியை ஒக்ரோபர் 31ஆக மாற்றிக் கொடுத்தனர்.

சர்வதேச நிலைமைகளில் தம்மால் முடக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளை மேலெழ வைத்துவிட்டதுடன் அவர்களுக்கான அங்கீகாரத்தை உருவாக்குவதற்கும் ரணில் அரசாங்கம் வாய்ப்பளித்துவிட்டதாக பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றம்சாட்டிவந்த ரணிலின் இராஜதந்திரத் தோல்வி அல்லது குருட்டுத்தனம் என்ற பிரச்சாரத்திலிருந்து, அதன் தாக்கவீச்சிலிருந்து, அதன் விளைவுகளிலிருந்து அமெரிக்கா விடுதலைப்புலிகளை மீண்டும் தடைசெய்ததன் மூலம் ரணிலை காப்பாற்றியிருக்கிறது.

இப்பிராந்தியத்தில் தனது நலன்களைக் காப்பாற்றவேண்டியிருக்கும் அமெரிக்கா அதற்காக இலங்கையின் சமாதானத்தைக் காப்பாற்றவேண்டியிருக்கிறது. இலங்கையின் சமாதானத்திற்காக ரணில் அரசாங்கத்தை அதன் எல்லா எதிராளிகளிடமிருந்தும் காப்பாற்றவேண்டியிருக்கிறது. அதேநேரம், ரணிலைப் பாதுகாக்க சமாதானத்தின் பங்காளிகளான விடுதலைப்புலிகள் தமது ஒத்துழைப்பை வழங்கியதன்மூலம் சமாதானத்தைப்பாதுகாப்பதில் தமக்குள்ள சிரத்தையை வெளிப்படுத்தியிருந்தனர். ஆனாலோ விடுதலைப்புலிகளைப் பலியிட்டு சமாதானத்திற்காக ரணிலை பாதுகாக்க முனையும் அமெரிக்காவின் அணுகுமுறைதான் முரண்நகையாகவும் உறுத்தலாகவும் தமிழ்மக்களுக்கு இருக்கிறது.

நோர்வே மற்றும் யப்பான் தரப்புக்கள் சமாதானத்தைக் குழப்புவதற்கான எத்தனங்கள் எதனையும் எடுக்கவேண்டாம் என ஜனாதிபதிக்கு அதிக அழுத்தத்தைப் பிரயோகிப்பதனாலேயே அந்நாட்டு அமைச்சர்கள் இராஜதந்திரிகளால் ஜனாதிபதியை சந்திப்பதற்காக விடுக்கப்படும் வேண்டுகோள்களை இராஜதந்திர நாகரிக முறைமைகளுக்கு மாறாகவும்கூட ஜனாதிபதி மறுத்துவருகிறார். இதன்பொருள் அந்நாடுகள் சமாதானத்திற்காக ரணிலைப் பாதுகாப்பதில் அதிக பிரயத்தனங்களை எடுத்து வருகின்றன என்பதுதான்.

இப்பிராந்திய தலைமை வலுவான இந்தியாவை ஒரு பகைமையற்ற சக்தியாக உருவாக்குவதற்கு ரணில் எடுத்துவந்த பிரயத்தனங்களுக்கு பாதகமற்ற சமிக்ஞையைக் காட்டுவதாக இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் உருவாகுவதற்கான சாதகம்பற்றி செய்திகள் வெளியிடப்படுகின்றன.



மொத்தத்தில் எல்லாக்கரங்களாலும் ரணிலுக்கான காப்பு வழங்கப்பட்டிருக்கும் குழலில் பொதுஜன ஐக்கிய முன்னணி நடத்திய கொழும்புப்பேரணி அதன் ஆதரவாளர்களாலேயேகூட புறக்கணிக்கப்பட்ட நிலைமை ரணிலுக்காக, ரணிலின் சமாதானத்திற்காக சிங்கள மக்களும் தமது கரங்களைக்கொடுத்திருக்கின்றனர் என்பதாகவே இருக்கிறது.

இப்பொழுது புலிகளின் இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரைபு கையளிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு ரணில் அளிக்கப்போகும் பதிலிற்காக இலங்கை அரசியல் எதிர்காலம் காத்திருக்கிறது.

சமாதானத்தைச் சாத்தியப்படுத்துவதற்காக இடைக்கால நிர்வாகசபையை சாத்தியப்படுத்தும் பொறுப்பு இப்பொழுது ரணிலின் கையில். அதற்கான தழைகள் அறுத்தெறியப்பட்டாயிற்று. இது விடயத்தில் ரணிலுக்கான காப்பும் ஆதரவும் உள்ளேயும் வெளியேயும் ரணிலை நோக்கி மையப்படுத்தப்பட்டாயிற்று. ரணிலுக்கான எல்லா எதிர்நிலைமைகளும் அவரது காலடியில் வசப்பட்டிருக்கும் சூழலிது. ரணிலே இப்பொழுது சமாதானத்தின் எதிர்காலத்திற்கு பொறுப்புச் சொல்லவேண்டியவராக இருக்கிறார்.

இப்பின்னணியில்தான் இடைக்கால நிர்வாகசபையை ரணில் சாத்தியப்படுத்தத் தவறுவாரேயானால் சமாதானம் தொடரப்படுவதற்கான வாய்ப்புகள் மிக அரிதாகவே இருக்கும்.

ஏனெனில் இம்முறைப்பேச்சு சர்வதேசத்தின் கவனத்தில் நடக்கிறது என்ற நிலைமையே இரண்டுவருட காலமாக சமாதானம் தமிழருக்கான பயனை அறுவடைசெய்யாதபோதும் அது தொடரப்படுவதற்கான ஏதுநிலையை ஏற்படுத்தியது. சமாதானத்தை விடுதலைப்புலிகள் தொடருவதற்கான எதிர்நிலைமைகள் கூர்மையுறாதவாறு ஆக்கியதே இது சர்வதேச கவனம் பெற்ற சமாதானம் என்பதுதான். விடுதலைப்புலிகள் தமக்கான எதிர்நிலைமைகளை முகம்கொடுக்க பயன்படுத்தக்கூடிய ஆயுதமும் இதுவேதான்.

சிங்களப் பிரதேசத்தில் இதுவரை பேணப்பட்ட நிலைமைகளிலிருந்து சமாதானத்தில் ரணில் முன்னோக்கிப் பயணிப்பதற்கு இருக்கின்ற எதிர்நிலைமைகள் போன்றே தமிழர் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் பின்னோக்கிப்பயணிப்பதான எதிர்நிலைமைகளும் இருக்குமென்பதை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

சமாதானத்திற்காக ரணிலைப் பாதுகாக்கும் நிர்ப்பந்தம் எந்த நாட்டிற்காவது இருக்கிறதென்றால் சமாதானத்திற்காக புலிகளைப் பாதுகாக்கவேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கின்றதென்பதை உணர்ந்து கொள்ளவேண்டிய இறுதித்தருணம் வந்து கொண்டிருக்கின்றது.

ஏனெனில், இடைக்கால நிர்வாகசபை ஒன்றைக் கொண்டுவருவதற்கான சூழல் வாய்த்திருந்தும் ரணில் அதை சாத்தியப்படுத்தத் தவறினால் புலிகள் சமாதானத்தைத் தொடர்வதிலோ அல்லது மேலும் படியிறங்குவதிலோ எதிர்நிலைமைகளுக்கு முகம்கொடுக்கமுடியாது போகலாம். எதிர்நிலைமைகளை சர்வதேச சக்திமிக்கநாடுகளின் புலிகள் மீதான தடை மேலும் வலுப்படுத்தியிருக்கும்.

அந்நிலையில் புலிகளுக்கு, சமாதானத்தில் அக்கறையற்றிருக்கும் சர்வதேச நாடுகளுக்கு பொறுப்புச் சொல்லவேண்டிய தர்மீகக்கடப்பாடு இருப்பதை விடவும், தாம் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கும் விடுதலைக்காகப் போராடும் தம் மக்களுக்கு பொறுப்புச்சொல்லவேண்டிய கடப்பாடே மேலோங்கியிருக்கும்.

ஓகோ! அப்படியா!

பாராளுமன்றில் டிரோன் பெர்னாண்டோ

ரணிலின் இந்திய விஜயம் இலங்கையின் வெளியுறவு பொருளாதார மற்றும் தேசிய பாதுகாப்பு விடயங்களில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது.

ஓகோ! அப்படியா!

செய்தியாளரிடம் சம்பிக்க

சிகல உறுமய என்ற கட்சி இருக்கின்ற வரையும் இடைக்கால நிர்வாகம் ஒன்றினை அமைக்கவிடமாட்டோம்.

ஓகோ! அப்படியா!

சு.க. ஊர்வலத்தில் கதிர்காமர்

பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த பலமான நாடுகளின் ஆதரவு தேவை.

ஓகோ! அப்படியா!

யாழ்.போ.நி. க.குழு அலுவலகசெய்தியாளர் மாநாட்டில் மேஜர் ஜெனரல்சரத்பொன்சேகா.

படையினருக்கும் நிமலராஜன் கொலைக்கும் தொடர்பில்லை, இது அரசியல் சதி. யாழ்.போ.நி. க.குழு அலுவலக

ஓகோ! அப்படியா!

தொலைக்காட்சிப் பேட்டியில் திலக்மாரப்பன

முன்னர் கடனுக்கு வாங்கிய ஆயுதங்களுக்கான பணத்தைச் செலுத்தவே வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவீனம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஓகோ! அப்படியா!

இந்திய தென் பிராந்திய இராணுவத் தளபதி சிஹோதா

இலங்கையின் பாதுகாப்பு விடயத்தில் இந்தியா அக்கறையுடன் இருக்கிறது. எதிர்காலத்தில் இலங்கையின் கோரிக்கைகள் குறித்து கவனம் செலுத்தும்.

நறுக்கென...

சந்திரிகா நினைப்பதும், நடப்பதும்...

'நினைத்தது ஒண்ணு நடந்தது ஒண்ணு
அதனாலே முழிக்குதே அம்மாப்பொண்ணு' - இது அந்தக்கால சினிமாப்பாடல் ஒன்றின் முதல்வரிகள்.

இந்தக்காலத்தில் சந்திரிகா அம்மையாரின் நிலைக்கு வெகு பொருத்தமாகவே இருக்கிறது இந்தப் பாடல் வரிகள்.

சந்திரிகாவுக்கும் ரணிலுக்குமிடையேயான அதிகார அரசியல் போட்டியில், ரணிலை ஏதாவது ஒரு வியூகத்துள் சிக்கவைத்து நெருக்கடிக்குள்ளாக்க, அம்மணி மேற்கொள்ளும் ஒவ்வொரு நகர்வும் ஏதோ ஒருவகையில் அவருக்கு நினைத்த அல்லது எதிர்பார்த்த வெற்றிகளை தராததால் சினமும், விரக்தியும், சீற்றமும் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

திருகோணமலை பாதுகாப்பு விவகாரத்தை குரங்குபாஞ்சான் விடுதலைப்புலிகள் முகாமை மையப்படுத்தி கதிர்காமத்தாரை கருவியாக்கி பெரிதுபடுத்தி, இந்தியாவை சீற்றம்கொள்ள வைத்து அரசுக்கு நெருக்கடியை உண்டுபண்ண திட்டமிட்டு செயற்பட்டார். ரணில் அதனை இந்தியவெளியுறவு அமைச்சர் யஷ்வந்த்சின்ஹாவை வைத்தே முறியடித்துவிட்டார்.

இந்திய எண்ணைக் குதங்களுக்கு திருகோணமலையில் எந்த விதமான ஆபத்துமில்லை என யஷ்வந்த் சின்ஹா கூறியது கதிர்காமரின் தந்திரம் சறுக்கிவிடக் காரணமாயிற்று.

அதற்கு முன்னர் ஜே.வி.பியுடன் கூட்டணி சேர்ந்து ரணிலை மிரட்ட மேற்கொண்ட முயற்சிகள் பதவிப்பேரம்பேசலில் ஏற்பட்ட இணக்கமின்மை காரணமாக தோல்வியடைந்தது.

அவரது அருமைத்தம்பியே - அதுதான் அந்தக் கோமாளி இளவரசர் அநுராவே- சனாதிபதி நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சிமுறையை ரத்துச் செய்து பதவி விலகவேண்டும் என்று கடைசியாக தெரிவித்தது அடுத்த அடியாயிற்று.

தனக்கு கடைசிவரையும் சனாதிபதிக் கதிரை கிடைக்காது என்ற நம்பிக்கை ஏற்பட்டதும் அநுரா புலம்பிய புலம்பலின் தொனியே அப்படி வெளியாயிற்று.

இந்தவார முற்பகுதியில் நோர்வே அரசிடம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவரை பதவிநீக்குமாறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து கோரிக்கை விடுத்திருந்தார் 'விடுதலைப்புலிகளின் ஆயுதக்கப்பல்' என்ற அவரது பூச்சாண்டிக்குள் ரெலிவ்சனை இணைக்க முற்பட்டுள்ளார். இது அவரது இயலாமையின் இன்னொரு பக்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

கடைசியாக கடந்தவார இறுதியில் பொ.ஐ.முன்னணி கொழும்பில் தீபாவளி நாளில் மேற் கொண்ட சமாதானத்திற்கெதிரான பேரணிக்கு 10லட்சம் பேரை சேர்த்து பிரமிக்கவைக்க நினைத்தார். ஆனால் அதில் ஒருலட்சம்பேர் கூட இணையவில்லை. ஏன் அவரே கூட அதில் கலந்து கொள்ளவில்லை. இது அவருக்குக் கிடைத்த மாபெரும் ஏமாற்றம்.

இதன்மூலம் அவரது கூட்டணி புத்திரசிகாமணியையும் இழந்துவிட்டநிலையில் நினைத்தது ஒண்ணு, நடந்தது ஒண்ணு.
அதனாலே முழிக்குதே அம்மாப் பொண்ணு.....

ஒப்பந்தம்; பேரினவாதிகளும் சிறிலங்காவும்...

கடைசியில் எப்படியோ ஒரு விடயத்திலாவது பொது சன ஐக்கிய முன்னணியின் ஆதரவை ரணில் அரசு பெற்றுக் கொண்டுவிட்டது.

இந்தியாவுடன் ரணில் மேற்கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்திற்குத் தான் இந்த ஆதரவு கிடைத்திருக்கிறது. இந்த நிலையில் 1987 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இந்தியாவுடன் மேற்கொண்ட உடன்படிக்கை நினைவுக்குவரவே செய்கிறது. அதுவும் கூட ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையேதான். இனவிவகாரத்திற்கான தீர்வின் ஒரு கட்டம் அந்த ஒப்பந்தம் என்று கூறப்பட்டாலும் கூட அது இந்தியாவின் அரசியல் மற்றும் இராணுவ அபிலாஷைகளை மையமாகக்கொண்டே அது உருவாக்கப்பட்டது.

ஜே.ஆருக்கு ராஜீவ் ஒரு "பொறிவலை"யை விரிக்கத்திட்டமிட அதே வலைக்குள் ராஜீவை விழவைத்த ராஜதந்திர வெற்றியை ஜே.ஆர் தனக்குரியதாக்கிக்கொண்டார்.

ஜே.ஆரின் நரித்தனத்தை புரிந்துகொள்ளாத சிறிலங்கா சுதந்திரக்கட்சி (இப்போதைய பொ.ஐ.முன்னணியின் பிரதான கட்சி) அப்போது அந்த உடன்பாட்டை தமிழ்மக்களுக்கு சார்பான உடன்பாடெனக் கற்பிதம் செய்துகொண்டு எதிர்த்தது. ஜே.வி.பியும் கூட அப்போது அதனை தீவிரமாக எதிர்த்துக் கிளர்ச்சி செய்தது நினைவிருக்கலாம்.

இப்போது சரித்திரம் மாறியுள்ளது.

ஐதே முன்னணியின் இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்படிக்கையை பொதுஜன ஐக்கிய முன்னணி மட்டுமல்ல ஜேவிபியும் வரவேற்றுள்ளதுதான் முக்கிய விடயமாகும்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழ்மக்களுக்கு நியாயமான ஒரு அரசியல் தீர்வு ஏற்படக்கூடாது என்பதற்காக சிறிலங்காவையே ஆதிக்கசக்திகளின் அபிலாஷைகளுக்கேற்ப, அரங்கம் செய்யவே அனைத்து பேரினவாத கட்சிகளும் ஒற்றுமையுடன் செயற்படுகின்றன என்பது தெளிவாகின்றதல்லவா?

பாதுகாப்பு ஒப்பந்தம் என்றபெயரில் யாரிடம் இருந்து யாரை, அல்லது எந்த நாட்டினரிடமிருந்து சிறிலங்காவைப் பாதுகாக்கப் போகிறார்களாம்?

இந்தக் கேள்விக்கு எந்த பேரினவாதக்கட்சியும், எந்தபேரத்தமடபீடமும் தெளிவான பதிலைக் கூறமுடியவில்லை.

நாடு ஆதிக்க சக்திகளுக்கு அடைவு வைக்கப்பட்டாலும் தமிழர்களுக்கு உரிமைகள் எதுவும் கிடைத்துவிடக்கூடாது என்பதே தென்னிலங்கை பேரினவாதிகளின் சித்தாந்தம் எனில்.....

பாவம் சிறிலங்கா என்று கூறி நமோ நமோ மாதாவை பாடுவதைவிட வேறுஎன்ன செய்ய முடியும்?

தமிழ்நாடு; தடாவும் பொடாவும்...



என்ன இழவடா எதைச்சொன்னாலும் "தடா"- ஒரு ஏழரைநாட்டுச்சனியன் வந்து ஆட்டிப் படைக்குதடா..... இப்படி

ஒருபாட்டு தமிழ் நாட்டில் "தடா" என்ற பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருந்தபோது - அதாவது 1990 களின்போது - தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியினரால் பாடப்பட்டது.

இன்று ''தடா'' ''பொடா''வாகிவிட்டது. அவ்வளவுதான்.

மோதகம், கொழுக்கட்டையாகிவிட்டது. பெயர் தான் மாறியதேயன்றில் "உள்ளுடன்" ஒன்றேதான்.

அன்று "தடா"வில் கைதானோரின் வழக்குகள் பல இன்னமும் விசாரணைக்கு எடுக்கப் படாது இழுபறி நிலையிலேயே உள்ளன. இன்று "பொடா"வில் கைதானோர் நிலையும் அப்படித்தான்.

வை.கோ., நெடுமாறன், சுப.வீரபாண்டியன் போன்றோர்க்கே இந்த அவலம் என்றால், பொடாவில் கைதான சாதாரண மக்களின் நிலை எப்படி இருக்கும் என யோசித்துப் பாருங்கள்!

இது பாருக்குள்ளே நல்ல நாடு என்று பாரதி பாடிய நாட்டின் நிலைமை தெளிவாக எடுத்துக்காட்டுகிறதல்லவா?

"தடா"வோ "பொடா"வோ எதுவானாலும் அரசியல் பழிவாங்கல்களுக்கே தமிழக அரசால் இந்தச்சட்டம் வெளிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றதென்பதே உண்மை!

"பொடா"சட்டம், சட்டம் ஏற்கனவே பொதுமக்களுக்கு வழங்கியுள்ள அரசியல் மற்றும் மனித உரிமைகள் அனைத்தையும் அபகரித்துவிட்டுள்ள நிலையில் ஜனநாயகம் தமிழகத்தில் கேலிக்குரியதாகி விட்டுள்ளது.

என்னதான் மனித உரிமைகள் குழுக்கள் கத்தினாலும் கண்டித்தாலும் தமிழக ஆளும் கட்சியின் சர்வாதிகார அரசியலில் அது எடுபடுவதாக இல்லை.

பொடா சட்டம் தவறாக பயன்படுத்தப்படுகிறதா என்பது பற்றி ஆராய விசாரணை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளனவாம். இந்தக் குழுக்களின் விசாரணை முடிய பொடாவில் உள்ள பலரின் வாழ்க்கையே முடிந்துவிடும் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

- பத்திரிகையில் வெளியான நகைச்சுவை துணுக்கு ஒன்று இதுவாகும்.

ஒருவர் : நீ ஏன் பொடாவில் கைதுசெய்யப்பட்டாய்

மற்றவர் : கெட்டிக்காரனான என் மகனை நீ கணக்கில் புலி என்றேன் நீ புலியின் தந்தை என்று கைது செய்து பொடாவில் போட்டுவிட்டார்கள்...அதுசரி நீ ஏன் "பொடாவில் கைதானாய்.....?

ஒருவர் : புண்ணியமூர்த்தி லிங்கராஜா என்ற என்பெயரை சுருக்கமாக "புலி" என்று எழுதினேன்.... அவ்வளவுதான்.

இந்தியா; உள்நோக்கமும் மீளாய்வும்...!

மீண்டும் புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்கமாட்டார்கள் என்று இந்தியா நம்புவதாக ரணில் கூறியுள்ளார்.

நல்லது; சந்தோஷம்; அப்படியானால் ரணில் தமிழ்மக்களுக்கு அவர்களின் அபிலாஷைகளை பூரணமாக நிறைவேற்றக்கூடிய நிரந்தரமான, நீதியான அரசியல் தீர்வொன்றை வழங்குவார் என்றும் இந்தியா நம்பியிருக்கவேண்டும். இல்லையேல் அந்த நம்பிக்கை அர்த்த பூர்வமானதாக இருக்காது.

விடுதலைப்புலிகள் ஒருபோதுமே தன்னிச்சையாக எந்தவொரு யுத்தத்தையும் ஆரம்பித்ததில்லை. அவர்கள் எப்போதுமே சிங்கள அரசுகளின் இராணுவரீதியிலான தமிழ்மக்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளின் அழுத்தம் காரணமாகவே போர்புரியும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதே உண்மை.

ஆனால் அவர்கள் எப்போதுமே சமாதானத்திற்கு சமிக்ஞை காட்டும் போர் நிறுத்தத்தை தன்னிச்சையாக நல்லெண்ணத்துடன் அறிவித்த வரலாறு இருக்கிறது.

தற்போதைய சமாதான முன்னெடுப்பும் இப்படியானதொன்றைத் தொடர்ந்தே உருவானதாகும்.

ஆகவே யுத்தம் என்பது விடுதலைப்புலிகள் மீது, அதாவது தமிழ்மக்கள் மீது வேண்டுமென்றே ஒவ்வொரு கால கட்டத்திலும் திணிக்கப்பட்டு வந்துள்ளது என்பதே உண்மை.

தற்பாதுகாப்புக்காகவே தமிழ் மக்கள் முதலில் ஆயுதம் ஏந்தினார்கள். இதுவும் இந்தியாவுக்குத் தெரியும் .

அதனால் தான் விடுதலைப்புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க மாட்டார்கள் என இந்தியா நம்புகிறது.

எனினும் யுத்தம் ஒன்றை அரசு மேற்கொண்டால் அதனை யுத்தத்தின் மூலம் எதிர்கொள்ளவும் புலிகளோ தமிழ்மக்களோ தயங்கமாட்டார்கள் என்பதையும் இந்தியா அனுபவ பூர்வமாக உணர்ந்தேயுள்ளது.

எனவே மறுவழியில் பார்த்தால் சிறிலங்கா அரசு யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்காது என்று இந்தியா நம்புவதாக கருதலாமல்லவா.

இன்னொருவிடயம், இந்தியா சமாதான முயற்சிகளில் சம்பந்தப்படுவது குறித்து ஆலோசித்து வருவதாக டிரோன் பேர்னாண்டோ கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தை முயற்சிகளின் ஆரம்பத்தின்போதே இந்தியாவின் ஆதரவையும் அனுசரணையையும் விடுதலைப்புலிகள் கோரினர் என்பதையும் அதனை இந்தியா நிராகரித்தது என்பதையும் இச்சமயத்தில் நினைவுகூர்வது அவசியம்.

இந்தியாவின் இந்த ஆலோசனை காலங்கடந்த ஞானோதயத்தின் பிரதிபலிப்பேயாகும்.

இப்போதும் கூட இந்தியா தனது புவிசார் அரசியல் இராணுவ அபிலாஷைகளின் அடிப்படையிலேயே இதுபற்றி ஆலோசிக்க முனைகின்றது என்பது தான் உண்மை..... அந்த உள்நோக்கத்தை உணரவேண்டிய அனைவரும் உணர்ந்தால் சரி.

—செஞ்சுடரவன்—

☞ நம் நாகரிகத்தின் தனித்தன்மையை போற்றிப்பாதுகாப்பதே, என் சுய ராஜ்ஜியம். – மகாத்மா காந்தி

எல்லாம் விரைவில் தெரிந்துவிடும்



இருபது வருடங்களாக துப்பாக்கிகள் பேசிய மண்ணிலிருந்து சிறிலங்கா அரசிடம் தமிழ் மக்களின் அபிலாசைகள் அடங்கிய புலிகளின் இடைக்காலத் திட்டவரைவு இன்று சிறிலங்கா அரசிடம் நோர்வே தூதுவர் ஹான்ஸ்பிறிட்சர் ஊடாகக் கையளிக்கப்படவுள்ளது.

இது இலங்கையில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினையின் வரலாற்றில் பாரிய விளைவை ஏற்படுத்தப்போகும் நிகழ்வாக அமையப்போகிறது.

தமிழர்களுக்கு எந்த நீதியான தீர்வையும் ஆளும் சிறிலங்கா அரசுகள் வழங்கப்போவதில்லை என வரலாற்றில் பட்டறிந்த பாடங்களிலிருந்து புலிகள் தமிழீழத் தனியரசிற்கான போராட்டத்தை ஆரம்பித்து இருபத்தைந்து வருடங்களிற்கு மேல் கடந்துவிட்ட காலத்தின் பிரசவிப்பாக இந்த இடைக்காலத்திட்ட வரைவு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதில் தனித்து தமிழீழ தனியரசிற்கு மாற்றீடாகப்புலிகள் முன்வைக்கும் முதல் மாற்று அரசியல் தீர்வு என மட்டும் வரையறுத்துவிட முடியாது.

ஏனென்றால், தமிழ் மக்கள் ஐந்து தசாப்தத்திற்கு மேல் தங்கள் முதுகில் சுமந்த இனவாத வடுக்களின் வேதனையாகவும் துயரங்களின் வடிவமாகவுமே இதனை பார்க்கப்படவேண்டும்.

இந்த நிலையில், தென்னிலங்கையில் இருவேறு கட்சிகளின் ஆட்சிஅதிகாரமையங்களின் முரண்பட்ட அதிகார போட்டி நிலவுகின்ற சூழ்நிலையில், இவ்விடைக்கால திட்ட வரைவு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த வகையில் பார்க்கையில் புலிகளின் இடைக்கால திட்டவரைவானது பிராந்திய மற்றும் சர்வதேச சமூகத்தினது பல்வேறு எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இது இன்று சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த இடைக்காலத் திட்டவரைவினை புலிகள் சமர்ப்பிப்பதற்கு முன்னர் இது தொடர்பாக பிராந்திய வல்லரசாகிய இந்தியா, இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியாவுக்குச் சென்ற வேளை சில கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

அதாவது, புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால திட்டவரைவானது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு காணப்போகும் இறுதித் தீர்வின் ஒரு அங்கமாகவும் இருக்கவேண்டும் எனத்தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அண்மையில் புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்காலத்திட்ட வரைவு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால திட்டவரைவானது நடைமுறை சாத்தியமானதாகவும் யதார்த்தமானதாகவும் இருக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இங்கே நாம் கவனிக்கவேண்டியது யாதெனில், தற்போது நடைமுறைச்சாத்தியமானதாகவும் இருக்கவேண்டும். அதேவேளை, பிராந்திய வல்லரசு என்ற வகையில் இந்தியா தெரிவித்திருப்பது போல இறுதித் தீர்வின் ஒரு அங்கமாகவும் இருக்கவேண்டும்.

இப்படியென்றால், இன்று புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால திட்ட வரைவானது எத்தனை தரப்புக்களைத் திருப்திப்படுத்துவதாக அமையவேண்டுமென்ற சூழ்நிலை இருப்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த நிலையில் புலிகள் தரப்பானது இந்தியா தெரிவித்திருப்பது போல இந்த இடைக்கால திட்ட வரைபினை இறுதித் தீர்வின் ஓர் அங்கமாகவும் இது அமையக் கூடியதாகவே தயாரித்திருப்பதாக வெளியாகும்தகவல்களிலிருந்து

சிறி. இந்திரகுமார்

ஊகிக்கமுடிகிறது.

அப்படியானால் புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால திட்ட வரைவானது இறுதித்தீர்வில் உள்ளடக்கக்கூடியதாக அமையுமாயின் அது பல்வேறு எதிர்பார்ப்புக்களைக் கொண்டதாகவே அமையும்.

அத்தோடு அது பல இறுக்கமான கோரிக்கைகளைக் கொண்டதாகவே அமையவுள்ளது.

இந்த நிலையில் இந்த இடைக்கால திட்ட வரைவினை சிங்கள தேசம் எவ்வாறு கையாளப் போகிறதென்பதில் தான் இலங்கையின் எதிர்கால அமைதி தங்கியிருக்கிறது.

ஏனென்றால் இந்த இடைக்கால திட்ட வரைவினை தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தமது கட்சி அரசியல் இலாப நட்டக்கணக்கின் ஊடாகவே கடை போட்டு வியாபாரம் செய்யப்போகின்றன.

இந்த நிலையில், புலிகளால் இன்று சமர்ப்பிக்கப்படும் இடைக்காலத்திட்ட வரைவானது நாளை ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தப்படவுள்ளதாக புலிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தென்னிலங்கையில் இது மிக வேகமாக சூடுபிடிக்கத் தொடங்கிவிடும். இதன் வெளிப்பாடாக புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால திட்ட வரைவு பல்வேறு வடிவங்களில் பல்வேறு கோணங்களில் சிங்கள மக்களிடம் எதிர்க்கட்சிகளால் காவிச் செல்லப்படும்.

இந்நிலையில், நிச்சயம் இந்த விடயம் எதிர்வரும் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது மட்டுமல்லாது இனி இலங்கையின் எதிர்கால வரலாற்றிலும் தாக்கம் செலுத்தவல்லதாக இருக்கப்போகிறது. ஆனால், நிச்சயம் புலிகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே தயாரித்துள்ள இந்த இடைக்கால திட்ட வரைவு தமிழ் மக்களின் விடுதலைப் போரிற்கான சிங்கள தேசத்தின் பதிலை தெளிவாகவே வெளிக்கொண்டுவரப்போகிறது.

இந்த வகையில் இலங்கையில் மீண்டும் யுத்தம் தவிர்க்கப்படவேண்டுமானால் இன்றைய ஐக்கிய தேசியமுன்னணி அரசும் நிறைவேற்று அதிகாரத்தைக்கொண்ட சனாதிபதி சந்திரிகாவும் ஒருமைப்பாட்டுக்கு வருவதன் மூலம் புலிகளால் சமர்ப்பிக்கப்படும் இடைக்கால திட்டவரைபூடாக ஒரு தீர்வுக்கு வருவதன் மூலம் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முடியும். ஆனால் இந்த விவகாரத்தை நிச்சயம் பிரதமர் ரணிலும் சனாதிபதி சந்திரிகாவும் வெவ்வேறான நிலைகளிலிருந்தே நோக்குவார்கள் என்பது நிச்சயம்.

ஆனால் தமிழர் தரப்போ ஒரு நிலையில் இருந்தே சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளை எதிர்கொள்ளப்போகிறது. இந்த நிலையில் இலங்கையின் அமைதியாருடைய கைகளில் உள்ளது என்பது தெளிவாகவே புலப்படுகிறது.

இந்த இடைக்காலத்திட்ட வரைபினை எத்தரப்பும் இனி யாதார்த்தத்தோடு பொருத்திப்பார்த்துத் தமதுஎதிர்வு கூறல்கள் எதனையும் மாறாக் வியாக்கியானப்படுத்த முடியாது.

ஏனென்றால் இது தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் நீண்ட கொடிய யுத்தங்களின் அனுபவங்களைக்கொண்டும் சர்வதேச சமூகத்தின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தும் முன்வைக்கப்படும் ஒரு சனநாயகத்தீர்வுத்திட்டம்.

இதுவே தமிழ் மக்களுக்கு இலங்கைத்தீவில் உள்ள சம அதிகார அந்தஸ்த்தை உறுதிப்படுத்தக் கூடியது.

ஆகவே தீர்வு எது என்பதை யார் எப்படித்தீர்மானிக்கவேண்டும் என்பதை காலம் விரைவாகவே விளக்கிவிடும்.

இதுவரையும் ரணிலை பாதுகாப்பதற்காக அழுத்தங்களைப் பிரயோகித்த சர்வதேச சமூகம் தமிழ் மக்களிற்கான தீர்வாக எதனை சிங்களதேசம் சமர்ப்பிக்கப்போகிறது எனக்கேட்கும் படியாக புலிகள் இந்த மூன்று வருடகால அரசியல் நகர்வில் நிலைமையைத் திருப்பிவிட்டுள்ளனர்.

இந்தவகையில், சிங்கள தேசமும் சர்வதேசமும் கழுவுகின்ற மீனில் நழுவுகின்ற மீனாக இருக்கும் நிலமை அவர்களின் கைநழுவிப்போய்விட்டது என்பது மெய்யாகும்..

மதவடி மயிலர்

செய்தி:- இலங்கையின் இறைமையைப்பாதுகாக்க இந்தியாவால் மட்டுமே முடியும் என்கிறார் அமைச்சர் பீரிஸ்.

மயிலர்:- இலங்கையில் இறைமையைப்பாதுகாக்கவே இந்தியாவை நம்பும் பீரிஸ். தமிழ் மக்களின் இறைமை.. மற்றும் உரிமைக்கு எப்படி உத்தரவாதம் தரப்போகிறாராம்.

செய்தி:- சனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தும் காலம் அண்மித்துவிட்டது என்கிறார் மகிந்தராஜபக்ச.

மயிலர்:- சனாதிபதிக்கும் ஆட்சிக்காலம் அண்மித்துக் கொண்டுதானே வருகிறது... அதற்குள்ளை தன்ர அதிகாரத்தைக் காட்டுனாச்சாரி.. இல்லாட்டி அதால பயன் இல்லைப்பாருங்கோ... அதுசரி அதிகாரத்தைப்பயன்படுத்தி ஆட்சியைக் கலைக்கலாம்... அவ்வளவுதானே... சனாதிபதியின் கையில் உள்ள அதிகாரம் குரங்கின் கை பூமாலை தான் பாருங்கோ....

செய்தி:- கண்காணிப்புக்குழுவை நாட்டை விட்டு வெளியேறுமாறு சிங்களவர் ஆர்பாட்டம்...

மயிலர்:- கண்காணிப்புக்குழு இல்லாட்டி கண்மூடித்தனமாக என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைக்கினம் போல... கண்கெட்ட வேலைகள் செய்தவை எல்லாம் எப்படிக்கண்ணை மூடிக்கொண்டு கண்டகண்ட திசையெல்லாம் துண்டைக் காணோம் துணியைக்காணோம் என்று ஓடின கதைகள் தெரியும் தானே....

செய்தி:- இலங்கை விவகாரத்தில் விலகி நிற்கும் போக்கை கைவிடுகிறது இந்தியா.

மயிலர்:- இந்தியா விலகினால் அமெரிக்கா ஒட்டும். அமெரிக்கா ஒட்டினா இந்தியா வெட்டும். எப்படியோ எல்லாரிடமும் குட்டுப்படுறது சிறிலங்காதான் பாருங்கோ.. எல்லாருமாகச்சேர்ந்து இலங்கை விவகாரத்தை விகாரமாக்கிக்கொண்டு போகினம் போல கிடக்குது.

செய்தி:- அரசைக்கவிழ்க்கும் முயற்சி பற்றி சுதந்திரக்கட்சி ஜே.வி.பி ஆராய்வு.

மயிலர்:- கவிழ்கிறது, குலைக்கிறது, குழப்புகிறது என்றால் இரண்டு கும்பலுக்கும் குதூகலம்தான் பாருங்கோ.... சமாதானத்திற்கு யுத்தம்செய்யவேண்டும் என்கிற கும்பலும் யுத்தத்திற்காக சமாதானத்தை நிறுத்து என்கிற கும்பலும் கூட்டுச்சேர்ந்தால் என்ன நடக்கும் சொல்லுங்கோ..? குட்டையைக்குழப்பி சேறாக்கினால் எருமைகளுக்கு கொண்டாட்டம் தானே...!

செய்தி:- பிரதமர் அடுத்தவாரம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வார்.

மயிலர்:- போனவாரம் இந்தியாவுக்கு போனார். அடுத்த வாரம் அமெரிக்காவுக்கு போகப் போகிறார்... இங்கே ஒரு ஒப்பந்தம் அங்கே ஒரு உடன்பாடு... இங்கே ஒரு விளக்கம்... அங்கே ஒரு விளக்கம்... பாவம் ரணில்.. . இரண்டு பெண்டாட்டிக்காரன் நிலைதான் பாருங்கோ.

நேர்நேர்கண்ட

மக்களை விரக்திக்குள் தள்ளும் நடவடிக்கை

யாழ். பருத்தித்துறை முனைப்பகுதியில் அப்பாவிக் கடற்தொழிலாளி ஒருவர் தேவையற்ற விதத்தில் சிறிலங்காப்படையினரால் தாக்கப்பட்டதும் அதனையடுத்து ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் ஆண், பெண் வேறுபாடின்றித் தாக்கப்பட்டதும் கடற்தொழிலாளர்களின் பெறுமதி வாய்ந்த படகுகளும் கடற்தொழில் உபகரணங்களும் சேதமாக்கப்பட்டு அழிக்கப்பட்டதும், கடற்தொழிலாளர்கள் மத்தியில் பெரும் சீற்றத்தை உருவாக்கியுள்ளது.

இதன் எதிரொலியாக அம்மக்கள் ஆர்ப்பாட்டங்களையும் பேரணியையும் நடத்தியுள்ளனர். இதன்போது தாம் படையினருடன் முரண்படுவதற்கான முக்கியகாரணமொன்றை வெளிப்படுத்தியிருக்கின்றனர். அதாவது கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு தற்போது நடைமுறையிலுள்ள அனுமதி வழங்கும் முறை காரணமாகவே, தாம் படையினருடன் அடிக்கடி முரண்பட்டுக்கொள்ளவேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர் எனவே இந்த நடைமுறையை நீக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தமானது யுத்தநிறுத்தத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல என்பதும் இவ் ஒப்பந்தத்தில் மக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறாக இருக்கும் அனைத்துத்தடைகளும் நீக்கப்படவேண்டும் என வலி யுறுத்தப்பட்டிருப்பதும். வெளிப்படையானதாகும். இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு 18 மாதகாலப்பகுதியில் இவ்விடயம் பலதரப்பாலும் சுட்டிக்காட்டப்பட்டும் வந்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி போர்நிறுத்தம் என்பதை புலிகள் எத்தனையோ சீண்டல்களின் மத்தியிலும் மிகவும் பொறுமையுடனும், நிதானத்துடனும், பொறுப்புடனும் கடைப்பிடித்து வருகின்றனர். சாதாரண படைச்சிப்பாய் முதல் முப்படைகளினதும் தளபதியான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவரை எத்தனையோ தடவைகள் போர் நிறுத்த உடன்பாட்டை மீறியுள்ளபோதும் அவர்கள் பொறுமை காத்துவருகின்றனர்.

ஆனால் இதற்கு நேர்எதிர்மாறாக புலிகள் மீது அபாண்டமான யுத்த நிறுத்தமீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதும் அப்பட்டமாக யுத்தநிறுத்த மீறல்களை புரிவதும் குறிப்பாக புலிகளைச் சீண்டும் வகையில் இவற்றை மேற்கொள்வதும் எதிர்தரப்பின் செயற்பாடாக இருந்துவருகின்றது.

இப்பொழுது மக்களுக்கும் பல இடையூறுகளை விளைவித்து மக்களைச் சீண்டும் நடவடிக்கைகளைப் படைத்தரப்பு மேற்கொண்டு வருகின்றது. ஒரு மாதகால அவகாசத்திலிருந்து ஆறுமாத காலத்திற்குள் படைத்தரப்பு நிறைவேற்றவேண்டிய பல ஒப்பந்த நிபந்தனைகளை இன்னமும் கூட நிறைவேற்றவில்லை. இன்னமும் கூட பலபாடசாலைகள், பொதுக்கட்டடங்கள், ஆலயங்கள் மக்கள் குடியிருப்புகளில் படையினர் நிலைகொண்டுள்ளனர். உதாரணமாக மட்டக்களப்பு மாநகர சபைக்கட்டடம் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமையாத போதும் அங்கிருந்து படையினர் வெளியேறாது இருந்து வருகின்றனர்.

அத்துடன் வெளியேறிய படையினர் தாம் நிலை கொண்டிருந்த இடத்தில் இருந்து சற்று நகர்ந்து உட்கார்ந்து கொண்டு முன்னரைவிடப்பாரிய இடையூறுகளை விளைவித்து வருகின்றனர். உதாரணமாக அல்லைப்பிட்டிப் பாடசாலையில் நடைபெற்ற சம்பவங்களைச் சுட்டிக்காட்டலாம்.

மூன்றாவதாக உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வடக்கு-கிழக்கின் ஒவ்வொருமாவட்டத்திலும் பாரியபிரதேசங்கள் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கின்றன.

அதுபோலவே கடற்தொழிலுக்கு சிறிலங்காப் படைத்தரப்பு கொடுக்கும் இடையூறு கொஞ்சநஞ்சமல்ல. முதலில் கடற்தொழிலுக்கே பல இடங்கள் தடைச்செய்யப்பட்ட பிரதேசங்களாக உள்ளன. அத்துடன் கடல் தொழிலுக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களிலும் நேரக்கட்டுப்பாடு, அனுமதி நடைமுறை, பாவிக்கும் படகுகளுக்கு கட்டுப்பாடு, வெளியிணைப்பு இயந்திரங் களுக்குத் தடைஎன பட்டியல்நீண்டு கொண்டே செல்கின்றன. இதிலேயுள்ள முக்கியவிடயம் என்ன வென்றால் இத்தகைய அனுமதிகள் அல்லது இப்பொழுது நடைமுறை யிலுள்ள தளர்ச்சிகள் கூட ஒப்பந்த நடைமுறைக்கு வந்ததும் படையினர் பெருந்தன்மையுடன் அமுல்படுத் திய வையல்ல. தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள் முதல் உபகுழுக்கள், உள்ளூர் மட்டச்சந்திப்புக்கள் என பல சந்தர்ப்பங்களின்போதும் வலியுறுத்தப்பட்டு படையினர் வேண்டாவெறுப்புடன் இணங்கிக்கொண்டவையே. பல விடயங்களில் தளர்வுகளை மக்கள் போராட்டம் நடத்தியே பெற்றுக்கொண்டனர்.

எனவே இணங்கிக்கொண்டவற்றை நடை முறைப் படுத்துவதில் படைத்தரப்பு முழுமனத்துடன் ஈடுபடுவதில்லை. எங்கே சிறியதொரு சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அதனைப் பயன்படுத்தி கடற்தொழிலுக்கு தடைகளை விதிப்பதிலேயே கண்ணும் கருத்துமாகவுள்ளது. இதனை படையிலுள்ளோரின் தனிநபர் விருப்புவெறுப்புக்கு ஏற்பவும் நடைமுறைப் படுத்துகிறது. படை அதிகாரி முதல் சிப்பாய்வரை அன்றுள்ள மனநிலையின் அடிப்படையில் கூடகடற்தொழிலுக்கு அனுமதி வழங்ககூடிய அதிகாரத்தை அவர்கள் கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை மக்கள் பெரும் போராட்டத்தை நடத்திப் படைத்தலைமையை இணங்கவைத்த விடயங்களுக்கு உள்ளூர் படைத்தலைமை முட்டுக்கட்டை போடுகிறது. உதாரணமாக வடமராட்சிக் கடற்கரைகளில் கடல் "வான்" தோண்டுவதற்கு பலாலிப்படை தலைமை இணங்கவைக் கப்பட்டபோதும் அதனை நடைமுறைப்படுத்த பருத்தித்துறை படைத்தலைமை மறுத்து வருகிறது. இதற்கு சூழலிய லாளர்களின் அனுமதியைப்பெற்று வருமாறு நொண்டிக்காரணமொன்றைக்கூறும் அதேவேளை, தமது பாதுகாப்பு நடை முறைகளுக்கு வாய்ப்பான பகுதிகளில் "வான்" தோண்டுமாறு அழுத்தம்போடுகிறது.

இவையெல்லாம் மக்கள் மத்தியில் சமாதான நடவடிக்கைகள் குறித்த விரக்தி நிலையை தோற்றுவிக்கக் கூடியவை என்பது படைத்தரப்புக்கு நன்கு தெரியும். கடந்த 18மாத காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்களை தொகுத்து நோக்கும்போது, அதுவே படைத்தரப்பின் உள்மனவிருப்பம் போலவும் தெரிகிறது.

ஆனால் சமாதானம் குறித்து உலகப் பிரச்சாரம் செய்யும் ரணில் அரசாங்கம் உள்ளூரில் இவற்றையெல்லாம் அதிகாரிகள் மட்டப்பிரச்சினையாகவே கையாண்டுவருகிறது . இந்நிலை தொடருமானால்- முன்னைய "சமாதான முயற்சிகளின்" பாதையிலேயே ரணிலின் சமாதான நடவடிக்கைகளும் செல்லுமானால் முடிவும் அவ்வாறே இருக்கும்.

வேலவன்

நீதி கேட்கும் மன்னார் மக்கள்

மன்னார் உயிலங்குளத்தில் இளம்பெண்ணொருவர் பொலிசாரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதை கண்டித்து எதிர்ப்புப்பேரணி ஒன்று நடைபெற்றுள்ளது.

தமிழ்ப்பெண்கள் மீது பொலிசாரும் படையினருமென பாலியல் வல்லுறவு முயற்சிகளில் ஈடுபடுவதும் அத்தகைய முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் செயற்படுவதும் நீண்டகாலமாக நடைபெற்றுவருகிறது. பொதுமக்களின் வாழ்விடங்களிற்கு அண்மையில் படைமுகாம்களையும் காவல ரண்களையும் அமைத்துக்கொண்டு பெண்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு பெரிதும் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

மன்னார் உயிலங்குளத்தில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட பெண்மீதான பாலியல்வல்லுறவுக்கு முன்னரும் மன்னார் மாவட்டத்தில் இளம்பெண்ணொருவர் மீது மிகக்கொடூரமானமுறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி மிலேச்சத்தனமான முறையில் அப்பெண்ணின் பெண்ணுறுப்பில் கைக்குண்டை வெடிக்கவைத்த கொடூரச்செயல் ஒன்றும் நடைபெற்றிருந்தது.

இதனை விட பல்வேறு பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இந்த பாலியல் வல்லுறவு சம்பவங்களை புரிந்தவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதாகக்கூறிக்கொண்டு, கடமையில் இருக்கும் பொலிசாரும் படையினரும் என்பதே வேதனையான விடயமாகும்.

இந்த நிலையில் இராணுவ கட்டுப்பாட்டுப்பிரதேசத்திற்குள் இத்தகைய கொடூரங்களைப் புரிந்து, அந்த மக்களின் அடிப்படை மனித உரிமைகளையே மீறி வருகின்றனர்.

ஆனால் இந்த மனிதஉரிமைகளைப் பாதுகாப்பதற்கும் கண்காணிப்பதற்குமென உள்ள அமைப்புக்கள் இத்தகைய செயல்களை உரியமுறையில் கண்டித்து நடவடிக்கைகளை எடுத்ததாகவோ அல்லது அவற்றிற்கு எதிராக உரியமுறையில் நீதியினைப் பெற்றுக்கொடுத்தார்கள் என்றதாகவோ இல்லை.

இந்தவகையில் கேட்பார் எவரும் இல்லாத மக்கள் போல தமிழ்ப்பெண்கள் மீதான இத்தகைய கொடிய வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இந்த நிலையில் மன்னார் மக்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும் தமது துயரங்கள் வெளித்தெரியவருவதோடு குற்றமிழைத்தவர்கள் நீதியின் முன் நிறுத்த வேண்டும் எனக்கோரி எதிர்ப்புப்பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள்திரண்டு தமது எதிர்ப்புக்குரலை எழுப்பியுள்ளனர்.

தமிழ்ப்பெண்கள்மீது இனியாவது இத்தகைய கொடூரங்கள் இழைக்கப்படாது பாதுகாக்கப்படும் நிலையை அரச தரப்பு ஏற்படுத்துமா?

அவ்வாறு தமிழ்ப்பெண்கள் பாதுகாக்கப்படவேண்டுமென்றால் உண்மையில் இந்த மக்களின் வாழ்விடங்களில் நிலை கொண்டிருக்கும் படையினரும் பொலிசாரும் அப்புறப்படுத்தப்பட்டால் மாத்திரமே சாத்தியமாகும்.

இல்லையென்றால் இனியும் தமிழ் பெண்கள்மீது இத்தகைய அச்சம் இருந்து கொண்டே இருக்கப்போகிறது.

ஏனெனின் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரதேசங்களில் பொலிசார் மற்றும் படையினரால் தமிழ்ப்பெண்கள்மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவு சம்பவங்களுக்கு நீதிவழங்கப்படாமையே ஆகும்.

அத்தோடு குற்றம் இழைத்தவர்களிற்கு தண்டனை எதுவும் வழங்கப்படாது அவர்

கள் பாதுகாக்கப்பட்டேவருகிறார்கள்.

இது இத்தகைய குற்றங்களை தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுவதை அரசதரப்பு ஊக்குவிக்கவேண்டுமென்ற வகையில் செயற்படுவதையே காட்டுகிறது.

ஏனென்றால் கிருசாந்தி கொலை வழக்கு முதல்சாரதாம்பாள் வரை குற்றம் இழைத்தவர்களில் தண்டிக்கப்பட்டவர்களைவிட தப்பிக்கொண்டவர்களே அதிகம்.

இதுகுற்றவாளிகளின்கைகளில் அதிகாரபலமும் ஆயுதபலமும் இருப்பதேயாகும்.

இப்படியே தமிழ்மக்கள்மீது புரியும் பாலியல்வல்லுறவு சம்பவங்களும் படையினரின் அத்துமீறல்களும் அதிகரித்துச்செல்கிறதே தவிர குறைந்த பாடில்லை.

இந்த நிலையில் யுத்தகாலத்தில் தமிழ் பெண்கள் மீது படையினர்பாலியல் வல்லுறவுகளை மேற்கொண்டு, கொன்று புதைத்து இதுவரை மூடிமறைக்கப்பட்ட சம்பவங்களைப்போல இனி அத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதை அனுமதித்து பார்த்து நிற்கமுடியாது.

இந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புபேரணியைப் போன்று தமிழீழப்பிரதேசத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இத்தகைய எதிர்ப்புப் பேரணிகளை மேற்கொள்வதன்மூலம் படைத்தரப்பினரால் இழைக்கப்படும் அநீதியினை வெளிக்கொணரமுடியும்.

இதன்மூலம் தமிழ்ப்பெண்கள் மீது இழைக்கப்படும் அடாவடித்தனங்களை உலகின் செவிகளுக்கு கொஞ்சமாவது கேட்கச் செய்யமுடியும்.

இதன்மூலமாவது தமிழ்பெண்களுக்கு மறுக்கப்படும் நீதிகிடைக்க வழிவகை பிறக்குமா? எனப் பார்க்கலாம்.

பதிலாக தமிழ்ப் பெண்களின் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் மறுக்கப்பட்ட நீதிக்கும் அரச உரியபலனை வழங்கவேண்டும்.

அதற்கு மனிதஉரிமை பற்றியும் பெண்களின்உரிமைகள்பற்றியும் பேசும் அமைப்புகள் தமது எதிர்ப்புபக்களை அரசின்மீது வன் மையாக மேற்கொள்ளவேண்டும்.

இல்லையேல் தமிழ்ப்பெண்கள் தமது உரிமைகளிற்காகப்போராடும்முறையை எந்தத் தரப்பும் எந்தவகைக்குள்ளும் அடக்கிக்கண்டிப்பதோ பேசுவதோ இனியும் பலனளிக்கப் போவதில்லை.

இதனை இதற்குப்பொறுப்பானவர்கள் புரிந்துகொள்ளபோவார்களா என்பதே கேள்வி?

சீலன்

உற்சாகத்துடன் தாங்கும்போது, சுமையின் கனமும் குறைகிறது. - ஓவிட்

நெய்தல் விளக்கு

திருக்கோணேசர் ஆலய மலையும், இயற்கைத்துறைமுக மலைத் தொடரும் இணையும் நகரைக் கடல் பிரித்திருக்கும் குடாக்கடலின் அலைகள் ஆர்ப்பரிக்க வண்ண வண்ணமான நிறங்களுடன் மீன்படகுகள் நகரும் காட்சி தனித்துவமானது.

கடல் அமைதியான காலங்களில் மாலைப்பொழுதில் வெள்ளை மணலில் குந்தியிருக்கும் மனித மனங்களில் குதூகலிக்கும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அலைகள் கடலின் ஆர்ப்பரிப்புக்களால் ஆவேசங்களால் காற்றில் கலந்துவரும் இசையும் கடல் பறவைகளின், காட்டுப்பறவைகளின் இசையும் கலந்து இசைக்கும் ஓசை இனம்புரியாத இனிமையைத்தரும். கெவுளியா முனையில் (FOUF POINT) உயர்ந்து, நிமிர்ந்து செயலிழந்து இருக்கும் வெளிச்ச வீடு.

ஆங்காங்கே வயல் வெளிகள், அதனைச்சூழ சிறியகாடுகள், காடுகள் நடுவே காணப்படும் புல் வெளிகளில் மேயும் பசுக்கள் இவை அனைத்தும் உப்புவெளி ஊர் வசீகரவனப்போடு இருப்பதை பறைசாற்றுவன.

உப்புவெளி கிராமத்தினுள் மிகச்சிறிய சிற்றூர்தான் சூடைக்குடா மீனவக்குடும்பங்கள் மத்தியில் கணபதி அப்பா தன்மனைவி நாகம்மா, ஆறு பிள்ளைகளுடன் ஓய்வின்றி உழைக்கின்ற உழைப்பாளியாக வாழ்ந்து வந்தார்.

அப்பா ஓடியாடி வேலை செய்தாலும் ஒருபோதும் அவர்களைத்துப்போவதில்லை. முதுமையிலும் இளமைத்துடிப்பு. வெற்றிலைபோட்ட வாயுடன் மெல்லிய கறுத்த உருவம். உழைத்துப் பாடுபட்ட முறுக்கேறிய உடல்கட்டு.

மழைக்காலத்தின் சுகந்தங்களாக வேம்பின் நறுமணத்தோடு வேறு இனம்புரியாத மணக்கலவையும் கடற்கரைக் காற்றிலே கலந்து அப்பாவின் சுவாசத்தை இனிமையாக்கிறது.

தமிழர்கள் விழித்தெழுந்து, விடுதலைப்புலிகள் தாய் மண்ணையும், தமிழையும் காக்கப் போராடிக்கொண்டிருக்கிற செய்திகளை அப்பா அறிவார். அப்போராளிகள் படகு மூலம் வரவிருக்கும் செய்தியே அப்பாவிற்குகிடைத்தது. அந்தநாளை எதிர்பார்த்து காத்திருந்தார்.

மூத்த தளபதி கணேசும், இளங்கோவும் 1984 நடுக்கூற்றில் மக்கள் மத்தியில் வாழ்ந்தபடியே தமிழீழ தேசியக் கருத்தாக்கத்தை மக்களிடையே வலுப்படுத்தினர்கள். அவர்களது மக்கள் உறவு வலைப்பின்னலாக்கப்பட்டது. இளங்கோ தனக்கொரு குடும்பம் இருப்பதைக் கூட மறந்து இயக்கப் பணியில் கணேசுடன் இணைந்து செயலாற்றினான். வன்னியிலிருந்து வரவிருக்கும் போராளிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்கள். கணேஸ் தம் பலகமம் துரையின் வழித்துணையுடன் கட வானைக் காட்டுப்பாதையால் நடந்து சாம்பல் தீவுக்கு வந்து திருமலை மாவட்டத்தளபதி சந்தோசம் மாஸ்டரைச் சந்தித்தார்.

மாஸ்டரினால் மூதூர் பிரதேசத்திற்கு என சிறிய ஆயுத அணியொன்று அப்போது ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. அவ்வணிப் போராளிகளான கஜேந்திரன், சஞ்சய், குண்டுகணேஸ், சசி, விஜித் ஆகியோருடனும்ஆயுத வெடிபொருட்களுடன் மூதூர் தளபதி கணேஸ் சல்லி அடுக்குப்பாரிலிருந்து சிறிய இயந்திரப்படகில் கடல் பயணத்தை ஆரம்பித்தார்கள். ஆண்டி உட்பட இரு அனுபவமுள்ள ஓட்டிகளுடன் படகு நத்தையைப் போல மிகமெதுவாக நகர்ந்தது.

மழைத்தூற்றல், கடல் குளம்போல் இருந்தது. படகு நகரும் அலையே சிறுசிறு அலையாக விரிந்துசென்றது.

திருமலை நகரை அண்மித்த கடல் பயணம், அதுவும் முதற் பயணம், நகரின் மின்னொளி வெளிச்சங்கள், கடலில் மீன்பிடிப்படகுகளின் வெளிச்சங்கள் மத்தியில் படகுப் பயணம் போராளிகள் மகிழ்ச்சியில் மூழ்கியே இருந்தார்கள். கோணேசர் மலையை படகு அண்மித்ததும் ஓட்டிகள் தம்இறைவணக்கத்தை செலுத்திய பிற்பாடு படகு மீண்டும் நகர ஆரம்பித்தது.

சிங்களக்கடற்படையினரின் பீரங்கிவிரைவுப்படகு உலாவரும்

இ. கபிலன்

ஆபத்தான கடல் பகுதியாக இருந்ததினால் போராளிகள் ஆயுதங்களின் மேலுறையாக இருந்த பொலீத்தீனை அகற்றி எதனையும் எதிர்கொள்ள தயார் ஆனார்கள். கடற்படைப் படகுடன் போட்டிபோட்டு ஓடித் தப்பமுடியாத படகிலே பயணம்செய்வதனை போராளிகள் அறிந்திருந்ததனால் சண்டையிட்டு வீரச்சாவடையும் எண்ணங்களுடன் தான் இப்பயணம்.

மின்னி, மின்னிப் பூச்சிப் போல் தெரிந்த வெளிச்சம் நன்கு துலக்கமாக தெரிய ஆரம்பித்ததும் போராளிகள் மனதில் ஏற்பட்ட பூரிப்பை அனுபவித்த அவர்களால் மட்டுமே அளவிடமுடியும்.

மழைத்தூற்றலில் நனைந்த உடம்பு, உப்புக்காற்றினால் ஏற்படும் உடல் நடுக்கத்துடன் படகு கரை ஒதுங்கியது. போராளிகள் மணலில் கால் பதிக்க நடுச்சாமமாகிவிட்டது.

அப்பா தன் மருமகன் ஆண்டியுடன் வந்த போராளிகளை வரவேற்று தன் வீட்டிற்கு அழைத்துச்சென்றார்.

வீட்டு வளவினுள் புதியவர்களின் கதைகள் கலகலப்பாகத் தெரிவதனையும், ஆயுதங்களுடன் ஓரமாகக் குந்தியிருப்பவர்கள் குளிர்காற்றில் நடுங்கிக்கொண்டிருப்பதையும் அப்பாவின் மனைவாள் நாகம்மா கண்களுக்கு புதிய வரவாகத்தெரிந்தது.

கொத்தமல்லி, சுக்கு உள்ளிட்டகிராமத்து மசாலாக்கோப்பியை நாகம்மா கடச்சுட அப்பாவிடம் கொடுக்க அப்பா போராளிகளுக்கு பரிமாறினார். உடல் நடுக்கம், சோர்வு, பசி அனைத்தும் ஒருசிலவிநா டிக்குள் நீங்கிப்போராளிகளுக்குப் புத்துணர்ச்சியைக்கொடுத்தது.

இரகசியநகர்வாக இருந்ததனால் அன்று இரவே போராளிகளை அழைத்துச்சென்று தன் வயல் குடிலில் தங்கவைத்தார்.

மழைத்தூற்றல் அவ்வப்பொழுதுவந்துபோவதனால் அனைவரும், அனைத்துப்பொதிகளும் மிகச் சிறிய குடிலுக்குளே அடக்கி, ஒடுக்கி மிக நெருக்கடிக்குள் படுக்கவேண்டிய நிலை.



நீறுபூத்தநெருப்புடன் விறகுகளை அடுக்கி தீமூட்டினார் அப்பா. அவ்வெப்பம் போராளிகளின் உடற்குளிரை நீக்கியது. மறுநாள் இருள் நீங்க முன்காட்டினுள் போகவேண்டும். அதற்குரிய ஏற்பாடுகளுடன் தான் வருவதாகக்கூறி அப்பா இரவே ஊருக்குள் போய்விட்டார்.

உணவு ஒழுங்குகள், ஏனைய அத்தியாவசிய தேவைகளை ஒழுங்குபடுத்த கணேசும் ஊருக்குள் சென்றுவிட்டார்.

சூரியனின் வருகை இருள் மெல்ல மெல்ல நீங்குவதிலிருந்தும், அப்பா தேனீப்பானையைதூக்கியபடி காட்டுக்கத்தி, கயிறுடன் வந்து சேர்ந்ததிலிருந்தும் புலப்பட்டது.

தேனீரை அருந்தியவுடன் போராளிகள் அப்பாவை பின் தொடர்ந்தார்கள். மக்கள் வயல் வேலைகளுக்கு வரமுன் நகர வேண்டிய விரைவான நகர்வாக அது அமைந்தது.

கூனித்தீவு பெரிய குளக்காட்டுப்பகுதிக்குள் அனைவரும் நுழைந்தார்கள்.

அப்பாவின் காட்டுக்கத்தி தடிகளைத் தெரிவுசெய்ய, போராளிகள் தடிகளைச்சீர்செய்து கொட்டிலைப்போட்டு முடித்தார்கள். அப்பாவின் வெற்றுமேனியில் வியர்வை பெருகியது. அப்பா மருமகன் ஆண்டி கிடுகு கொண்டுவர கொட்டில் முழுமைபெற்றது.

கணேசின் நம்பிக்கைக்குரிய இருவர் உணவுடன் வர போராளிகளின் வயிறும் நிரம்பியது.

அப்பா ஒவ்வொருநாளும் ஊர்நிலைமைகளை ஆய்வு செய்வார். தகவல் கசிவு எதும் ஏற்பட்டுள்ளதா? என்பதில்தான் அவ் ஆய்வு இருக்கும். காலை,மாலை என வந்து போராளிகளை பார்த்துவிட்டுச் செல்வார்.

சிலநாட்களின் பிற்பாடு அப்பாவினால் போராளிகள் மீளவும் அதே காட்டுப்பகுதியில் வேறு இடத்திற்குமாற்றப்பட்டார்கள்.

இப்படியிருக்கையில் அன்ரன், வெள்ளைத்துரை, ஆண்டி ஆகிய மூவரும் முழுநேர உறுப்பினராக இணைத்துக்கொள்ளப் பட்டார்கள். ஆண்டி அப்பாவின் மகளைத் திருமணம் செய்தகுடும்பகாரன்.

காலநகர்வில் போராளிகள் ஊருக்குள் இரகசியமாக நடமாட ஆரம்பித்தார்கள்.

ஆண்டியைப் படகு ஓட்டும் பணியில் முழுமையாக ஈடுபடுத்தினார் கணேஸ். போராளிகள் ஆயுதங்கள் வரவு படிப்படியாக அதிகரித்துக்கொள்ள படகுகளின் ஓட்டமும் அதிகரிக்க ஆரம்பித்தது. அப்பாவின் வீடும் எப்போதும் பரப்ரப்பாக இருந்தது. ஆனால் இரகசியமாகவே இருந்தது.

சந்தோசம் மாஸ்டர் 1985 நான்காம் மாதம் மூதூர் வந்து கட்டைபறிச்சானில் கண்ணிவெடித்தாக்குதல் ஒன்றை மேற்கொண்டார். ஜீப் வண்டியில் வந்த ஆறு சிங்களப்படையினரும் கொல்லப்பட்டார்கள். ஒரு AK ஆயுதமும் முதல்முதலாக கைப்பற்றப்பட்டது. இத்தாக்குதலில் கணேஸ், சஞ்சய், நந்தன், விஜித் ஆகியமுன்னணிப் போராளிகளும் பங்குபற்றினார்கள்.

தாக்குதல் நடத்த அன்று இரவே சந்தோசம் மாஸ்டர் 1983 க்கு முற்பட்ட காலத்தில் மூத்த தளபதி சீலனை அரவணைத்து வைத்த கங்கு வேலி துரைநாயகம் அண்ணனிடம் சென்று பின் தன் நடைபயணத்தை தொடர்ந்தார்.

போராளிகளின் இரானுவப் பலம் விரிவடைவதற்கு கூல் பயணங்கள் உதவியது. இந்தப்பலத்திற்கான பின்னூட்டல் அப்பாவின் குடும்பத்தினரால் நிகழ்கிறதென்று போராளிகள் அறிவார்கள்.

அப்பாவின் வீட்டு அடுப்படியில் எட்டிக்குச்சுக்குள் புகையும், தணலுமாக, நாகம்மா வேகினாள். சில நாட்களில் தொடுத்த அடுப்பை இழுக்கமுடியாமல் நாள் முழுவதும் அக்கினியில் அப்பாவின் மகள் உடல் வேகும். அப்பாவின் மூத்த மகன் படகில்வரும் பொதிகளை, ஆயுதங்களை இறக்குவதில் ஈடுபடுவார்கள்.

அப்பா குடும்பத்தார் உட்கார்ந்தால் எழுந்திருக்கமுடியாமலும், எழுந்தால் இடுப்பு இற்றுப்போகிற நிலையிலும், கால் நரம்புகள் இழுக்கின்ற உடல் சோரும் நிலையிலும் உழைத்தார்கள். இவ்வாறான நாட்களைக்கணக்கிட முடியாது.

ஒரு இனத்தின் உயிர்ப்பு என்பது அவ்வின மக்களது தியாகத்தின் மீது கட்டப்படுவதுதான் என்பதை அப்பாவினது செயல்கள் வெளிப்படுத்தின.

கரையோர பாதுகாப்பிற்கு என சுஜியண்ணன் பொறுப்பில் [illegible], குழியா(சிறி) உட்பட சிலபோராளிகள் முகாம் அமைத்து இருந்தார்கள்.

ஆனாலும் அப்பாவின் வீடுதான் போராளிகளின் கடல் தளமாக இருந்தது. மட்டக்களப்பு முன்னணித் தளபதிகள் , திருமலை மாவட்ட முன்னணித் தளபதிகள் என அனைவரது பாதங்களும் அப்பாவின் வளவு மண்ணில் பதிந்தவைகள்.

தமிழரின் வீரப்பயணத்தை வெளிப்படுத்தும் கடல் ஓட்டிகளான சாள்ஸ், தவம், கண்ணன், பெத்தப்பா ஆகிய அனைவருக்கும் அனைத்தும் அப்பா வீடுதான்.

காலப்போக்கில் ஊர்மிக இறுக்கமான, ஆபத்தான சூழ்நிலைக்குள் மாறும் அளவிற்கு சிங்களப்படையினரின் திடீர் நகர்வுகள் அமைந்தன. தளபதி கணேசின் வீரச்சாவுச்செய்தி மூதூர் மக்கள் அனைவரையும் ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியது. எல்லோர் முகங்களிலும் தம் குடும்பத்தில் ஒருவரை இழந்து விட்டதைப்போன்ற சோக உணர்வு வெளிப்பட்டது. முன்னணிப் போராளிகளான றொபின், ராஜேஸ், சங்கர், பவான், குட்டி கண்களின் ஓரம் ஈரம் கசிகிறது. அதை பிறரறியாமல் அடிக்கடி துடைத்துக்கொண்டிருந்தார்கள்

அப்பா வீட்டார் கண்ணீர்வடிந்த கண்களுமாய் இரவில் உறங்கியிரா அசதியுமாய் இருப்பதை அப்பொழுது காணமுடிந்தது.

மூதூர் அரசியல் பணிக்குப் பொறுப்பாக இருந்த டொமினிக் தளபதி கணேசின் வீரச்சாவு நிகழ்வில் "கணேசின் வீரச்சாவு இது ஒரு இலையின் உதிர்வல்ல, மலையின் சரிவு" என விபரித்தார். கஜேந்திரன் மூதூர் தளபதியாகப் பொறுப்பேற்று சில மாதங்களில் கூனித்தீவு சுற்றி வளைப்பில் வீரச்சாவடைந்தார். இதன் பிற்பாடு சஞ்சய் மூதூர் தளபதியாக ஒருசில காலங்கள் கடமையாற்றினார்.

இவர்களது காலப்பகுதியில் ஹெலிகொப்டர்கள் மூலம் முகாமைச்சுற்றி வளைத்தார்கள் சிங்களப் படையினர். இதன்போது கார்த்திக் வீரச்சாவு, கபிலப்பா கடுமையான காயமுற்றார். படகுகள், இயந்திரங்கள் அழிக்கப்பட்டன.

சிங்களப்படை நடவடிக்கைகள் இடைஇடையே நடைபெற்றன. அப்பாவின் வீடு, உடமைகள் இரு தடவைகள் எரித்து நாசம் செய்யப்பட்டன.

வீடு, உடமைகள் இழந்த சோகத்திலிருந்து முழுமையாக மீளாத நிலையில் அப்பா இருக்கும் போதே மகன் வெள்ளையன் சிங்களப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்செய்தி அப்பாவின் குடும்பத்தார் அனைவரையும் சோகத்திலே ஆழ்த்தியது. கண்களில் திரண்ட கண்ணீர் கன்னத்தில் உடைந்தோடியது. சில நாட்களின் பின் நாகம்மா தன் வாழ்வின் மீது படிந்த கசப்பை மெதுவாக விலக்கினார்.

அப்பா தன் உடம்பையும், நெஞ்சையும் விறைப்பாக்கிக் கொண்டு போராளிகளுக்கான பணிகளில் ஈடுபடலானார்.

(18ம் பக்கம் பார்க்க...)

☞ முதுமையை முன்னிட்டு, முன்னதாக செய்துவைக்கும் பாதுகாப்புகளில் சிறந்தது. - அரிஸ்டாட்டில்

இந்துக்களுக்கு புனிதமான கைலாசமலையும் மானச சரோவர் ஏரியும்

தன்னைச் சார்ந்தவர்களுக்கு மகாத்மா காந்தி இப்படியான தொரு வேண்டுதலை விடுத்தார், 'என் வாழ்நாட் காலம் முடிந்தபின் தகனம் செய்த என் உடலின் சாம்பல் மானச சரோவரின் கரைகளில் தூவப்பட வேண்டும்' இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவகர்லால் நேரு தனது 'டிஸ்வரி ஒப் இந்தியா' (DISCOVERY OF INDIA) என்ற வரலாற்று நூலில், "கைலாசமலை,மானச சரோவர் ஏரி இரண்டையும் நினைக்கும் போது என் மனம் பரவசமடைகின்றது' என்றுள்ளார். இமயமலைத் தொடரின் சிகரங்களில் ஒன்றான கைலாச மலை (MT.KAILASH) திபெத்தின் தென் மேற்கில் 13.000 அடி உயரமான பீடபூமியில் நிமிர்ந்து நிற்கின்றது. கைலாச மலையின் உயரம் கடல் மட்டத்தில் இருந்து 22.000 அடி மானச சரோவர் ஏரி கைலாச மலைக்கு அண்மித்ததாக இருக்கின்றது.

கைலாசமலையை 'உலகின் நாபிக்கமலம்' என்று பரத கண்டத்தில் உருவமிக்கப்படுகின்றது. இறைவனே இந்த மலையின் உருவத்தில் இங்கு நிற்பதாகவும் ஒரு நம்பிக்கை நிலவுகின்றது. மலை ஏறுவோர் இந்த மலையில் ஏறுவதில்லை. அனைத்துலக மட்டத்திலான எல்லா இனத்தவர்களும் கைலாச மலையில் ஏறுவதைத் தவிர்த்து வருகின்றனர். எவரஸ்ற் (EVEREST)போன்ற மலைகளில் ஏறிப் புகழ்பெற்ற ஜேர்மன் மலையேற்றக்காரர் றைன்ஹோல்ற் மைஸ்னர் (RHEINHOLD MEISSNER) 1985 ல் கைலாச மலையை ஏற எத்தனித்தார். மலை அடிவாரத்தில் நின்ற அவரை பன்னாட்டு வீரர்கள் அந்த முயற்சியைக் கைவிடும் படி கட்டாயப்படுத்தினர். அதன்படி மைஸ்னர் ஏறாது விடுத்தார்.

பார்வதி சமேதராகச் சிவபெருமான் கைலாச மலையின் உச்சியில் நித்திய தவம் செய்வதாக இந்துக்கள் நம்புகின்றனர். தம்மைத் திருக்கைலாச பரம்பரையினர் என்று சைவர்கள் அழைப்பதுண்டு. இந்துக்கள் மட்டுமல்லாமல் பௌத்தர்கள், ஜெயின்கள், திபெத்தின் பொன்போ (BON PO) ஆதி மதத்தினர் ஆகியோரும் கைலாச மலையை வழிபடுகின்றனர். கைலாச மலைதான் மகா மேரு என்று நம்பும் இந்துக்கள் பலர் உளர். சிவனைச் சைவர்கள் கைலாசபதி என்று அழைப்பதற்கு அவர் கைலாசமலை வாசனாக இருப்பது காரணமாக இருக்கின்றது.

இந்திய இலக்கியங்களில் கைலாச மலையும் மானச சரோவரும் முக்கிய இடம் வகிக்கின்றன. கிறிஸ்துவுக்கு முந்திய பண்டையபுத்த ஜாதகம் என்ற பௌத்த நூல் "குழந்தைப்பேறு இல்லாத மாயாதேவி மானச சரோவத்தின் புனித நீரில் பக்தியுடன் நீராடி அதன் பயனாய் சித்தார்த்தனைப் புத்திரனாகப் பெற்றாள். அவனே கௌதமபுத்தனாக தோற்றம் பெற்றான்" என்று சொல்கின்றது. வால்மீகி ராமாயணம், "இமயத்திற்குச் சமமான மலை எங்கும் இல்லை. ஏனெனில் அதில் தான் திருக்கயிலாயமும் மானஸ் தடாகமும் உள்ளன" என்று ஒரு வடமொழி பாடல் மூலம் கூறுகின்றது. ஜைன நூல்களும் இதேபோல் முக்கியத்துவம் இரண்டிக்கும் கொடுக்கின்றன. கயிலை மலையைப் போற்றிப் புகழும் தமிழ் இலக்கியங்களும் நிறைய உண்டு.

கைலாச மலையை திபெத்தியர்கள் தமது மொழியில் ரான்றின்பொச்சி (RANTRINPOCHCHE) என்றும் மானச சரோவரை திசோ மாபம் (TSO MAPHAM) அல்லது திசோ மாபங் (TSO MAPHANG) என்றும் அழைக்கின்றனர். மானச சரோபர் ஏரியின் பரப்பளவு 320 சதுர கி.மீ. அது கடல் மட்டத்தில் இருந்து 14,950 அடி உயரத்தில் கைலாச மலைக்குத் தென்புறமாக உள்ளது. கைலாச மலையோடு தொடர்புடைய இரு ஏரிகள் இங்கு இருந்தாலும் மானச சரோவர் மாத்திரம் உலகின் கவனத்தைப் பெற்றுள்ளது. அடுத்த ஏரியின் பெயர் றக்ஷஸ் தால். (RAKSHAS TAL).

கைலாச மலையிலுள்ள பனிப் பாறைகள் உருகும்போது, அந்த நீர் இரு ஏரிகளிலும் கலக்கின்றன. இந்து நதி, கர்நாலி நதி, பிரம்மபுத்திரா நதி ஆகிய மூன்றும் கைலாச மலையில் உற்பத்தியாகின்றன. கங்கை நதியும் கைலாச மலையில் உற்பத்தியாவதாகச் சிலர் நம்புகின்றனர். அவர்களுடைய கூற்றுப்படி இப் பிராந்தியத்தில் ஊற்றெடுக்கும் கங்கை நிலத்தடி ஊடாக கங்கோத்திரி வரை மறைந்து சென்று, பின்பு வெளிப்படுகின்றது. திரிவேணி சங்கமம் பற்றியும் முன்னொரு நம்பிக்கை நிலவியது. கங்கை,ஜமுனா கூடுமிடத்தில் நிலத்தடி ஊடாக சரஸ்வதி என்ற பெயருடைய நதியும் கலப்பதாக ஒரு ஐதீகம் நிலவியது. அண்மையில் செய்மதிப்படங்கள் சரஸ்வதி நதி இருப்பதை உணர்த்தியுள்ளன. திரி என்றால் வடமொழியில் மூன்று என்று பொருள். சிவனுக்கு கங்கைவார் சடையன் என்ற பெயர் அர்த்த முடையது.

மனித நாகரிகத்தில் அறியப்பட்ட மிகவும் பழமையான ஏரி என்ற சிறப்பு மானச சரோவருக்கு உண்டு. அது இருக்கு வேத காலத்துடன் தொடர்புடையது வடக்கில் சுவிற்சர்லாந்தையும் தெற்கில் பிரான்சையும் எல்லைகளாக கொண்ட ஜெனீவா ஏரி அல்ப்ஸ் மற்றும் ஜூரா மலைத்தொடரின் மேற்பகுதியில் காணப்படுகிறது. ஐரோப்பிய நாகரிகத்துடன் தொடர்புடைய மிகவும் பழமை வாய்ந்த ஏரி என்ற சிறப்பு இதற்கு உண்டு. ஆனால் இது மானச சரோவர் அளவுக்குப் பழமையானது அல்ல. நன்னீர் ஏரிகள் எண்ணிப் பார்க்க முடியாதளவுக்கு உலகின் பல பாகங்களில் காணப்படுகின்றன. இவை சமதரையிலும் மலையின் மேற்பகுதியிலும் அமைந்துள்ளன.



அன்பரசு

முற்றிலும் தரையால் சூழப்பட்ட நீர்ப்பரப்புக்கள் ஏரி என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. இவை மிகப் பெரிதாக அமையும் போது உள்நாட்டு கடல் என்று அழைக்கப்படுகின்றன. ஈரான் நாட்டுக்கு வடபால் அமைந்துள்ள கஸ்பியன் கடல் உலகின் மிகப்பெரிய உப்புநீர் ஏரியாகும்.புராதன காலத்தில் இப்பகுதியில் பிரமாண்டமான கடல் இருந்ததாகவும், தரையின் நகர்வு காரணமாக அது ஏரியாக மாறிவிட்டதாகவும் ஆய்வாளர்கள் இது பற்றிக் கூறுகின்றனர். சா கடல்(DEAD SEA) என்றழைக்கப்படும் உப்பு நீர் ஏரி இஸ்ரேயிலுக்கும் ஜோர்தானுக்கும் இடையில் காணப்படுகின்றது. இது கடல் மட்டத்தில் இருந்து 1,292 அடி பதிவான இடத்தில் இருக்கின்றது உப்பும் வேறு கனியங்களும் இந்த நீரில் மிகவும் செறிவாக கலந்துள்ளதால் இதில்உயிர் இனங்கள் வாழ்வதில்லை சா கடல் என்ற பெயர் இதனால் வந்தது.

ஏரிகள் போக்குவரத்து பாதைகளாகவும் மீன் போன்ற உயிரினங்களின் வாழ்விடமாகவும் அமைகின்றன. சுவாத்தியம் காரணமாக கோடீஸ்வரர்களின் விடுதிகள் ஜெனீவா ஏரியைச்சுற்றி எழுப்பப்பட்டுள்ளன. ஐ.நா. வின் ஐரோப்பியக் கிளை ஜெனிவா ஏரியின் அரு காமையில் கட்டப்பட்டுள்ளது முன்பு அது சர்வதேச சங்கத்தின்கட்டடமாக இருந்தது. உல்லாசப் பயணிகள் தேடிச் செல்லும் ஏரிகள் சில உள்ளன. மத்திய ஸ்கொட் லாந்தில் 24 மைல் நீளமான ஒடுங்கிய ஏரி லொக் நெஸ் (LOCH NESS) என்ற பெயருடன் காணப்படுகின்றது. புராதனகால இராட்சத நீர் வாழ் உயிரினம் இதில் வாழ்வதாக நம்பப்படுகின்றது. இது கண்ணுக்கு தெரிவதில்லை. இதைக் கண்டதாகக் கூறுபவர்கள் காணக் கிடைப்பதில்லை. இந்த ஏரி ஸ்கொட்லாந்தின் உல்லாசப் பயண மையமாகத்திகழ்கின்றது.

கைலாசத்திற்கு நிகரான தொருமலை கிரேக்கத்திலும் காணப்படுவதால் ஆதிமதங்கள் மனிதர்களுக்கு எப்பாதமலை உச்சிகளில் தோன்றியதோ என்று எண்ணலாம். மனிதர்கள் தமது தெய்வங்களை எட்டாத உயரத்தில் தூக்கி வைத்தார்கள் என்பதே உண்மை. இன்றைய கிரேக்கத்தின் (GREECE) வடபால் அமைந்துள்ள 9,570 அடி உயரமான மலை உச்சி ஆதிகிரேக்கக் கடவுளின் இருப்பிடமாகக் கருதப்படுகின்றது. இந்த மலையின் பெயர் ஒலிம்புஸ் (OLYM PUS) கடவுள், மனிதர், எல்லாவகை ஜீவராசிகள் மற்றும் அண்டசராசரங்களின் இறைவனான சொயிஸ் (ZEUS) ஒலிம்புஸ் மலையில் இருந்து ஆட்சி செலுத்துகிறார். என்பது கிரேக்கத்தின் புராதன மதக்கோட்பாடு. அவர் எல்லாம்வல்லவர் என்பது அடிப்படைக்கருத்து - விதிகள் (FATES) என்ற அவரிலும் வலுக்குறைந்த தெய்வங்கள் விதித் ததை மாத்திரம் அவரால் மாற்ற இயலாது. சொயிசின் மதச் சடங்குகளில் ஒன்றாக ஒலிம்பிக்ஸ் விளையாட்டுப்போட்டிகள் ஆதி கிரேக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

பல தலைமுறைகளின் பாவங்களைக் கழுவும் சக்தி மானச சரோவரின் பரிசுத்த நீருக்கு இருப்பதாக அங்கு செல்வோர் நம்புகின்றனர். 265 அடி ஆழத்தில் இருக்கும் கற்கள் கூடப் பளிங்கு போன்ற அதன் நீரில் தெரியும். கருத்தையும், கற்பனையையும் கடந்ததாகவும், மெய்சிலிர்க்க வைக்கும் அழகுத் தோற்றம் கொண்டதாகவும் இந்த ஏரி காட்சி தருகின்றது. கைலாச மலைக்கும் இந்த ஏரிக்கும் பல மந்திர சக்திகள் இருப்பதாக இன்னும் நம்பப்படுகின்றது. மலையின் தெற்குப் புறத்தில் செழிப்பின் சின்னமான 'ஸ்வஸ்திக்கா' (SWASTIKA) திடீரென்று தோன்றி மறைவதாகக் கூறப்படுகின்றது. பிற மதத்தினர் கூட இந்த அதிசயம் பற்றி எழுதியுள்ளனர்.

1950ல் திபெத் நாடு சீனாவின் நேரடிக்கட்டுப்பாட்டில் வந்தபின் இந்தியாவில் இருந்து கைலாச மலைக்குச் செல்லும் யாத்திரை மார்க்கம் தடைப்பட்டுவிட்டது. 1981ல் இந்திய - சீன விசேட ஒப்பந்தம் செய்யப்பட்ட பின் இந்திய யாத்திரைக் குழுவினர் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். இந்திய அரசினால் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட, கண்டிப் பான மருத்துவ பரிசோதனையில் வெற்றி பெற்ற சிறு குழுவினர் பயணத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர். சீனாவின் வீசா கட்டாயமாகப் பெறப் படவேண்டும். தில்லியிலிருந்து உத்தர பிரதேசத்தின் அல்மோரா வரை வாகனங்களில் செல்ல முடியும். அதன் பின் அங்கிருந்து கைலாச மலை வரையுள்ள 450 கி.மீ. தூரத்தை நடந்து அல்லது வாடகைக்கு அமர்த்திய குதிரையில் கடக்க வேண்டும், வழிகாட்டுவோர் உளர்.

தங்குமிடங்களில் பயணிகள் தாமே சமைத்து உண்ண வேண்டும். இதற்கான உணவு மற்றும் பாத்திரங்கள், எரிபொருள் என்பனவற்றை எடுத்துச் செல்லவேண்டும். பாதை மிகவும் ஆபத்தானது. சரயு நதி லிப்பு ஏரியில் உற்பத்தியாகி கீழ்நோக்கிப் பாய்ந்து செல்கின்றது. உற்பத்தியாகும் இடத்தில் சரயுநதி 'காளி கங்கா' என்று அழைக்கப்படுகின்றது. சில குறிப்பிட்ட இடங்களில் சரயுவைக் குதிரையில் அமர்ந்தபடி கடக்க முடியும்.

1925 தொடக்கம் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இருந்து ரொயோட்டா கனரக வாகனத் தொடரணி மூலம் தரைமார்க்கமாக மானச சரோவர் வரை செல்லமுடியும். கைலாச தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கு அமைவாக மலையையும் ஏரிக் கரைக்கரையில் நின்று வணங்கலாம். இப்பயணத்திற்கான வீசா அனுமதியை சீன அரசு வழங்குகின்றது. ஏரிக்கரையில் தங்க விரும்புவோரின் வசதிக்காக மண்ணால் கட்டப்பட்ட வீடுகள் சொற்பதொகைக்கு வாடகைக்கு விடப்படுகின்றன.

விதைடச்சுதை

பகுதி — 02

பிரசவவியல் கதவு

சிவத்துடன் செல்வம் வந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகிறது. இப்போது இன்னொரு உழவியந்திரம் வாங்கியதால் அதை செல்வமே ஓடுகிறான். சொல்வதை வேகமாக செய்து முடிக்கும் கெட்டிக் காரத்தனம் அவனிடம் இருந்தது. நாளைக்கு இவன் நன்றாய் வந்து விடுவான் என்ற நம்பிக்கை சிவத் துக்கு ஏற்பட்டது.

கால நகர்வு என்பது எத் தனையோ மாற்றங்களை உள்ளடக் கியே நகர்ந்து போகிறது. அரசியல் ஒருபுறம் சூடு பிடித்து பாராளுமன்றக் கட்டடங்களில் மோதி அறைந்து கொண்டிருக்க, ஓசைப்படாமல் இன் னொரு அதிர்வும் தமிழர் பிரதேசங் களில் நிகழ்ந்துகொண்டிருந்தது. சில வருடங்களுக்கு முன் நடந்த உரும் பிராய் சிவகுமார் என்ற இளைஞனின் மரணம் பல கேள்விகளையும் பதில்களையும் மக்கள் மனதில் எழுப்பியது.

பாராளுமன்ற அரசியலை விட சிங்கள இனவாத அரசியல் பற்றியும் தமிழ்மக்கள் வலியோடு உணர ஆரம்பித்தார்கள். வங்கிக் கொள்ளை, பஸ்தியாம்பிள்ளை கொலை, இன்ஸ்பெக்டர் சந்திரசேகரா கொலைமுயற்சி என்று சொல்லி படிப்படியாக தமிழ் இளைஞர்கள் அடையாளமிடப்பட்டார்கள்.

"சிங்கள அரசு தமிழ்ச் சனத்தை ரெண்டாம்தர பிரசையளாய் நடத்துது எண்டு எங்கட தலைவர்மார் நடத்திற சாத்வீகப்போராட்டங்கள் எல்லாம் தோல்வியாய்த்தானே முடியுது."

"அதாலதான் எங்கட பெடியள் வேற விதத்தில போராட வெளிக்கிட்டிருக்குதுகள். உந்த அரசாங்கங்களுக்கு இந்த விதம்தான் சரிவரும் போல கிடக்கு."

"பிளான் பண்ணித்தான் பெடியள் எல்லாம் செய்யிறாங்கள்" கூட்டமாய் நின்று சனம் வியந்து கொண்டது.

எண்பத்தொன்றில் யாழ் நூலகம் எரிக்கப்பட்டதில் சிங்கள அரசின் இனவாத முகம் வெளிச்சத் துக்கு வந்தது. இதுவரை அறிந்திராத இராணுவத்தின் இன்னொரு முகம் மக்களுக்கு அறிமுகமானது.

கிளிநொச்சி காவல் நிலையத்தில் புதிய கட்டடங்கள் முளைத்தன. அதிகமான பொலிஸ் காரர்கள் சத்தமின்றி பணியில் அமர்த்தப்பட்டார்கள்.

அன்று ஆனையிறவில் அதிகநேரம் தரமதிக்க நேர்ந்தது. விக்கினேஸ்வரன் முன்புறமும் மகேந்திரன் சியாமிளா, சித்திரா பின் இருக்கைகளிலும் அமர்ந்திருந் தார்கள்.

சிவம் அலுப்புடன் கார் யன்னல் வழியே எட்டிப்பார்த்தார். அந்த வெளியில் புதிதாய் முளைத்த இராணுவ கூடாரங்கள், சுற்றிலும் சுருள் முள்ளுக்கம்பிகள்,.... தூர பற்றை வெளியில் வரிசையாய் பொலிசாருடன் சமமாய் இராணு வத்தினர்.....

முதுகுத்தண்டில் சில்லிட்ட பய உணர்வு.

கூழைக்கிடாக்கள் பறந்து நிரிந்த அந்த பெருவெளி இன்றைக்கு இந்த விதமாய் மாறிப் போய்விட்டது.

இரண்டு பொலிஸ்காரர் காரை நெருங்க ஒரு இராணுவம் வந்து உள்ளே எட்டிப்பார்த்தான். விக்கினேஸ்வரனை இறங்கச் சொன்னான்.

சிவம் பதட்டத்துடன் "அவன் இப்பதான் கம்பஸ் படிச்சு வெளிக் கிட்டவன், அடையாள அட்டை இருக்கு" என்றார்.

அவர்கள் மீண்டும் விக்கி னேஸ்வரனை ஊன்றிக்கவனித்து விட்டு விலகிப்போனார்கள். அவர்கள் வரிசையில் நகர்ந்து கார் இலக்கம் பதிந்து அடையாள அட்டை காட்டி கடந்து போன பிறகுதான் பதட்டம் தணிந்தது. ஆனையிறவு வழியிலான பிரயாணம் இனி சுலபமாக இருக்கப்போவ தில்லை என்றே தோன்றியது.

யாழ்ப்பாணத்தில் அவரவர் இடங்களில் பிள்ளைகளை விட்டு விட்டு திரும்பிவரும்போது அன்னம் வீட்டுக்குப்போனார். அன்னம் இப் போது தலை நரைத்து முகத்தில் சுருக்கம் விழ மெலிந்துபோயிருந் தார். சின்னப்பன் இறந்து போனபிறகு இன்னமும் தளர்ந்துபோனாள்.

அவரைக் கண்டதும் பரபரத்துப்போனாள்.

"வா...வா... உன்னைக் கண்டு கனகாலம் எண்டு நினைச் சன். சாப்பிட்டிட்டு இரு. கை, கால் கழுவு வா, செந்திரு, மாமாக்கு தண்ணி எடுத்து வை."

அதேபாசம்... அதே பரிவு... அவருக்கு கண்கள் கலங்கி விட்டன.

அன்னம் சாப்பாடு தர ஆசையாய் சாப்பிட்டார்.

அதே வாசனை... அதே ருசி.

"நீயாவது எப்ப எண்டாலும் ஒருக்கா வந்திட்டுப்போறாய் அண்ணையைக்கண்டு கனகாலம். இங்க வாறதேயில்லை. ஆரிட்டயா வது காசு மட்டும் குடுத்துவிடும். அந்த பாசம் மட்டும் மறக்காம இருக்குது. எப்பிடி சுகமாய் இருக் கினமே. கனகம் மச்சாள் பிள்ளையள் எப்பிடி இருக்கினம். அந்தப் பிள்ளையளுக்கு எங்களத் தெரியாது. வந்து போனால்தானே சொந்த பந்தம் தெரியும்."

அன்னம் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"அண்ணைக்கும் மாறிமாறி வேலைதான். வந்துபோக நேரமில்லாமல் இருக்கிறார்."

"பராசத்தி மச்சாள் பிள்ளை யள் எப்பிடி இருக்கினம். அண்ணை யின்ர பிள்ளையளும் உன்ர பிள்ளையளும் படிச்சு நல்லாய் வந்திட்டுதுகள். என்ர பிள்ளையளுக்கு படிப்பு சரிவரேலை. அப்பர் வண்டில் மாடு எண்டால் பிள்ளையள் றக்ரில எருவும் குழையும் ஏத்தித்திரியுதுகள்."

வருத்தத்தோடு சொன்னாள்.

"எந்த உழைப்பு எண்டால் என்ன, செய்யிறாங்கள் தானே."

"கணேசோடதான் திரவிய மும் எருவும் குழையும் ஏத்தப்போறது. நடுவிலான் சிறுப்பிட்டியோட போயிட் டான். வாறதுமில்லை, போறது மில்லை கணேசுவுக்கும் நாலு பிள்ளையள். எண்டாலும் ஏதோ கொஞ்சம் கொண்டு வந்து எங்களை யும் பார்க்கிறான். அண்ணையும் நீயும் சாப்பாட்டுக்கு நெல்லு அனுப்பிறீங் கள். சாப்பாட்டுக்கு குறையில்லைத் தான்."

ஒரு வினாடி நிறுத்தி மூச்சு விட்டு தொடர்ந்தாள்.

" கட்டிக்குடுத்த இடத்தில மூத்தவளும் சுகமாய் இல்லை. அவன் பாவி அடியும் ஆய்க்கிணையு மாம். அவளை நினைச்சால் வயிறு பத்தி எரியுது. எல்லாம் என்ர பலன். ஆரை நோகிறது."

குரல் தழுதழுக்க சொன்னாள்.

" இப்ப திரவியமும் செந்திருவும்தான் என்னோட இருக்குதுகள்."

சிவம் அன்னத்தின் முகத்தைப் பார்த்தார். முகத்தின் வரிகள் அவள் சுமக்கும் கவலை களை அடையாளம் காட்டியது. நெஞ்சுக்குள் ஏதோ அடைத்தால் போல இருந்தது.

தன் சட்டைப் பைக்குள்ளி ருந்த பணத்தில் எடுத்து அப்படியே அவள் கைக்குள் வைத்தார்.

"நீ ஒண்டுக்கும் யோசிக் காதயடி, நாங்கள் இருக்கிறம்தானே. செந்திரு எங்க"

செந்திரு கதவுக்கு பக்கத் தில் வந்து நின்று மலர்ந்த கண் களுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்படியே அன்னத்தின் அச்சு.

"இவளும் பெரிசாகி நாலு வருசமாச்சு, கடைசிக்காலத்தில இவளை நினைச்சும் கவலைப்பட வேண்டிக்கிடக்கு."

"பிள்ளையை வைச்சுக் கொண்டு இப்படிக்கதைக்காத அன்னம். என்ன செந்திரு போயிட்டு வரட்டே"

"ஓம் மாமா"

"நான் வாறன்," சிவம் புறப்பட்டார். திரும்பி வரும்போது மனதுக்குள் கவலை நெருடிக் கொண்டிருந்தது. வீட்டுக்கவலை, நாட்டுக்கவலை எல்லாம் ஒரு சேர எழுந்தது.

பரந்தன் சந்தியிலிருந்து குமரபுரம் திரும்பினார். கிராமத்தின் ஆரம்பத்தில் இருந்த மைதானம் திருத்தப்பட்டு துப்பரவாக இருந்தது. மைதானத்தின் எதிர்ப்புறம் ஒரு அறை கட்டப்பட்டு அதில் பரந்தன் இளைஞர் வட்டம் இயங்கியது. முன்புறம் தகரத்தில் நீல வண்ணம் அடித்து வெள்ளை எழுத்துக்களில்,

"சிறப்பாய் வளரும் சின்னக் கிராமம், சிந்திக்க வைப்போம் அது எங்கள் இதயம்"

என்று எழுதப்பட்டிருந்தது. கிராமத்து இளைஞர்கள் இணைந்து ஏற்படுத்திய மன்றம் ஒவ்வொரு பௌர்ணமிக்கும் பாடசாலையில் கலை நிகழ்ச்சிகள் நடாத்துவார்கள். கிளிநொச்சியிலுள்ள வேறு மன்றங் களும் பங்குகொள்ளும் விளை யாட்டுப் போட்டிகளும் நடந்தன. சிதம் பரியின் மகன் யோகனும் சதாசிவத் தின் மகன் கதிரவன் மாஸ்ரரும் முன்னுக்கு நின்று நடாத்தினார்கள். விக்கினேஸ்வரனுக்கும் விளை யாட்டில் ஆர்வம் இருந்ததால் அவர் களுடன் இணைந்து எல்லா நிகழ்வு களிலும் கலந்துகொள்வான்.

மைதானம் கடந்துபோகும் போது விநாசியின் வீட்டைப் பார்த் தார். இப்போது வீட்டை சிறிது வசதியாக கட்டியிருந்தார்கள். எல்லாம் செல்வத்தின் உழைப்பு. இனிமேல் நிமிர்ந்து விடுவார்கள்.

வீட்டுக்குப்போய்ச்சேர ஐந்து மணியாகிவிட்டது. நெல்ல றையின் முன்புற விறாந்தையில் இரண்டு உழவியந்திரங்களுக்குமிடையே காரை கொண்டுபோய் நிறுத்தினார்.

அவர் உடைகளை மாற்றி விட்டு அப்பாடா என்று அமர பராசத்தி தேனீர் கொண்டுவந்து கொடுத்தாள்.

"கார்திகேசண் ணையும் அவவும் வந்து மகளின்ர கலியாண வீட்டுக்கு சொல்லியிட்டுப் போகினம்."

"ஆ.... நல்ல விசயம், மாப்பிள்ளை எங்கயாம்?"

"கொழும்பில எஞ்சினிய ராம், சாவகச்சேரியில மாடி வீடும் குடுத்து ரெண்டு லட்சம் காசும் குடுக்கினமாம். அதோட முரசு மோட்டையில பத்து ஏக்கர் வயல் காணியுமாம். வாற பத்தாம் திகதி கல்யாணமாம், எங்களைக் கட்டாயம் வரச்சொன்னவை"

"போகத்தானே வேணும். முந்தி ஒரு மணித்தியாலத்தில யாழ்ப்பாணத்துக்கே போயிடலாம்இப்ப அந்த ஆனையிறவால எவ்வளவு நேரம் செல்லுது.

மறுநாள் மாலை காரை எடுத்துக்கொண்டு கிளிநொச்சிக்குப் போனார். ஆறு மாதத்துக்கு முன்பு தான் இந்தக்காரை வாங்கியிருந்தார். கறுப்பு நிற கேம்பிரிட்ஜ் கார். சிவப்பு வெல்வெற் துணி போர்த்த இருக்கைகள். முன்புறம் தொங்கும் பூங்கொத்து என்று மிக அழகாய் இருந்தது.

கிளிநொச்சி நகரம் இப் போது கடைகள், கட்டடங்கள், வீடு கள் என்று பிரமாண்டமாய் வளர்ச் சியடைந்திருந்தது. கிளிநொச்சி கந்த சாமி கோவில் புதிய வண்ணப்பூச் சுடன் காட்சி தந்தது. லொறி, கார், றக்டர், சைக்கிள் என்று தெருவே வாகனங்களினால் நெரிபட்டுக் கொண்டிருந்தது. எந்த நகரமும் குறுகிய காலத்துள் இத்தனை நிமிர்வாய் எழுந்ததில்லை. கூலி வேலை செய்பவன் கூட பச்சை அரிசிச்சோறும் பாரை மீன் குழம்புமாய் சாப்பிட்டுக்கொள்கிற பிரதேசம் இது. மான் இறைச்சியும் மரை இறைச்சியும் குறைவில்லாமல் கிடைக்கின்ற மண் இது.

இந்த மண்ணுக்கு தான் வந்த நாட்கள் அவரின் நினைவுக்கு வந்தது. இங்கே கால் பதித்து முப்பத் தைந்து வருடங்கள். படிப்படியான வளர்ச்சி. இந்த உயரம் வந்ததே போதும். ஒரு பக்கம் கஷ்டப்பட்டு உழைத்ததால் இன்னொரு பக்கம் வாழ்க்கை சுகமானதாய் இருந்திருக் கிறது. யாருக்கும் கெடுதல் நினைத்த தில்லை. எனக்குள்ளதில் இந்தா உனக்கும் ஒரு பங்கு என்று கை கொடுத்ததனால் ஏற்பட்ட நிறைவோ தெரியவில்லை. அடுத்தவர் துயரப் படும்போது பொறுக்கமுடியாமல் உதவப்போகின்ற தன்மையால் ஏற்பட்ட நிமிர்வோ அதுவும் தெரியவில்லை. காலம் இப்படியே போனால் நன்றாக இருக்கும். இந்த ஆறுதல் உழைப்பினால் ஏற்பட்டது. மனைவி பிள்ளைகளினால் ஏற்பட்டது.

வீட்டில் நல்ல காரியமாக முருகானந்தனின் திருமணம் நடந்து பேரப்பிள்ளையும் பிறந்தாயிற்று. முருகானந்தன் பிறந்தபோது ஏற்பட்டதை விட பேரன் சாந்தன் பிறந்தபோது ஏற்பட்ட நிறைவும் மகிழ்வும் தனியானது. சியாமிளாவுக் கும் இருபது வயதாகிறது. எங்கேனும் மாப்பிள்ளை பார்க்கவேண்டும் குமரபுரத்தில் வாங்கிய காணியில் அவளுக்கு ஒரு வீடு கட்டதொடங் கியிருந்தார். வயல் வேலைகளுடன் வீட்டுத் தேவைக்கான மரங்கள் ஓடுகள் வாங்க ஒருபுறம் அலைய வேண்டியிருந்தது. கிளிநொச்சியில் வந்த அலுவல்களை முடித்துக் கொண்டு திரும்பும்போது தியேட்டருக் குப்போனார். 'நிறம் மாறாத பூக்கள்' முதல் நாள் காட்சி சனம் முட்டி மோதிக்கொண்டு நின்றது. சிறிது நேரம் நின்றுவிட்டு வேலாயுதத்திடம் சொல்லிக்கொண்டு வீட்டுக்கு வந்தபோது எட்டு மணியாகியிருந்தது.

சமீப நாட்களாக சூழலில் ஒரு பதட்டம் தென்பட்டுக்கொண்டிருந் தது. தாளையடி கடற்கரையில் நண்டு சுட்டுச்சாப்பிட்டுக்கொண்டிருந்த ஐந்து இளைஞர்களை இராணுவம் கைது செய்து ஆனையிறவு முகாமுக்கு கொண்டுபோய் வைத்து விசாரித்து விட்டு ஒரு வாரத்தின் பின் பளை பொலிசாரிடம் ஒப்படைத்தது. கடுமை யாக தாக்கப்பட்ட காயங்களுடன் அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டார்கள். அது பெரிய அதிர்வை எல்லோரிடத்தும் ஏற்படுத்தியது.

அங்கே இங்கே என்று இந்த விதமாக கைதுகள் நடந்து கொண்டிருந்தபோதுதான் அன்று காலை அந்தச்செய்தி எங்கும் பரவியது.

திருநெல்வேலி பலாலி வீதியில் இராணுவ வாகனத்தின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் பதின் மூன்று இராணுவத்தினர் பலி யானதைத் தொடர்ந்து இராணுவம் வீடு வீடாக மக்களை இழுத்து வரிசை யாய் நிற்க வைத்து சுட்டார்களாம்.

இறந்தவர்கள் அறுபது பேருக்கும் மேலே .

நாற்பத்தைந்து மைலுக்கு அப்பால் நடந்தது. வீட்டு முற்றத்தில் நடந்ததுபோன்ற சோகத்தைத்தந்தது. இராணுவத்தின் கொதிப்பு தமிழர் பிரதேசம் எங்கும் பரந்து வெடித்தது.

அதன் விளைவாக பரந்தன் சந்தியிலும் இராணுவம் நின்று மக் கள் மீது துப்பாக்கிச்சூடு நிகழ்த் தியது. அதில் பலர் காயமடைய, ஆறு பேர் நடுவீதியில் ரத்தம் சிந்தி உயிரை இழந்தனர். கிராமத்து சனங் கள் முதல் தடவையாய் அன்று தான் வெடிச்சத்தத்தை கேட்டார்கள்.

ரத்தம் உறைய அதிர்ந்தார்கள்.

1983ம் ஆண்டு யூலை மாதம் இருபத்தைந்தாம் திகதி.

(பகுதி-02இன் நிறைவு)

அத்தியாயம்-09



ஏழ் மனிதர்

வன்னி மண் - என்வாழ்க்கையின் மூலவேர்கள்பதிந்துபோயுள்ள மண். என் தாயகமண். தொப்புள்கொடியறுக்கப்பட்டு தூரப்போய் விழுந்த சிசுப்போல... வெகு தொலைவில் கிழக்குக்கரையில் ஜீவிதம் நகர்ந்தபோதும் - ஆழ்மனதில் என்தாயின் பூர்வீகம் பற்றிய நினைவுகள் பசுமையாய் படிந்து போயிருந்தன என்னுள். அதனாலோ என்னவோ 'வன்னி உன் பணித்தளம்' என்றபோது எவ்வித மறுப்புணர்வோ அச்சமோ எழாமல் வந்தாயிற்று.

புளியங்குள சோதனைச்சாவடி பரபரப்பாயிருந்தது. இளநீலச்சீருடைகள் சோதனையில் மும்முரமாயிருந்தன.

சோதனை முடித்து நிமிர்ந்த போதுதான் அந்த அரசசார்பற்ற வாகனத்தில் இருந்து ஓர் பெண்குரல் கீச்சிட்டது. 'ஹலோ சந்திரிய்ய்...' அதிர்ந்தேன். பெயர் சொல்லிக்கத்துகிறாளே பாவி - யாரப்பா அது - விரைந்தேன்.

'சாவித்திரி' ஒரு தொன் மகிழ்ச்சி.... பால்ய சினேகிதம் வாலிபம் வரை தொடர்ந்த சினேகிதம். கிழக்குக்கரை பிரசவித்த வர்த்தக பட்டதாரி. கார்மேல் கன்னியர் கல்லூரி உருவாக்கிய புத்திஜீவி ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் வென்று இணைந்த சினேகிதி எனனுள் மகிழ்ச்சிப் பிரவாகம். "வா வா - போகலாம் என்னோட கூட' 'எங்கே...' 'கிளிநொச்சிவரை' ஏறிக்கொண்டேன். சிங்கள சாரதி மௌனமாக வாகனத்தை செலுத்தினான். கனகராயன் குளப்பாதையில் வாகனம் தொட்டிலாடியது. எங்கும் செம்மண் புழுதி. புழுதியிலும் வியர்வையிலும் குளித்துச் செல்லும் வன்னி மக்கள்.

ஆங்காங்கே சிங்களத்தில் கத்தும் - வீதி அபிவிருத்தி பணியாளர்கள், கொழுத்தும் வெயிலில் சுறு சுறுப்பாய் வீதி வேலை செய்யும் வன்னிப்பெண்கள். சங்கிலித்தொடர் அணியாய் ஏ-9 பாதையெங்கும் வாகனங்கள். காற்றில்கொடிகள் சடசடக்க வேகமாய் ஓடியோடி மறையும் அரசசார்பற்ற நிறுவன வாகனங்கள்.

இருவரிடையேயும் ஓர் திடீரென மௌன இறுக்கம். நானே மௌனத்தைக் கலைத்தேன்.

ஏன் கிளிநொச்சி போகிறாய்.... 'வேலை விசயமாய்' 'எந்த நிறுவனம்'

பெயர் சொன்னாள் - சிரித்தேன் 'நல்லது நிவாரணமா, புனர்வாழ்வா, அபிவிருத்தியா'

'நிவாரணம்தான்.....'

'நீங்கள்'

'வலுவூட்டல்' - இப்போது சாவித்திரி சிரித்தாள்.

'எங்களது பணிகளிலும் கருத்தியல்களிலும் வேறுபாடுகள் காணப்பட்டாலும் இருவருமாக... மனம் ஒருமித்து சிந்தித்து ஏதேனும் செய்யமுடியுமா? சந்திரி' 'பார்க்கலாம், முயற்சிக்கலாம்".....' 'புனிற்டி இன் டைவசிற்றி தியறியா...' 'ம்' 'எப்படி எப்போது வன்னிக்குள் வேலையாக வந்தாய் சாவித்திரி'' பேராதனையில் இருந்து வெளிக்கிட்டதும் ஒரு வருடம் தண்டச்சோறு, பின்நேரே கிளிநொச்சி....' 'ஓ...ஒரே கதைதானா இருவருக்குமே.'

மலையக இதயத்தில் நான்கு ஆண்டுகள் வாழ்ந்துவிட்டு கண்டியில் இருந்து வன்னிக்கு வந்த எங்கள் இருவரையும் சாரதி புன்சிரிப்போடே பார்த்துச்சொன்னான்.

'கடவுளின் தண்டனை' - என்னது? - வன்னிவேலை யென்றதும் கடவுளின் தண்டனையென்றா நினைக்கிறாய் - நோ...

'கடவுளின் ஆசீர்வாதம்' என்றாள். அவன் குபுக்கென்று சிரித்தான். 'அழகான பொய்' - இல்லை நிஜம் இதுதான்.

இதமான குளிர், மிதமான வசதிகள், மிகையான நாகரிகங்களோடு வாழும் ஓர் சராசரி மனிதனுக்கு கண்டி சோலையாகவும் வன்னி பாலைவனமாகவும் தெரியலாம். ஆனால்.... தாயகமண் எனது மக்கள், எனது மொழி எனும் ஆத்மார்த்த உணர்வுகளோடு உள்வரும் ஒருவனுக்குதான் நேசிக்கும் மண்ணில் ஜீவிதப் போராட்டங்கள் இருந்தாலும் வாழ்வு சொர்க்கம்தான்.

மாங்குளம் அமைதியாகக் கிடந்தது. வாகனம் வேகமெடுத்தது. சாவித்திரியை மிக நீண்ட நாட்களுக்குப்பின்னர் சந்தித்ததால்.... பேச எவ்வளவோ இருந்தது - சாரதி ஓர் பெரும் தடையாக இருந்தான். தமிழ் தெரிந்த சிங்களசாரதி... இரண்டு மொழியிலும் எல்லாவிடயங்களையும் உரையாடமுடியாது. சாவித்திரி தலை கோதி கழுத்துச்சரித்தபோது - அதிர்ந்துபோனேன். கழுத்தில் தாலி. எப்படி? எப்போது? யாரவன்? தொடர் தொடராய் என்னுள் அதிர்வலைகள்.

சாவித்திரியின் முறைப்பையன் - இன்னமும் அமெரிக்காவில் இருந்துவரவில்லை... திருமணம் இழுபட்டுக்கொண்டே போகிறது என அவள் தாய் ஒரு மாதத்திற்கு முன்பு கூட அலுத்துக்கொண்டது நினைவில் வந்தது.

பொறியியல் பட்டதாரியான வாகீஷன் இவ்வருடம் அமெரிக்காவில் இருந்து வந்து சாவித்திரியை திருமணம் செய்து கூட்டிப்போக வுள்ளான் என்பது தான் எனக்குத் தெரியும் - இதெப்படி சாத்தியம்.... எனக்குக்கூட சொல்லாமல் திருமணம் செய்துகொண்டாளா? இரகசியத் திருமணமா?

உள்மனதுள் விடையில்லா வினாக்கள்.

'ஐ யாம் சொறி சந்திரி... உன் தவிப்பு எனக்குப் புரியுது. சொல்லிக்கொள்ளக்கூட அவகாசமில்லாத திருமணம்.ஐ யாம் றியலி சொறி...' என் கரம் பிணைத்து வருந்தினாள். கையை உதறினேன் - நீயா என் சினேகிதி - இத்தனை கால உறவுகளும் வெறும் மாயையா... சீ.... நடிக்கிறியா... எனக்குக்கூட சொல்ல முடியாதளவுக்கு உனக்கென்ன அவசரம் வந்துதொலைத்தது..?

'றிலாக்ஸ் சந்திரி' 'என்னடி றிலாக்ஸ்...' கோபத்தில் நேரம் கரைந்தது. "யாருக்குமே சொல்லிக் கொள்ள முடியாதபடியாகநேர்ந்தது... எல்லாமே எல்லாமே ஓர் விபத்து போல...'

'யாரவன் - வாகீஷனில்லையா... அப்போ'

'இல்ல- வாகீஷனில்ல.....'

'அப்போ'

'திருமாவளவன்' 'என்னது...'.... அவள் ஏதோ விபரீதமாகச் சொல்லப் போவதாய் மனது சொன்னது.

'வன்னிக்கு வேலைக்கு வந்த காலத்தில் ஏற்பட்ட அறிமுகம் திருமாவளவன் ஓர் போராளி...' 'எ...ன்..ன..து' சுத்தமாய் அதிர்ந்தேன்.

'சுயநிர்ணய உரிமைப்போரில் தன்னை இணைத்துக்கொண்ட ஓர் தமிழன்' 'அதற்காக...'

ஓர் நிவாரணப்பணிக்காக போயிருந்தபோதுதான் திருமாவளவனைச் சந்தித்தேன். வலது கால் முழங்காலுக்கு கீழே இல்லாமல் போயிற்று.

'அனுதாபமா...' 'நோ..'

'காதலா...' அப்படிச் சொல்வதற்குமில்லை சந்திரி'

'அப்படியென்றால்... உனக்கென்ன விசரா'

'திருமாவளவன் என்ற மனிதனை எனக்குப் பிடித்திருந்தது.' அவனது தோற்றத்திற்கு அப்பால்... அவனது கொள்கை, அர்ப்பணம் , தியாகம், தாயக உணர்வு எல்லாமே... எல்லாமே பிடித்திருந்தது. திருமாவளவன் அடிப்படையில் ஓர் நல்ல மனிதன். இல்லற வாழ்க்கைக்கு இதைவிட என்ன தகுதி தேவை சந்திரி? என்னால் பதில் கூறமுடியவில்லை.

'ஒருவேளை தகுதி பற்றி யோசிக்கிறாயா... -இருக்கலாம். எனது கல்வி, குடும்பநிலை,தொழில், பொருளாதாரவளம், இவற்றோடு ஒப்பிடும்போது எனக்கு அவன் தகுதியில்லை என்று நீ கருதலாம். எல்லாரது அபிப்பிராயமும் அதுதான்.

ஆனால் இந்த தகுதிகளுக்கு அப்பால் ஒன்றிருக்கிறது... அதன் படி அவன் தகுதியானவன் தான்.'

ஆத்மராஜா
றூத் சந்திரிக்கா

'என்னது?'

'சமூகப்பிரக்ஞை... அர்ப்பணம், விடுதலையுணர்வு'

நாமெல்லாம்... நான் - எனது கல்வி, எனது குடும்பம், எனது தொழில் எனும் கருத்தியல்களோடு போட்டிபோட்டு முன்னுக்குவரும் போது நாம் - எமது சமூகம், எமது தேவைகள், எமது உரிமைகள் எனும் பொதுப்பார்வையோடு தங்களை அர்ப்பணிக்கும் மனிதர்கள் எந்த வகையில் எம்மை விடத்தாழ்ந்தவர்கள் சொல்.... சொல்லமுடியுமா அப்படி?

'பொய்யான கௌரவங்களை, சுயநலங்களைவிட மெய்யான தேவைகளும் உரிமைகளும் விடுதலைகளும் எவ்வளவோ மேல் சந்திரி...'

'நாமெல்லாம் எத்தனை வசதி வாய்ப்புகளோடு சௌகர்யங்களோடு வாழ்ந்தபோது இங்கே அடிப்படை வசதிகளேயில்லாமல் ஓர் பெருநிலப்பரப்பும் அதன் மக்களும் ரணப்பட்டதை நினைத்தோமா... என்ன செய்தோம்.

நாமெல்லாம் கண்டியிலும் கொழும்பிலும் நெற்றிப்பொட்டை துடைத்துவிட்டு கொச்சை சிங்களத்தில் பேசக்கற்றுக்கொண்ட காலங்களை மறந்துபோனாயா? இப்போது எங்கும் தமிழில் சரளமாய் பேசிக்கொண்டு தங்கு தடையின்றிப் பயணப்படுகிறோமே அதற்கான காரணம் என்ன?

'அடிப்படை என்ன...'

மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

சாரதியும் கேட்டுக்கொண்டிருந்தான் - அவனுக்கு சாவித்திரி பற்றி சகலதும் தெரிந்திருப்பது அவன் முகபாவனையில் புரிந்தது.

'இந்தபோராட்ட வரலாற்றில் எனக்கும் ஒரு துளிப்பங்காவது உண்டு எனும் திருப்தி என்னுள் இப்போது உள்ளது. திருமாவளவனுக்கு... அவனது கொள்கை கருத்தியல்களுக்கு நான் அளித்த முக்கியத்துவம் தான் இருவரையும் இணைத்தது. ஏராளமான வேறு பாடுகள் எங்களிடையே இருக்கின்றன. ஆனாலும் வாழ்க்கை சுவாரஷ்யமாக இருக் கிறது. சரீரத்திற்கும் உணர்வுகளுக்கும் அப்பால் உள்ள சமூகப் பிரக்ஞை தொலைநோக்கு இவை யிரண்டும்தான் எங்களை மகிழ்வாக வாழ வைக்கிறது. என் பிள்ளை சொல்லட்டும் தன் தந்தை ஓர் இலட்சியவாதியென்று. 'ஓ... யுனிற்டி இன் டைவசிற்டியா மீண்டும்...? சிரித்தேன்.

சாவித்திரியின் நியாயங்களை செவிமடுத்தேன். அவளது உணர்வுகள் புரிந்தது ஓ...என் நல்ல நண்பியை நான் இதுகாலவரை புரிந்து கொள்ளவில்லையா? அவளது இதய ஆழத்தை, அதில் புரையோடிப் போயிருக்கும் சமூக உணர்வுகளை தொலைநோக்கை இப்போது தான் என்னால் புரிந்துகொள்ளமுடிகிறது. அவளது இலட்சியம் புரிந்தது.

வாகனம் கிளிநொச்சி பெருஞ்சாலையில் ஊர்ந்தது. திடீரென சாரதி பிறேக் போட்டான். ஓர் மோட்டைக்கின் பின்னால் இருந்து வந்த மனிதன் பூவாய் சிரித்தான் - 'இது தான் திருமாவளவன்' நட்பாய் பார்த்தேன் - சிரித்தேன்.

ஊன்று தடியுடன் இறங்க சாவித்திரி துள்ளியோடிப்போய் கரம் கொடுத்து அணைத்து வாகனத்தில் ஏற்றினாள். டிப்போ சந்தி,

பாண்டியனின் வெளிப்புறத்தின் அமைதியான இருக்கைகள் - அன்புவும், தமிழனும் ஓடிவந்து உபசரித்தார்கள் என்னக்கா கொண்டுவர' எல்லாமே ஸ்வீட்ஸ்' எல்லாருமே சிரித்தோம். திருமாவளவனின் ஒற்றைக்கால் என் கண்களுக்குள் புலப்படவில்லை - என் நண்பியின் கதாநாயகனல்லவா அவன்.

தங்களைத் தாங்களே மதிப்பவர்களை, அனைவரும் மதித்தே தீரவேண்டும். - பெஞ்சமின் டிஸ்ரேலி

நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்

01.10.2003 மாலை 4.00 மணி கிளிநொச்சி மகாவித்தியாலயம். சிவப்பு மஞ்சள் கொடிகளின் சலசலப்பு பட்டொளி வீசியபடி தமிழீழத்தேசியக்கொடி அருகில் சற்று பதிவான கொடிக்கம்பத்தில் நம்ப வண் பச்சைக்கொடி எமது விடுதலை இயக்கத்தில் முதல் பிரசவமாகி பிரகாசிக்கும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் கொடியது.

அன்று எமது தலைநகரில் மாணவனாய் இனவாதக்கொடியை எரிந்தவன் பின் விடுதலைவீரனாய் எம் தலைவனின் இதயச்சந்திரனாய் தமிழீழத்தில் முதல் முதலில் வித்தாகிய சீலனின் பெயரைத் தாங்கி 'பயிற்சி, தந்திரம், துணிவு' என்ற வாசகத்தை சிரமேற்கொண்டு வாசம் வீசும் படையணியின் கொடியது.

பாடசாலையில் ஆக்கிரமிப் பாளரின் சின்னத்தை அழித்தவனின் மாலையைத் தாங்கியபடி மானசீகமாய் எம் விடுதலை நோக்கி சிறகடிப்பதாய் அந்த உயிரோவியம்.

காண்டாமணி யாய் காண்டீபனின் குரல் கணீரென ஒலிக்கிறது. "என்னைச் சுட்டுவிட்டு என்ற ஆயுதத்தை எடுத்துக்கொண்டு ஓடு" எனக்கூறியசீலனின் சீரிய படையணியின் வரலாறு செப்பி "இயலாது ஒன்று இருக்காது எமக்கு" என தலைமையுரைக்கு முற்றுப்புள்ளி இடுகிறான்.

எதிரியின் முன் எரிமலையாய் கனக்க மட்டுமல்ல கனிவாக வரவேற்கவும் தெரியுமென கனம் பண்ணும் நகுலனின் வரவேற்பு.

தமிழுக்கு இன்று முக்கிய நாள். தமிழனின் புதுப் பிரவேசம். தமிழனின் முதல் வருகை சாள்ஸ் அன்ரனி. தமிழனின் வீரம் தமிழுக்குப் பயன்படுத்தியது இதுவே முதற்தடவை. முன்னொருகாலம் வன்னிப்படையணி தலதாமாளிகையை பாதுகாக்கச்சென்றது. தலதாமாளிகையை தமிழர்கள் தரக்கியதாக இன்று ஒரு கதையும் உண்டு. குறையடர்த் தியுத்தம், நிறையடர்த் தியுத்தம் எமது தேசம் கொண்டு கலைச் சொற்களுக்கு உதாரணங்களுடன் விளக்கம் உரைக்கப்படுகிறது. மரபு வழிப்படையணி தோன்றியபோது இராணுவமலர் வருவது தவிர்க்க முடியாது. அந்த வகையில் போரியல் தமிழ்வத்தது. படையணித்தமிழ் பரமைத்தது. 'நெருப்பாற்று நீச்சலில் பத்தாண்டுகள்' நூல் தியாகிகளைப் போற்றும் ஓர் இலக்கியம். தமிழுக்கு ஓர் ஆவணம்.... ஈழீலங்கா இராணுவ படையணிகளின் ஆண்டு மலர்களுக்கு அப்படையணிகளின் தளபதிகளின் ஆசிச்செய்திகளுடன் வெளிவரும். ஆனால் இந்த நூலில் அப்படையணியின் 15 தளபதிகள் ஆசுதியான செய்தி உள்ளது புதிய வரலாறு.... என நிலாந்தனின் சிந்திக்கக்கூடிய சிறப் புரை நிறைவுறுகிறது.

"தலைவர் ஏனிந்த படையணியை உருவாக்கினார்?" முதல் சண்டை ஒபறேசன் மின்னலின் மின்னலாய்ப் பங்குகொண்டவர்கள் தீச்சுவாலையில் காட்டுத்தீயாய் பற்றி எரிந்தது வரையும் உலகப்போரியல் வரலாற்றில் இல்லாத பக்கம் ஒன்றும் பகிரப்படுகிறது. "போரியலில் வீர்களின் உளவுரனை பாதுகாப்பதே பெரியகலை. ஆனால் எங்கள் சாள்ஸ் அன்ரனிப்படையணிக்கு வல்வாறு பயத்தை ஏற்படுத்தலாம் என பல தடைவைகள் படையணித் தளபதிகளுடன் கலந்தாலோசிப்பேன்" உலக யுத்தங்கள் எதிலும் இடம்பெறாத படையணி வரலாறு அல்ல, தமிழுருடைய வரலாறு எம் அகந்தொட்டு அகிலம் வரை அமிதமாய் அரசியலை அள்ளித்தருகிறார். போர்தந்த எழுத்தாளராய் மலரவன், மலைமகள், தூயவன், பார்த்தீபன், ச.பொட்டு,.... பட்டியலை படித்து காட்டுகிறார். நூல் எழுதிய கஸ்ரோ, ச.பொட்டு , துவசிச் செல்வன்..... பாராட்டி ச.பொட்டுவின் ஆக்கத்தில் "அரைத்தூக்க கலையாத இரவில் ....." என்ற பந்தியை அர்த்த பரிமாணத்துடன் விளக்குகிறார். மேலும் முத்தமிழ் தாண்டிய போரியல் வரலாற்றின் பெருமைகளைப்பேசி "வெல்வது நிச்சயம் தடுப்பது யாருமல்ல" என உரைப்பது என்றும் எம் உதடுகள் உச்சரிக்கும்.

இறுதி நிகழ்வு நாலுரு வாக்கத்துக்கு உழைத்தவர்களாய் உருவப்படங்களாய் வீற்றிருக்கும் வீரத்தளபதிகள் சேகர், ராகவன், முக்கிய துறை ஒன்றில் சுடமையாற்றிக்கொண்டிருக்கும் அருளா நூலை மெருகூட்ட வழிசமைத்த தேசியத்தலைவர், மெருகூட்டிய குகவியழகன், பார்த்தீபன், அன்டிமணி ஆகியோரை அன்புடன் நினைவுகூரப் படுகிறது. புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் நிறைவுறுகிறது. அன்று இந்த நகரை மீட்க இதேகோசத்துடன் உறுதியெடுத்தது நினைவில் நிழலாட ஈருடலியை எடுக்கிறேன்.

சிவேந்திரன்

நூல் வெளியீட்டுப்பார்வையும், மதிவும்

வழிவந்தபடையணி பாடசாலையில் தனது படையணி வரலாற்றை வெளியிடுவது உண்மையில் வெற்றி.

சத்ஜெயவில் நாம் சந்தித்த சவால்களை ஓயாத அலையில் ஓட ஓட விரட்டினோம். நேற்று நாம் படை நடத்திய இடத்தில் இன்று பரணி படைக்கிறோம். ஓயாத அலை 02இல் நீச்சலடிக்கத் தயார். இறுதி இரவு உணவு உண்டு மகிழ்ந்து எங்கள் தளபதி லெப்ரினன் கேணல் ராஜ சேகரத்தைச் சுற்றி "றோமியோ ஆட்டங்கண்டால் பூமிசுற்றாது..." பாடி ஆடினோம். இன்று எம்மினிய றோமியோவும் அதில் பங்குபற்றி யவர்களும் சீலன் அண்ணையிடம்... அருண் (நடிபோன்.... எண்ணங்களில் வந்துபோகின்றன.

மண்டபத்துக்குள் நுழை கின்றேன் மேடை புலிச்சின்னத்தால் சிரிக்கிறது. தலைவரின் சாயலாய் எங்கள் சாள்ஸ் அன்ரனியின் திருவுருவப்படம். எமது கேடயங்களில் ஒருவரான கேணல் பாஸ்ராஜ் அருகில் சிரித்தபடி சிறப்பும் படையணியின் சிறப்புத்தளபதி நகுலன், சிறப்புரையாளனாய் நிலாந் தன், எங்கள் எல்லாவெளியீடு களிலும் கதாநாயகனாய் இல்லை கதை நாயகனாய் நாசுக்காய் நயமாய் நற்சிந்தனையாளனாய் மதிப்பீட்டை வழங்கும் கவேபாலகுமாரன் மீண்டும் என் கண்கள் சீலன் அண்ணனை நோக்குகிறன. மகளிர் கேணல்களின் சொற்களுக்கு உதாரணங்களுடன் விளக்கம் உரைக்கப்படுகிறது. மரபு வழிப்படையணி தோன்றியபோது இராணுவமலர் வருவது தவிர்க்க முடியாது. அந்த வகையில் போரியல் தமிழ்வத்தது. படையணித்தமிழ் பரமைத்தது. 'நெருப்பாற்று நீச்சலில் பத்தாண்டுகள்' நூல் தியாகிகளைப் போற்றும் ஓர் இலக்கியம். தமிழுக்கு ஓர் ஆவணம்.... ஈழீலங்கா இராணுவ படையணிகளின் ஆண்டு மலர்களுக்கு அப்படையணிகளின் தளபதிகளின் ஆசிச்செய்திகளுடன் வெளிவரும். ஆனால் இந்த நூலில் அப்படையணியின் 15 தளபதிகள் ஆசுதியான செய்தி உள்ளது புதிய வரலாறு.... என நிலாந்தனின் சிந்திக்கக்கூடிய சிறப் புரை நிறைவுறுகிறது.

"தலைவர் ஏனிந்த படையணியை உருவாக்கினார்?" முதல் சண்டை ஒபறேசன் மின்னலின் மின்னலாய்ப் பங்குகொண்டவர்கள் தீச்சுவாலையில் காட்டுத்தீயாய் பற்றி எரிந்தது வரையும் உலகப்போரியல் வரலாற்றில் இல்லாத பக்கம் ஒன்றும் பகிரப்படுகிறது. "போரியலில் வீர்களின் உளவுரனை பாதுகாப்பதே பெரியகலை. ஆனால் எங்கள் சாள்ஸ் அன்ரனிப்படையணிக்கு வல்வாறு பயத்தை ஏற்படுத்தலாம் என பல தடைவைகள் படையணித் தளபதிகளுடன் கலந்தாலோசிப்பேன்" உலக யுத்தங்கள் எதிலும் இடம்பெறாத படையணி வரலாறு அல்ல, தமிழுருடைய வரலாறு எம் அகந்தொட்டு அகிலம் வரை அமிதமாய் அரசியலை அள்ளித்தருகிறார். போர்தந்த எழுத்தாளராய் மலரவன், மலைமகள், தூயவன், பார்த்தீபன், ச.பொட்டு,.... பட்டியலை படித்து காட்டுகிறார். நூல் எழுதிய கஸ்ரோ, ச.பொட்டு , துவசிச் செல்வன்..... பாராட்டி ச.பொட்டுவின் ஆக்கத்தில் "அரைத்தூக்க கலையாத இரவில் ....." என்ற பந்தியை அர்த்த பரிமாணத்துடன் விளக்குகிறார். மேலும் முத்தமிழ் தாண்டிய போரியல் வரலாற்றின் பெருமைகளைப்பேசி "வெல்வது நிச்சயம் தடுப்பது யாருமல்ல" என உரைப்பது என்றும் எம் உதடுகள் உச்சரிக்கும்.

இறுதி நிகழ்வு நாலுரு வாக்கத்துக்கு உழைத்தவர்களாய் உருவப்படங்களாய் வீற்றிருக்கும் வீரத்தளபதிகள் சேகர், ராகவன், முக்கிய துறை ஒன்றில் சுடமையாற்றிக்கொண்டிருக்கும் அருளா நூலை மெருகூட்ட வழிசமைத்த தேசியத்தலைவர், மெருகூட்டிய குகவியழகன், பார்த்தீபன், அன்டிமணி ஆகியோரை அன்புடன் நினைவுகூரப் படுகிறது. புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் நிறைவுறுகிறது. அன்று இந்த நகரை மீட்க இதேகோசத்துடன் உறுதியெடுத்தது நினைவில் நிழலாட ஈருடலியை எடுக்கிறேன்.

சிவேந்திரன்

இருள் கழுவாப்புலர்வுகள்

கீழ்வான் விரிக்கும்
செங்கம்பளம் மீதேறி
சீமான் நீ வருகிறாய்

புரவிகள் தாவுமுந்தன்
பூந்தேர் பவனி
நாளுந்தான் நடக்கிறது
பொன்னாறு பாய

மூலைமுடுக்கெங்கும்
சலசலக்கும் ஒளியாறெனினும்
எங்கள் இரவேன்
இன்னும் கழுவப்படவில்லை...?

ஊர் மெச்ச
பேரொளியை பீய்ச்சியடித்தபடியே
இரகசியமாய்
இரவோடு கைகுலுக்கும்
வித்தியாசமான
விவகாரமான
புலர்வு நீ (?)

பொழுது பிந்தலையும்
புலர்தலையும் பார்த்தோம்
புலர்வதாய் பேரக்கு காட்டி
மெய்யாய் படும்
புதுமையான கரலச்சுழற்சி
பொல்லா புலர்வே
ஊழிப்பேயுனக்கு
உறவா? உதவியா?

கருணம் வத்தன்.

முரு முரனின் புலர்வுக்காய்

கிரானுவர் சப்பரத்துக்கள்
உழக்கிய மண்ணில்
சேறாகி கிரந்த வாடை
இன்னும் வீசிக் கொண்டிருக்கிறது.
அந்த நுகர்வில்
தமிழ் மனங்கள்
கொதித்துக் கொண்டிருக்கின்றன.

மரணங்களுக்கான காரணிகளைக்
கண்டு கொள்ள முடியாத வடிவங்களில்
உயிர்களைக் காவு கொண்டு
வீதிகளில் உலாவுகிறார்கள்.
நவீனமயப்படுத்தப்பட்ட உத்திகளால்
உண்மைகள் புதைக்கப்பட
அவல ஓலங்கள் ஆன்மாவைத் நட்டி
எழுப்பி
ஆரவாரப்படுத்துகின்றன.
நீதி கோரி நின்றவர்களின்
நியாயங்கள்,
கற்களாக,
போத்தல்களாக,
சீறிப்பாய்கின்றன
இந்த உணர்ச்சிக் கொந்தளிப்புக்கே
குண்டாந்தடிகளும்
கண்ணீர்ப்புகைகளும் ஏன் துப்பாக்கிகளும்
கூட
உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல்
தடுமாறுகின்றன.
உணர்ச்சிகள்
உணர்வுகளாகும்போது
சரியான கோட்டில் வடிவம் பெறுகிறது.
ஏனெனில்,
உரிமையை நினைத்தவன்
உயிரென்னி வாழான்
சாப்பந்துபோன சிபாழுதுகள்
மறு நாளின் புலர்வுக்காய்
எழுகின்றன.

முருகு பாரிமகன்

உழைப்பின் குறிக்கோளே, ஓய்வு ஈட்டுவது தான். – அரிஸ்டாட்டில்

குழந்தைநாதம்

நல்ல நட்பு வேண்டும்

குட்டிக்கதை

அந்தக் கிராமத்தில் ஏழைக்குடும்பத்தில் பிறந்து வளர்ந்த குமரன் என்ற வாலிபன் தொழில் இன்றி அலைந்து திரிந்தான். அவனுக்கு சிறு வயதிலிருந்தே ஓவியம் வரைவது மிகவும் பிடிக்கும். ஆனால் அதற்கான வசதியோ வாய்ப்போ அவனிடம் இல்லை

ஒரு நாள் ஊர்ப்பெரியவரிடம் குமரனது தாய் அவனுக்கு ஒரு வேலை போட்டுக்கொடுக்குமாறு வேண்டினாள். அவனை மாலை வீடு அனுப்புமாறு பணித்தார்.மாலை வீடு வந்த குமரனிடம் 'ஏதாவது சுயதொழில் செய்யவிரும்புகிறாயா? என்றார். ' எனக்கு ஓவியம் வரையத்தெரியும் .அதுக்கான பொருட்கள் வாங்கித் தந்தால் எனக்குப் போதும்' என்றான். 'சரி வீட்ட போ காலையில் வேலையாள் கொண்டு வந்து தருவான்' 'நன்றி' என்றவாறு விடைபெற்றுக் கொண்டான்.

காலையில் பொருட்களெல்லாம் வேலையாள் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப்போனான். குமரன் ஒவ்வொரு நாளும் நல்ல நல்ல காட்சிகளை ஓவியமாக வரைந்து விற்பனை செய்யத்தொடங்கினான். இவனது ஓவியத்திற்கான மதிப்பும், புகழும் உயரத்தொடங்கியது. ஓர் வானொலி நடாத்திய ஓவியப்போட்டியில் குமரனுக்கே முதற்பரிசுகிடைத்தது. அவனை அழைத்து பதக்கமொன்றை அணிவித்து அந்த வானொலி நிலையம் கௌரவித்தது. குமரன் நேராக பெரியவரிடம் சென்று நன்றிசொல்லி அவனது முயற்சிக்குப் பாராட்டையும் பெற்றுக்கொண்டான்.

வீட்டுக்குச்சென்று அம்மாவின் ஆசியைப் பெற்றவன் சாமிப்படத்தின் முன்பாகப்பதக்கத்தை வைத்துவிட்டு நண்பன் ஒருவனைச் சந்திக்கப் புறப்பட்டான். குமரனது தாய் விறகிற்குச்செல்ல அவதானித்துக்கொண்டிருந்த அயல் வீட்டுத் தாரணி குடிசைக்குள் புகுந்து பதக்கத்தை திருடிக்கொண்டு அதனை விற்பதற்காக அவசர அவசரமாகக் கடைக்குச் சென்றாள்.

தாரணி வரும் எதிர்த்திசையாலேயே குமரன் நண்பனைச் சந்தித்துவிட்டு வந்துகொண்டிருந்தபோதே அவசரமாக வந்துகொண்டிருந்த தாரணியைக் கண்டான். ஏன் என எண்ணுவதற்குள் அவளை. விலகிய கார் ஒன்று மோதிவிட்டுச்சென்றது.

ஓடிச்சென்ற குமரன் அவளைத்தூக்கியபோது அவளது கால்கள் இரண்டும் முறிந்ததைக்கண்டு கொண்டான். அவளது கையிலிருந்து நழுவிய பதக்கத்தைக் கண்ட குமரன் நடந்ததை ஊகித்துக்கொண்டான். அவளை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு அவசரமாக வெளியேசென்று பதக்கத்தை விற்று பணத்தை மருத்துவச்செலவுக்காக வைத்தியரிடம் கொடுத்தான். 'ஏது இவ்வளவு பணம்' "என்ர பதக்கத்தை விற்றுவிட்டேன்" " என்ன தம்பி பதக்கத்தையா?' என ஆச்சரியமாகக்கேட்டார்.

" பதக்கத்தை நாளைக்கும் பெறலாம். பதக்கத்தைப்பார்த்தால் ஓர் உயிரைத்தான் இழக்க நேரிடும். எனக்கு நல்ல நட்புதான் தேவை. நல்ல மனிதர்கள் தான்தேவை" என்றவாறு வெளியே அமர்ந்து கொண்டான்.

உள்ளே சென்ற வைத்தியர் நடந்தவைகளை தாரணியிடம் ஒன்றும் விடாது ஒப்புவித்தார். அப்போதே அவளுக்கு வேதனை நெஞ்சைஅரிக்கத்தொடங்கியிருந்தது. பின் உள்ளே வந்த குமரனைக்கண்டதும் " என்ன மண்ணிச்சிருடா. சின்ன வயசெண்டாலும் பெரிய மனசடா உனக்கு. என்ர சின்னத்தனமான வேலையால கடவுளே நல்ல தண்டனையை எனக்குத்தந்திட்டார். இனி ஒரு போதும் இப்படி ஆசைப்பட்டு ஒரு இழிவான செயலைச் செய்யமாட்டேன்" என கண்கலங்கினாள்.

வி.பானு

வாரம் ஒரு குறள்

மானம் உயிரை விடமேலானது என்று கூறப்படுகின்றது. மானம் என்பது உண்மையில் ஒழுக்கம்தான். தனது உடலில் ஒரு மயிர் உதிர்ந்தாலும் உயிர் வாழாதாம் கவரிமான்; கவரிமான் போல் நாம் வாழ முடியாது என்பதனால்தான் அடுத்தவர்களது மனது புண்படும்படி நடக்காமையும் தீயசொற்களைக் கூறாது வாழ்வதும் மானம் என்றும், ஒழுக்கம் என்றும் கூறப்படுகின்றது.

அதேநேரம் மானத்தோடு ஒழுக்கத்தோடு வாழ்வதாக எண்ணிக்கொண்டு, உலகத்திலிருந்து வேறுபட்டும், ஊரோடு ஒத்துவாழாமல் தனிமைப்பட்டும் வாழ்வோமானால், எவ்வளவுதான் கல்வி வேள்விகளில் சிறந்தவர்களாக இருந்தாலும் நாம் மூடர்கள் எனும் பதத்தினுள்தான் உள்ளடக்கப்படுவோம் என்பதைத் தான்,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

சொற்சிலம்பம் - 03

ம	சி	நீ	கோ	த	மோ	ன்
ம	மி	கா	நா	வ	ரா	ய
ன்	ச	கு	தி	ப்	கி	ப்
ம	ரு	வே	தி	ல்	த	க
ச	ன்	ரு	ன்	பு	ள்	ன்
பு	லோ	ந்	கே	ம	நோ	ம்
தீ	ல்	சா	ம்	ச	ன்	ா

சொற்சிலம்பம் - 06 இன் விடைகள்

01. பாய்.
02. பெட்டி.
03. சுளகு.

01. அன்னாசி.
02. மாதுளை.

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

சொற்சிலம்பம் - 06 இன் பரிசுக்குரியவர்

ப.பிரசன்னா,தரம் -5A,
வ/விபுலானந்தாக் கல்லூரி,வவுனியா

சொற்சிலம்பம் - 06 இன் பாராட்டுக்குரியவர்கள்

01) த. தனுஷான், தரம் -04^A, இராமநாதபுரம்.அ.க.பா

02) த.அனுஷியா, மு/'வி க் னே ஸ் வ ர ா வித்தியாலயம்.

03. செ. மேனகா, தரம் -03^A, கிளி/மத்தியகல்லூரி.

04. டயானா, ஓடக்கரை வீதி, சங்கானை.

05. நா.டிவானா, தரம் -02^B, மு/சிறிசுப்பிரமணியம் வித்தியாலயம்.

06. த.நதியா, யா/ஏழாலை ம.வி.

ஆபரணங்கள் மூன்று?

01) .....
02) .....
03) .....

நிறங்கள் இரண்டு?

01) .....
02) .....

சொற்சிலம்பம் -08
சுழநாதம்.
யாழ் சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- .....

முகவரி :- .....

.....

என்னுயிர் அம்மா

பத்து மாதம் சுமந்து
பாலூட்டிச் சீராட்டி
பக்குவமாய் வளர்த்தெடுத்த
பார் போற்றும் தெய்வமே!
பட்டதுன்பம் மறந்து
அன்புதனைப் பொழிந்து
அறிவுதனைப் புகட்டி
புகழாரம் சூட்டிடுவாள்.
என்னுயிர் அம்மா.

ச. சத்தியானந்தன்,
தரம் -4, கறுக்காய்த்தீவு

சிந்தனைக்குச் சில....

01) தேவைப்படுவதைச் சொல்லுங்கள்.
02) சொல்பவர் எவ்வாறு சொன்னாலும் நிதானமாகக் கேளுங்கள்.
03) மனதும் கண்ணும் விரும்பியதைப்பாருங்கள்.
04) எவருக்கும் ஒருபோதும் இடைஞ்சல் இல்லாது வாழுங்கள்.
05) துப்பரவாகவும் ஆடம்பரமில்லாமலும் அணியுங்கள்.
06) எப்பொழுதும் ஏதாவது கற்றுக்கொள்ளுங்கள்.
07) கௌரவத்துடன் சகலரையும் வரவேருங்கள்.
08) மற்றவற்றைப்போல் மனதையும் கழுவுங்கள்.
09) உடலைப்போல் மனதையும் துப்பரவாக்கிக் குளியுங்கள்.
10) இடைவேளையைப் பெறுவதற்கு துயிலுங்கள்.

- துவரி -

நகைச்சுவை

ராமு:- அந்தக் காலத்தில நாலு மைல் தூரம் நடந்து போய்த்தான் படிச்க இருக்கிறேன்.

தாமு :- சரிதான் அப்ப படிப்புக்கும் உங்களுக்கும் நீண்டதூரம் என்று சொல்லுறீங்கள்.

ந.நிரஞ்சன்.

இவ்விரு படங்களில் "09" வித்தியாசங்கள் உள்ளன அவற்றைக் கண்டுபிடியுங்கள்.

பண்டாரவன்னியன்

சிறுவர்களுக்கான சித்திரக்கதை -06

ஆக்கம், ஓவியம் எஸ்.கௌரவன்

பாடசாலை போகவேணும்

-ஆங்கிலத்தில் குவான்ஹுவா-

கண்களை சிமிட்டிக் கொண்டே சிறிது நேரம் நின்ற இரும்பன் திடீரென ஆசிரியர் சாய்க்கு அருகே ஓடிப்போய் அவரைக் கட்டிப் பிடித்தபடி "உங்களை நான் போக விடமாட்டேன்" என்றான். வியப்படைந்த ஆசிரியர் சாய், ஏன் அப்படிச்சொல் கிறாய் என்று கேட்க, அவரை மேலும் இறுகக்கட்டிப்பிடித் துக்கொண்ட இரும்பன், "நீங் கள் போனால் இராணுவத்தில் மீண்டும் இணைந்து விடுவீர் கள், பாடசாலையைப்பற்றி மறந்துவிடுவீர்கள்." என்று விம்மிக்கொண்டே சொன்னான். தான் வைத்திருந்த சாக்கை இரும் பன் காணும்படி உயர்த்திப்பிடித்த ஆசிரியர் சாய், அவன் காதுக் குள், "உங்களுக்குப் பாடப்புத்த கங்கள் எடுத்துவரவே நான் போகின்றேன். நாளைக்கு உங்க ளுக்கு வகுப்புகள் தொடங்கு கின்றன. நீங்கள் பாடசாலை வந்த தும் என் வாக்குறுதி நிறை வேறும்" என்று கிசுகிசுத்தார்.

கண்களில் மகிழ்ச்சி பொங்க, அவரை நிமிர்ந்து பார்த்த அவன், "பாடசாலை பற்றி நீங்கள் சொல்வது உண்மைதானே?" என்று கேட்டான்.

ஆசிரியர் சாய் அது உண் மைதான் என்று உறுதி கூறிவிட்டு நடக்கத்தொடங்கினார். அவர் பாலத்தைக் கடந்தபின் திரும்பிப் பார்த்தபொழுது இரும்பன் அந்த சிறுமியின் காதுக்குள் ஏதோ இரகசியம் கூறுவதைக் கண்டார். மலைப்பாதை வழியே அவர் பறக்கும் குதிரை மலையை நோக்கி சென்றுகொண்டிருக் கையில், பனி மூடியி ருந்த அந்த வனாந்தரங் களுக்கு மேலாக, அந்த சிறுமியின் சிரிப்புகள் அவருக்குக் கேட்டன. தொலை தூரத்திலே பீரங்கிகள் முழங்கின. இயந்திரத் துப்பாக்கிகள் சடசடத்தன. ஆனால் அருகில் இருந்த பனிபடர்ந்த காடுகளிலே எல்லாம் அமைதியாக இருந்தன.

தங்கள் வால்களை ஆட்டி யபடி பறந்து வந்த நீண்ட வால் பறவைகளின் கூட்டமொன்று கீச் கீச் என்று பெரிதாக ஓசையெழுப் பியபடி தலைக்கு மேலாகப்பறந்து சென்று மரங்களில் இறங்கி, மரக்கி ளைகளில் இருந்த வெள்ளிமய மான பூம்பனிகளை கீழே தள்ளி விட்டன. காற்றில் நடனமாடியபடி மெதுவாக கீழே இறங்கிய அவை, சூரிய ஒளிபட்டதும், வானவில் லின் வர்ணங்களைத் தெறிக்கச் செய்தன.

நீண்ட வால் பறவைகளி டையே ஒரு பரப்பரப்பு தெரிந்தது. அவை தம் கருமையான கண்கள் மின்ன அங்குமிங்கும் பார்த்தன. திடீரென மர உச்சிகளை விட்டுக் கிளம்பிய அவை, ஏதோ பயந்து விட்டதுபோல், உயர்ந்த இடுக்கின் மேலே வட்டமிட்டபடி பறந்து கொண்டிருந்தன.

இந்த பறவைகளினுடைய வழக்கத்துக்கு மாறான நடத்தை யைக் கண்ட ஆசிரியர் சாய், அது எதனால் நிகழ்ந்தது என்பதை ஆராயத்தரித்துக்கொண்டார். வடகிழக்கே இருக்கிற காட்டுக்கு அப்பால் எதிரிகளினுடைய வலு வான நிலையொன்று இருப்பதும்

வடமேற்கே மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள குன்றின் உச்சி யில் காப்பரண் ஒன்று அமைந் திருப்பதும், அவை இரண்டையும் இணைக்கும் அகழியொன்று இருப் பதும் அவருக்குத் தெரியும். எதிரி துருப்புகள் தங்கள் படை வரிசை யிலிருந்து முன்னால் வந்து விட்டார் களோ?

ஆசிரியர் சாய் ஒரு பெரிய பாறைக்கு பின்னால் இருந்த புதரி னுள் மறைந்து கொண்டார். உற்சாக மிழந்த ஏழு கைக்கூலிப்படையினர், பறைபிள்களை சுமந்தபடி அகழிக்கு பாதுகாப்பாக ரோந்து சென்று கொண்டிருந்தனர். குன்றின் மேலுள்ள காப்பரண் நோக்கி அவர்கள் சென்றுகொண்டிருந் தனர். இந்த கைக்கூலிப் படையினர் தான் அந்த நீண்டவால் பறவை களை பயப்படுத்தியிருக்கவேண் டும் என்று ஆசிரியர் சாய் நினைத்துக் கொண்டார்.

கைக்கூலிப்படையினர் சிறிது தூரம் போனதும் ஆசிரியர் சாய் அகழியைக் கடந்து ஒரு பள்ளத்தாக்கினுள் இறங்கி னார்.பின்பு பற்றைகளினதும் கொடி களினதும் உதவியோடு செங்குத் துச் சரிவில் ஏறிய அவர் குன்றின் உச்சியை அடைந்தார். குன்றில் அடர்த்தியாக வளர்ந்திருந்த பற்றை களின் காரணமாக எதிரிகள் அவ ரைக் காணவில்லை. அவர் தனது சாக்கை கீழே விரித்துவிட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள் ளவென அதன்மேல் அமர்ந்தார். அப்போது திடீரென அவருக்குப்

பின்னால் ஒரு சலசலப்புக் கேட் டது. அவர் திரும்பிப்பார்த்தார். ஆனால் எதையுமே காண வில்லை. காற்றில் புற்கள் அசைந்த ஓசைதான் கேட்டதோ? ஆனால் அதைத்தொடர்ந்து அடக் கப்பட்ட கிளுகிளுப்பான சிரிப் பொலியும் கேட்டது. அவர் சுற்றி வர எல்லாப்பக்கமும் பார்த்தார். பின்பு குன்றின் விளிம்புக்குச் சென்று கீழே பார்த்தார். எதையும் காணவில்லை. குழப்பமடைந்த அவர், திரும்பிப்போய், பாறை யின் மீது அமர்ந்துகொண்டார்.

மீண்டும் புற்களின் சரசரப்புக் கேட்டது. அந்த ஒலி இன்னொரு பெரிய பாறையின் பின்னால் இருந்து எழுவதுபோல் தோன் றியது. அவதானமாக அவர் அந்தப் பாறையின் பின்னால் சென்றார்.

(தொடரும்...)

தமிழில்
வி.பி.யோசப்

இம்சை ஒரு சித்திரவதை

இம்சை என்பதை சித்திரவதை துன்புறுத்தல் என்று சுருக்கமாக குறிப்பிட லாம். இது உடல, உளரீதியான பாதிப்புக் களை ஏற்படுத்துகிறது. ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் இம்சைக்கு உள்ளாக்கப்பட்டு இருப்பார்

கள். இம்சை என்பது பிழையான ஒன்று. அதில் குற்றவாளி இம்சைக்கு உட்பட்டவர் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இம்சைப்படுத்துபவன் நிட்சய மாக தண்டனை பெற்றே ஆகவேண்டும். வயது வேறுபாடு இன்றி இம்சைகள் நடக்கின்றன. இதில் சிறுவர்கள் தமக்கு ஏற்படும் இம்சைகளுக்கு தாம் என்ன செய்ய முடியும் என்பதைத் தெரியாதவர் களாக இருக்கின்றனர்.

சிறுவர்கள் மீது உடல், உள ரீதியாக இம்சைகள் ஏற்படுத்தப் படுகின்றன. குறிப்பிட்டுச்சொல்லப் போனால் சிறுவர்களை விளையாட விடாது விளையாட்டுப்பொருட்களைப் பறித்தல், தள்ளுதல் போன்றன கூட சிறுவர் மீதான இம்சைகளே. இவ்வாறான இம்சைகள் தொடர்ந்தால் அவர்கள் மனரீதியாக பாதிக்கப்படக் கூடியநிலை உள்ளது என்று அறியப்பட்டுள்ளது. எனவே சிறுவர் மீதான இம்சைகள் நிறுத்தப்பட வேண்டிய ஒன்று. சிறுவர் களை அடித்தல், தள்ளுதல், சேட்டை பண்ணுதல், ஊனத்தை கூறிப்பழித்தல் ஒதுக்கி வைத்தல் என்பன இம்சைகளில் சில. இவ்வாறு இவர்களுக்கு ஏற்படும் இம்சைகள் தொடர்பாக வெளியே தெரிவித்து சரியான தீர்வைப்பெற இவர்களுக்கு உரிமை உண்டு.

இம்சைப் படுத்து வோர் பல காரணங் களுக்காக இதைச் செய்கிறார்கள். இவர்கள் குழுக் களாகச் சேரும் போது இவர்களது துன்புறுத் தல்கள் அதிகரிக் கிறது. இவர்கள் இம்சை களைப் புரிந்து விட்டு தம்மைக் காத்துக்கொள் வதற்காக இச் செயலை இரகசியமாக வைத்திருக்குமாறு கூறுகிறார்கள். ஆனால் எதை இரக சியமாக வைத்திருக்க சொல்கிறார்களோ அதை தீர்வு கிடைக்கும் வரை வெளியே சொல்வது இம்சைக்கு உட்படுவோரின் கடமை என்பதை அவர்கள் உணர வேண்டும். இவ்வாறு இவர்கள் தமது இம்சைகள் தொடர்பாக தமக்கு நம்பிக்கை யான பெற்றோர்.ஆசிரியர்கள், நண்பர்கள், சிறுவர் உரிமை தொடர்பான அதிகாரிகளி டம் கூறி தமக்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும். இம்சைப்படுத்தலில் இருந்து விடுபட சாவு நிட்சயம் தீர்வாகாது. நிமிர்ந்து நின்று செயற்படுங்கள். சிறுவர்களுக்கு அனைத்து உரிமைகளும் உண்டு. இம்சைப்படுத்துவோருக்கு எதிராக கதைக்க முடியும். இதற்கு சட்டங் கள் துணைநிற்கும்.

சரி நீங்கள் இம்சைக்கு உட்பட் டால் என்ன செய்யமுடியும் என்று எண்ணுகிறீர்களா? கவலையை விடுங் கள். இதோ இம்சையில் இருந்து தப்ப சில வழிமுறைகள்.

01. இம்சைகளை முற்றாக வெறுக்கவும். வன்மையாக நிராகரிக்கவும்.
02. நீங்கள் இம்சைப்படுத்துபவரின் கோபத்திற்கு உள்ளாவதாகவோ அதனால் குழப்பமடைந்ததாகவோ காட்டிக்கொள்ளாதீர்கள்.
03. திரும்பி சண்டைக்குப் போகாதீர்கள்.
04. அவரைக் கண்டு கொள்ளவில்லை என்பதைக் காட்டுங்கள்.
05. இம்சைவாதிகள் உங்களை அதற்கு உட்படுத்தும் இடங்களில் தனியே நிற்காதீர்கள். இன்னுமொருவருடன் இருப்பதற்கு பழகிக்கொள்ளுங்கள்.
06. எப்பொழுதும் குழுக்களாகவே செல் லுங்கள். அவர்கள் உங்கள் நண்பர்களாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை.
07. இம்சை செய்பவர் சொன்னதை திரும் பச் சொல்லச்சொன்னால் அவரது வேகம் குறைந்து குழம்புவார். நீங்கள் சிறியவராக இருந்தாலும் கூட அதைக்காட்டிக்கொள் ளாதீர்கள். மிகவும் ஆளுமை உள்ளவராக காட்ட நெஞ்சை நிமிர்த்தி நேராக நடவுங் கள்.
08. கண்ணாடியின் முன் நின்று இதற் கான பயிற்சியைப் பெறுங்கள்.
09. நடப்பவை யாவற்றையும் நாட் குறிப்பில் எழுதி வையுங்கள்.
10. பெற்றோர் அல்லது ஒரு பெரியவரின் உதவியை நாடுங்கள். தனிமையில் இருந்து கஸ்ரப்பட வேண்டாம்.
11. உங்களது தன்னம்பிக்கையை வளர்க்கக்கூடிய செயற்பாடுகளில்ஈடுபடுங் கள்.
12. கூட்டமாக இம்சை செய்தால் கூட்டத்திலுள்ள பலவீனமானவரை இனம் கண்டு அவர் தனியாக இருக்கும்போது அவருடன் அன்பாக பேசுங்கள்.
13. நீங்கள் விரும்புபவர்களிடம் இது பற்றிக்கூறுங்கள். முடியாது விடின் சகல விபரங்களையும் கடிதத்தில் எழுதுங்கள். இது உங்கள் பாதுகாப்பிற்கு அவசியம்.

சரி நீங்கள் ஒரு இம்சை செய்ப வரானால் இன்றே உங்களை மாற்றுங்கள். உங்களில் பலர் இம்சை என நினைக்காது இதனைச்செய்திருக்கலாம். எனவே நேர்மையாக சிந்தித்து உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். சித்திரவதை செய்ப வர்களை இந்த உலகத்தில் எவருமே விரும்ப மாட்டார்கள். நீங்கள் இந்த உல கில் பிறந்த பலனைப்பெற நல்லவர் களாக வாழுங்கள். நான் பிறருக்கு தீமைசெய்யாத வன் என தனக்குத்தானே சொல்லிக் கொண்டால் நீங்கள் புனிதமடைவீர்கள். சித்திரவதை செய்யும் மனதை மாற்றிக் கொள்வீர்களானால் மிக இலகுவாக உங் களுக்கு நண்பர்கள் அதிகரித்து விடுவார் கள்.

சந்திரா - செல்வரத்தினம்
சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்

☞ பகலவன் மறைவு, பகல் பொழுதின் கவர்ச்சிமிக்க மரணப்படுக்கை. - கெமேலி பெயல் பெல்லி

தவிப்பு

அன்றொருநாள்
அவளைக் கண்டேன்.
அவளும் கண்டாள்.
தினமும் கண்ணெதிரே
காரிகையை காண்பதற்கு
கால்கடுக்க தவமிருந்தேன்
பதில் திருமணத்தில்
பார்க்கும் இடமெல்லாம்
பாவையவள் திருமேனி
என் கற்பனையோ
கவிதை வரிகளாய்...
நானும் மகிழ்ந்தேன்
அவளும் மகிழ்ந்தாள்
காலம் செய்த கோலம்
கவிதை அவளை நான் துறந்தேன்.
இப்போ.....
எட்டிப் பார்க்கும்
கவிதை வரிகள்
என்னைப் பார்த்து நகைக்கின்றன.
ஏன் இந்த தவிப்பு?

எஸ்.கனகா

புரிந்துகொள் கபட மனிதா

களவு, கொலை, கொள்ளை
செய்வதற்கா - உந்தன்
ஐம்பொறிகளை பிழையின்றி
பிரம்மன் படைத்துள்ளான்.
இல்லை மனிதா இல்லை.
நீதி நேர்மை தவறிட
உன் தூய உள்ளத்தாலும்
உந்தன் சரீர உழைப்பினாலும்
உலகத்தில் நீ ஒளிர்வதற்கே
உனை உலகில் உன்னத
மனிதனாய் படைத்துள்ளான்.

சி.விதுரன்.

வா அம்மா நீ தமிழ் இனமா...?

தாயறியேன் தந்தையறியேன்
தரணியிலே வாழ்கிறேன்
பேரு ஏழை, பட்டம் அகதி.
என்னைச் சொல்லிக் குற்றமில்லை,
என் செய்வேன்
நான் பிறந்திட்ட இனம்தானே காரணமாம்
மின்னறியேன் புகையிரதம் அறியேன்!
பள்ளிக் கூடமும் நான் அறியேன்.
எழுதப் படிக்கதெல்லாம் ஆலின் கீழிருந்து.
என்னவோ வாழுகிறோம்.

சு. சுகர்தன்.

விடிவைநோக்கி

உந்தப்பட்ட உணர்வோடு
நீழ்கிறதென் பயணம்
தூயரம் என்
தோழ்பிடித்திழுக்கிறது
இருப்பினும்
இடரிடும் கால்களை
தடவிக்கொடுத்தபடி
தூயர் வலித்துப் போகிறது மனம்
விடிவே முடிவாய்

கு-தவசீலன்

வரவேற்கிறாயே...

வண்ணமலர் பாதம் பதித்து
வசந்தி எனும் பெயர் எடுத்து
வந்த என்னை மயக்கவைத்து
வார்த்தையால் வரிந்து கட்டி
வரவேற்கிறாயே இது வரவேற்பா?

தகீதன்

ஊக்கமாத்திரை

தோல்விகளை வெற்றியாக மாற்றலாம்

நீங்கள் எப்போதாவது தோல்விகளை சந்தித்திருக்கின்றீர்களா? நிச்சயமாக சந்தித்திருப்பீர்கள். சிறுவயதில் விளையாட்டில்,படிப்பில், பின்னர் இளமைப் பருவத்தில் காதலில் இப்படி பல தோல்விகளைச் சந்தித்திருப்பீர்கள். வெற்றிகளும், தோல்விகளும் நிறைந்ததே மனித வாழ்க்கை - இன்பமும் துன்பமும் மாறி வருவதுபோல்!

சிலரது வாழ்வில் தோல்விகள் தொடர்கதையாவ துண்டு. தோல்விகளைக்கண்டு தளர்ந்து விடாதீர்கள்.

தோல்விகள் என்பவை வெற்றித் தீபத்தை அணைக்கும் சூறாவளியல்ல. சுடர்விட்டு எரிய வைக்கப்போகிற நெய் என்று உணருங்கள்.

தோல்விகளை கண்டு சலிப்பும், விரக்தியும் அடையாதீர்கள். அவை வெற்றிக்கான பாதையைத் திறக்கும் அனுபவங்கள். தோல்விகளையெல்லாம் வெற்றிக்கான ஏணியாக்குங்கள். தோல்வியைக்கண்டு வேதனைப் பட்டுக்கொண்டிருப்பதை விட்டு, அத்தோல்விகளுக்கான காரணங்களைக்கண்டு பிடியுங்கள். அக்காரணங்களைகளையும் போது வெற்றிக்கான பாதை திறக்கும்.

தோல்விகளைக் கண்டு தளர்ந்து விடாதீர்கள். முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காதீர்கள். தன்னம்பிக்கையை தளர விட்டுவிடாதீர்கள். தொடர்ந்து முயலும் போது சில நாட்களிலேயே வெற்றியடைய உங்களால் முடியும் என்பதை உணர்வீர்கள். வாழ்வில் தோல்விகளால் நாம் தளர்ந்துவிட்டால் முன்னேற்றம் மறுக்கப்படுவது மட்டுமல்ல எமது தற்போதைய நிலை கூட ஈடாட்டம் காணலாம்.

போராட்டம், எதிர்நீச்சல், இல்லாமல் வாழ்வில் முன்னேறுவது பகற்கனவே. வெற்றித் தேவதை கைக்கு எட்ட வேண்டுமா? தொடர்ந்து போராடிக்கொண்டே இருங்கள்.

தோல்வி என்பது எமது உடலில் சுறுசுறுப்பை ஏற்படுத்தும் மருந்தாக இருக்க வேண்டும். மருந்து கசப்பானது தான், எனினும் சுகத்தை தருகிறதல்லவா? மரக்கிளையை வெட்டும் போது மரம் சிறுக்கிறது. ஆனால் அப்படி வெட்டியதால் புதிய கிளைகள் உருவாகி இன்னும் செழித்து வளருமல்லவா? தோல்வி என்பது அடிமரத்தை சாய்ப்பதில்லை.

தோல்விகளைக் கண்டு சலிப்புற்று அரைகுறை வெற்றிகளில் திருபதியடைந்து விடாதீர்கள். சுதந்திர தாயகத்துக்கு ஈடாகமாவட்ட சபைகளும், மாகாண சபைகளும் ஆகி விடுமா, என்ன?

தோல்விகளைக்கண்டு துவண்டு விடக்கூடாது. கவிஞர் கூறுவது போல், கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு, காரியம் நடக்கட்டும் எழுந்துவிடு.

கடுமையான முயற்சிக்குப் பின்னரும் தோல்வி வரலாம். தோல்விக்குப்பின்னும் தொடரும் முயற்சி வெற்றியைத் தரும் நிச்சயம்!

தோல்வியை நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டிராமல் கிட்டப்போகும் வெற்றியில் குறியாகஇருங்கள்.வெற்றிக்கனி ஆனந்தமான சுகத்தைத் தரத் தான் போகிறது.

Dr.ச.முருகானந்தன்

சொல்லவேண்டிவந்த பொய்கள்

பாடசாலை காலத்தில் மாணவர் பாசறை என நாம் ஒரு ஊரில் பாசறை அமைத்திருந்தோம்.

அங்கு மாணவர்களின் தேவைகளுக்கான களஞ்சியத்தில் தேவையான உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தது.

மாலை நேரங்களில் எனது நண்பன் ஒருவன் தினமும் எப்படியாவது பிஸ்கட்டுக்களை களஞ்சியத் திலிருந்து எடுத்து வந்து விடுவான் .பின்னர் நண்பர்கள் எல்லோரும் ஒன்றாக அடிப்டு வோம். அது ஒரு மகிழ்ச்சியான நாட்கள்.

அப்படித்தான் ஒரு நாள் நண்பன் களஞ்சியத்திலிருந்து பிஸ்கட்டை எடுக்கும் போது பொறுப்பாசிரியரிடம் வளமாக மாட்டிக் கொண்டான்.

அன்று ஆசிரியர் நண்பனை பேசிவிட்டு சென்று விட்டார்.

இப்படி எனது நண்பன் இரண்டுமுறை ஆசிரியரிடம் அகப்பட்டுக்கொண்டான்.

இதனால் இறுதியாக ஆசிரியர் எனிமேல் மூன்றாவது தடவையாக பிஸ்கட் எடுப்பதை கண்டால் வீட்டுக்கு திருப்பி அனுப்பிவிடுவேன் என எச்சரித்து சென்றார்.

ஆனால் நண்பனோ மூன்றாவது தடவையாகவும் பிஸ்கட்டை எடுத்து வந்து விட்டான்.

இந்தவிடயம் எப்படியோ ஆசிரியருக்கு தெரிந்துவிட்டது. ஆசிரியர் மாணவர்களிடையே சோதனை செய்துகொண்டு வந்தார். எங்களுடைய கொட்ட கைக்கும் வந்துவிட்டார். எனது நண்பனின் கையில் பிஸ்கட்பை.

ஆசிரியர் பிடித்தால் நண்பனை வீட்டுக்கு அனுப்பி விடுவார். இதனை அவதானித்த எனது இன்னுமொரு நண்பன் விரைவாக நண்பனின் கையிலிருந்த பிஸ்கட் பொதியை பிடுங்கி தான் வைத்துக்கொண்டான்.

ஆசிரியர் இரண்டாவது நண்பனின் கையில் பிஸ்கட்பை இருப்பதைப் பார்த்து யார் இதனை எடுத்தது எனக்கேட்டார்.

எனது இரண்டாவது நன்பன் எவ்வித தயக்கமுமின்றி தான் தான் எடுத்ததாகக் கூறினான். நாங்கள் எல்லோரும் மெய்சிலிர்த்துப்போய் நின்றோம்.

வேமினி

குறுக்கெழுத்துப்போட்டி - 43

01						07
08	09			12		
15					20	
22						
		31				
36						
		45				

இடமிருந்து வலம்

01. இராசிகளில் ஒன்று.
03. சண்டைக்கு எதிரானது.
15. வகை குழம்பியுள்ளது.
20. பயம் தலைகீழாகவுள்ளது.
22. இரக்கம் குழம்பியுள்ளது.
31. நேரம் காட்டும் கருவி குழம்பியுள்ளது.
36. மலை உச்சி குழம்பியுள்ளது.
45. கற்புடையவள்.

மேலிருந்து கீழ்

01. இருக்கை
07. இடையூறு.
09. பழவகைகளில் ஒன்று.
12. அவமானம் குழம்பியுள்ளது
36. சிறுகுழந்தை.

குறுக்கெழுத்துப்போட்டி இல.41 இன் விடைகள்

இடமிருந்து வலம்

01. உத்தரவாதம்
08. பல்லவர்
15. நகுலம்
20. ஆதி
25. வரையறை
30. தியாகம்.
41. ஊமை

மேலிருந்து கீழ்

01. உபநயணம்
07. திவசம்
16 குருதி
31.யாகம்
32.கரம்
33.ஆயம்
41.ஊர்
42.தீமை

இளையவர்களே! மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி,இல.43
வேள்விநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

குறுக்கெழுத்துப்போட்டி இல.41 இன் பரிசுக்குரியவர்

S. யசோ,
கணேசபுரம்,
கிளிநொச்சி.

குறுக்கெழுத்துப்போட்டி இல.41 இன், பாராட்டுக்குரியவர்கள்.

கண்ணன், பழம்பாசி, நெடுங்கேணி.
தர்சினி, புந்தோட்டம், வவுனியா.
ஆ.தீபன், உருத்திரபுரம், கிளிநொச்சி.
காயத்திரி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ம.ஆனந்தன், சுழிபுரம், யாழ்.
மாலா, யோகபுரம், மல்லாவி.

ஒரு கடமையை ஆற்றியதற்கு வெகுமதி, மற்றொரு கடமையை நிறைவேற்றும் ஆற்றல். - ஜார்ஜ் ஈலியட்

மீண்டும் உருவம் உள்ளடக்கம்

உருவமா? உள்ளடக்கமா என்ற வாதம் எமது விடுதலைப்போராட்ட எழுச்சியுடன் சற்று தணிந்து போய்விட்டது என்று சென்ற வாரம் குறிப்பிட்டேன்.

அதன் பின்னரும் அது சில காலம் நீடித்தது. அதன் ஒரு பகுதிதான் 1977இல் அ.ஜேசுராசா அவர்கள் தெரிவித்த கருத்து. அதற்கு முன்னோடியாகவும், பின்னோடியாகவும் சில கருத்துக்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை நாம் பார்க்க வேண்டும். ஆனால் அதற்கு முன்னர் உருவமா? உள்ளடக்கமா என்ற வாதத்தின் வீழ்ச்சி எப்போது ஏற்பட்டது என்பது தொடர்பில் கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள் க.சட்டநாதன் அவர்களின் சட்டநாதன் கதைகள் என்னும் நூலுக்கு எழுதிய முகவுரையின் ஒரு பகுதியைப் பார்ப்போம்.

"சட்டநாதன் அவர்கள் படைப்புத்துறையில் அடியெடுத்து வைக்கத்தொடங்கிய 1970 களின் ஆரம்ப ஆண்டுகளில், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத்துறை ஒருமுக்கிய வரலாற்றுக் கட்டத்தை எய்தியிருந்தது. 1930களின் பிற்கூற்றில் முதல் மூவர் எனப்படும் 'இலங்கையர்கோன்' 'சம்பந்தன்' சி.வைத்திலிங்கம் ஆகியோரின் கைவண்ணத்தால் வடிவச்செம்மையுடன் பயிலத் தொடங்கிய எழுத்துச்சிறுகதை '1950-60' காலகட்டத்தில் ஈழமண்ணின் சமூக பண்பாட்டுப் பிரச்சினைகளில், ஆழமாகக் காலூன்றிய போது, 'உருவமா? உள்ளடக்கமா?' எதற்கு முதன்மை? என்ற வாதம் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. இந்த வாதப்பிரதிவாத அலை ஓரளவு ஓய்ந்து கலைத்தன்மை, சமூக அக்கறை ஆகிய இரண்டுமே ஒரு கலைப் படைப்பின் சமநிலைக்கூறுகள்' என்ற உணர்வோட்டம் தலையெடுத்த காலப்பகுதியாக 1970களைக் குறிப்பிடலாம். இவ்வாறான உணர்வோட்டத்துடன் இலக்கிய அரங்கில் அடியெடுத்து வைத்தமுதல் தலைமுறையினில் ஒருவராகவே திரு.க.சட்டநாதன் எமக்கு அறிமுகமாகிறார். ஆழமான மனிதநேயம், அதனை அனுபவ முழுமையுடன் வாசகனுக்குத் தோற்ற வைக்கவல்ல சொல்நயம் என்பன இவரின் படைப்பாளுமையின் சிறப்புக்கூறுகள். இவற்றை உணர்வுபூர்வமாகப் பேணிக் கொள்வதில் அவர் காட்டிவந்துள்ள அக்கறையே வரலாற்றில் அவருக்குத் தனியான அடையாளத்தை வழங்கியுள்ளது."

1970களில் உருவம், உள்ளடக்கம் தொடர்பான வாதத்திற்கு ஒரு நிலைத்தீர்வு கிடைத்த சூழ்நிலையை வேறுவிதமாக 1970 களில் தகவம் பரிசுக்கதைகள் தொகுதி "02"க்கு வழங்கிய மதிப்பீட்டில் கலாநிதி க.அருணாசலம் அவர்கள் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

"இத்தொகுதியிலமைந்துள்ள கதைகளை ஒட்டுமொத்தமாக நோக்கும்போது சில உண்மைகள் புலப்படும். 'கலை இலக்கியங்கள் சமகால நிலைமைகளைப் பிரதிபலிப்பதுடன் அமையாது அவற்றை அலசுவதாகவும் இருக்கும் நிலைமைகளிலும் பார்க்க, உயர்ந்த நிலைக்கு முன்னெடுத்துச் செல்ல முயல்பவையாகவும் பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணங்களையும் அவற்றுக்கான தீர்வு மார்க்கங்களையும் கலைத்துவம் குன்றா வகையில் விண்டுகாட்ட முயல்பவையாகவும் அமையும், ஆலமதல் வேண்டும் என்னும் கருத்து மேலோங்கி வரும் இற்றைநாளில் அதற்கேற்ற வகையில் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கதைகள் பலவும் அமைந்துள்ளமை விதந்து கூறத்தக்கதாகும்.

"கடந்த பதினான்கு ஆண்டுகளுள் வடக்கு கிழக்குப் பகுதிகள் உட்பட இலங்கை முழுவதிலும் மாற்றங்கள் பல வெகுவேகமாக இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. பல வழிகளிலும்,

பலதுறைகளிலும் அடக்கிஒடுக்கப்பட்ட சிறுபான்மை இன மக்கள் தமது உரிமைகளின் பொருட்டும் விடுதலைக்காகவும் பல தசாப்தங்களாக நடாத்தி வந்த சாத்வீகப் போராட்டம் 1970களின் பிற்பகுதியிலிருந்து இளைஞர்களின் ஆயுதப்போராட்டமாகப் பரிணமிக்கலாயிற்று. 1980களில் மிகஉக்கிரம் பெற்றதுடன் அனைத்துலகின் கவனத்தையும் ஈர்க்கலாயிற்று. போராட்டச் சூழ்நிலைகளினாலும் நாட்டில் நிலவிவரும் பொருளாதார மந்தநிலையினாலும் பிற காரணங்களினாலும் ஆரம்பக்கல்வி அறிவை பெற்றவர்களும், உயர்கல்வி அறிவைப் பெற்றவர்களுமான இளந்தலை முறையினர் பல்லாயிரக்கணக்கில் அகதிகளாகவும் தொழில் தேடுவோராகவும் கடல் கடந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மேற்கத்தைய நாடுகள் பலவற்றுக்கும் செல்லலாயினர். இவை காரணமாக நாட்டின் சகல சமூகங்களிலும் சமூக அமைப்புக்களிலும் சமுதாயமதிப்பீடுகள், நியதிகள், நம்பிக்கைகள், ஆசாரங்கள் முதலியவற்றிலும் மாற்றங்கள் பல வேகமாக ஏற்படலாயின.

1946 இல் இலங்கையில் தோற்றம் பெற்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இலங்கையின் கலை இலக்கிய மேம்பாட்டுக்கு உழைக்கத் தொடங்கியது. குறிப்பாக 1956 களில் அது எழுச்சி பெற்றது.

ஈழத்து மண்வாசனையுடன், ஈழத்து மக்களின் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி நமது நாடு, நமது மக்கள், நமது பொருண்மியம் என்ற உணர்வுடன் புறப்பட்ட அவ்வமைப்பு இலங்கைத்தேசியம் என்ற மாயத்தினுள் சிக்கி தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தின் பால் தன் பார்வையை செலுத்த முடியாததால் அன்னியப்பட்டு போனதே தவிர ஈழத்து மண் வாசனைக்கு ஒருவழிகாட்டியாக அமைந்தது உண்மையே.

அத்தகைய முற்போக்கு இலக்கிய வாதிகள் இந்த உருவ, உள்ளடக்க பிரச்சினைகளில் சிக்குப்பட்டே இருந்தனர்.

முற்போக்கு எழுத்தாளரான நீர்வை பொன்னையன் அவர்களின் மேடும் பள்ளமும் என்னும் சிறுகதைத் தொகுப்புக்கு முற்போக்கு எழுத்தாள சங்கச் செயலாளர் பிரேம்ஜி அவர்கள் வழங்கிய முன்னுரையின் ஒரு பகுதியின் வருமாறு அமைகின்றது.

"முற்போக்கு எழுத்தாளர்கள் உள்ளடக்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் எழுத்தாளர்கள் மீது, இலக்கிய உருவத்தையும் இலக்கியத் தரத்தையும் உதாசீனம் செய்வதாக குற்றம் சுமத்தப்படுகிறது. இது முற்றிலும் தவறு வெறும் கருத்துகளும் உள்ளடக்கமும் இலக்கியமாகி விடுவதில்லை. இவை இலக்கிய உருவைப் பெறும் போதுதான், இலக்கியமாகின்றன. இலக்கிய அந்தஸ்த்தைப்பெறுகின்றன. கருத்துக்களுக்கும் உள்ளடக்கத்திற்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்கும்போது இலக்கியத்தரத்தைப்பெற்ற இலக்கியங்களைப் பொறுத்தே நாம் பேசுகின்றோம். இலக்கியதரத்தைப்பெறாத எதையும் இலக்கியமாகக் கொள்ளமுடியாது"

இதே முற்போக்கு இலக்கியத்தின் இன்னொரு முன்னோடியான அ.ந.கந்தசாமி தனது "ஈழத்து சிருஷ்டி இலக்கியத்திற்கு குழி தோண்டும் முயற்சி" என்னும் கட்டுரையில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

இலக்கியப்பகிர்வு

— சிதம்பரன்

"இன்று ஈழத்திலும் தென்னகத்திலும் சிருஷ்டி இலக்கியத்துறையில் ஈடுபட்டு தமிழுக்கு பயனுள்ள சேவைசெய்து வருபவர்களை மூன்று பிரிவினராக வகுக்கலாம்.

01) "கலை கலைக்காவே என்ற தத்துவத்தை மேற்கொண்ட கலை பிரக்ஞையுடன் இலக்கிய சிருஷ்டியில் ஈடுபட்டுள்ளவர்கள். இவர்கள் மறுமலர்ச்சிக்காரர்கள். இவர்கள் மணிக்கொடி சகாப்த எழுத்தாளர் என்று பலவாறாக அழைக்கப்படுகிறார்கள். க.நா. சுப்பிரமணியம் தொடக்கம் நமது சோ.நடராசா, கனக செந்திநாதன் வரை ஏராளமான தமிழ் எழுத்தாளர்கள் இத்தொகுதியில் அடங்குவர்.

02) "கலை ஒருபொழுது போக்கு சாதனம்" என்ற கருத்துடையவர்கள் இரண்டாவது சாரார். கல்கி, நாடோடி போன்றவர்கள் தொடக்கம் யாழ்ப்பாணத்து மகாதேவன் வரை இக்கருத்துக்கொண்ட பலர் இன்று தமிழ் இலக்கியச் சிருஷ்டியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

03) மூன்றாவது சாரார் கலையை "ஒரு சமுதாய சக்தி" என்று நம்புவர்கள். இவர்கள் கருத்தில் கலை என்பது ஓர் ஆயுதம். முற்போக்கான ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பணியில் கலைஞர்கள் முன்நின்று உழைக்கவேண்டும் என்று வற்புறுத்துபவர்கள் முற்போக்கு எழுத்தாளர்கள் என்று அழைக்கப்படும் இவர்கள் அணியில் தமிழகத்தின் சிதம்பர ரகுநாதன் தொடக்கம் ஈழத்து டொமினிக் ஜீவா, டானியல் வரை பலர் பங்குபற்றி வருகின்றார்கள்.

படித்ததில் பிடித்தது

மொழிபெயர்ப்புக் கவிதை

நம்புதல்

நான்கு வயது மகனை
தூக்கி
கதிரையில் நிறுத்தினேன்
அங்கிருந்து குதி
என்றேன்.

முதல்முறை...
இரண்டாம் முறை...
மூன்றாம் முறை...
அவன் விழாமல்
ஏந்திக்கொண்டேன்.

நான்காவது முறை
ஏந்தவில்லை
விழவிட்டேன்
அவன் அழுதான்.

அவனுக்கு நான்
சொன்னேன்,
என்னை...
அம்மாவை...
எவரையும்... நம்பாதே!
உன்னை மட்டுமே
நம்பு!

ஆங்கிலம் மூலம்:
நாஸ்லி காஸிம்
தமிழில்:
வின்சென்ற் புளோறன்ஸ்.

பொறுக்கி எடுத்த பூக்கள்

கொஞ்சம் சிரிங்க...

நமது மொழியை ஏன் 'தாய் மொழி' என்று சொல்கிறோம்?
அப்பாவுக்கு அதைப்பேச வாய்ப்பே இல்லாததால் தான்!

* * *

ஒரு பைத்தியம்:- ஏனப்பா கண்ணாடியின் முன் கண்ணை மூடிக்கொண்டு நிக்கிறாய்.
மற்ற பைத்தியம்:- இல்லையப்பா.... நித்திரை கொள்ளேக்கை என்னை முகம் எப்படி இருக்கு மென்று பார்க்கிறேன்.

கொஞ்சம் கவிதை படிங்க...

உழைப்பவனின் கை ரேகை நதிகளில்
நாட்டுக்கப்பல் நகர்ந்துவருகிறது.

* * *

கையெழுத்துப் போடிடவும்
கற்காத விவசாயி
வையகத்தின் தலையெழுத்தை
வயல் வெளியில் எழுதுகின்றான்
-மேத்தா

கொஞ்சம் சிந்தியுங்க...

பணம் பாதாளம் மட்டும் பாயும்
பாசம் எது மட்டும் பாயும்?
பதவியில் இருக்கு மட்டும்....

* * *

மூன்றாவது உலகப்போர் மூண்டால்...?
தோற்றவன் சாம்பல்.... வென்றவன் கரி

* * *

மனிதனின் ஞாபக சக்தி எப்படிப்பட்டது?
தன்னைப் பெற்ற வயிற்றை மறந்தாலும்
தன் வயிற்றை மறக்கான்.... -மகுடியா

கொஞ்சம் குழம்புங்க...

பொய் உண்மை தானா என்பதை அறிய
உண்மையான உண்மையையும்
பொய்யான பொய்யையும் உண்மையாகத்
தெரிந்து கொள்ள வேண்டும். பொய்
உண்மை போன்றும் உண்மை பொய்
போன்றும் தோன்றுமிடத்து உண்மையின்
உண்மையையும் பொய்யின்
உண்மையையும் உண்மையாக உணர
முடியாத நிலையில் எல்லாமே பொய்யாக
தோன்றும் உண்மை
உண்மையானதாகிவிடும்.

கொஞ்சம் அதிந்திருங்க...

இறந்த காலம் ஒரு கதை.
எதிர்காலம் ஒரு கற்பனை.
நிகழ்காலம் ஒன்றே உண்மை.
நிகழ்காலத்தில் நிற்பவனே ஞானி.

* * *

ஒரு மரம் ஒரு கோடி தீக்குச்சிகளை
உருவாக்கும். ஒரு தீக்குச்சி ஒரு கோடி
மரங்களை எரித்தழிக்கும்.

கொஞ்சம் புன்னகைங்க...

ஒரு கள்ளுக் கொட்டிலின் முன்
எழுதப்பட்டிருந்த வாசகம்.
"உத்தரவின்றி உள்ளே வாருங்கள்
சச்சரவின்றி வெளியே போங்கள்"

* * *

ஒரு சிகையலங்கார நிலையத்தில்
எழுதப்பட்டிருந்த வாசகம் "முடிமன்னா
முடியிழக்கும் இடம்"

☞ ஏழை உண்மையை சொன்னாலும், எவரும் அவனை நம்புவதில்லை. – மொனாட்டர்

முன்பள்ளிகள் இலக்கை எட்ட எதிர்கொள்ளும் சவால்கள்

தமிழர் தாயகப் பிரதேசங்களில் முன்பள்ளிக் கல்வி சமகாலத்தில் கணிசமான வளர்ச்சியினை எட்டியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. 1990 களின் முன்னுள்ள இதன் செயற்பாடுகளுக்கும் தற்போதைய இதன் செயற்பாடுகளும் கணிசமான வளர்ச்சியினை எட்டியிருப்பதற்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுக்காக பல்துறை நிறுவனங்களும் தமது செயற்பாடுகளை ஒருங்கிணைத்துள்ளமையே இதன் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

குறிப்பாக தமிழர் தாயகப் பிரதேசங்களில் இதன் வளர்ச்சியினை மிகஅதிகளவில் குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு உள்ளூர் அரசசார் பற்ற நிறுவனங்கள் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் நிதி அனுசரணையுடன் பலமாக மேற்கொண்டு வருகின்றன.

குழந்தை பள்ளிக்கு செல்வதற்கு முன் தன்னை ஆயத்தப்படுத்தும் அல்லது ஆயத்தப்படுத்தத் தூண்டும் ஒரு களமாகவே முன்பள்ளி கல்வித் திட்டம் அமைகின்றது. மகிழ்ச்சிகரமான கற்பித்தலின் சூழலில் சிறார்களை வளர்க்கும் சூழலும் இதுவே.

குறிப்பாக தமிழர் தாயக மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டு,அம்பாறை மாவட்டங்களில் இதன் முழு வேகத்துடனான செயற்பாடுகளை அவ்வவ் மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையங்களினூடாக அறியமுடிகின்றது.

எனினும் இதன் வளர்ச்சியை மேலும் வீச்சாக்குவதற்கு முன்பள்ளிக்கல்வி மேம்பாடு நிலையத்தினரும் அதனோடு இணைந்த பொது நிறுவனங்களும் அதிகமான அக்கறையும் ஆர்வமும் காட்டப்பட வேண்டிய தேவையுள்ளதாக உணரப்படுகின்றது. முன் பள்ளிகளுக்கிடையிலான சீரானகட்டமைப்பை முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினர் (PSEDC) உருவாக்குவதற்கு முன்பு பல்வேறு நிறுவனங்களும் அமைப்புக்களும் இம் முன்பள்ளி கல்விச் செயற்பாட்டினை ஏதோ ஒரு வகையில் மேற்கொண்டே வந்தன.

ஆனால் அவை ஓரளவு முன்பள்ளிக் கலைத்திட்டத்திற்கு அமைவாக இருந்த போதிலும் அம் முன்பள்ளிகளை நடாத்திய நிறுவனங்களும், அமைப்பினரும் அவர்களதுஅமைப்பு கோட்பாடுகளுக்கு உட்பட்டதாகவே இம் முன்பள்ளிகளை நடத்தினர். இது மேற்கொண்ட ஆய்விலிருந்து கிடைக்கப்பெற்ற பெறுபேறு.

முன்பள்ளிகளை ஒன்றிணைக்கும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஒருங்கிணைப்புக்கு ஒத்திசைவாக ஏனைய அமைப்புக்களின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளும் இணையும்போது தான் முன்பள்ளிக் கல்வி மேம்பாடு எட்டப்படவேண்டிய இலக்கை அடையும் என்பது ஒரு எதிர்பார்ப்பு.

இந்த எதிர்பார்ப்புக்கள் சரியானதாகவும், நியாயமானதாகவும் தெரிவதற்கு காரணங்கள் உண்டு. ஏனைய அமைப்புக்கள் தங்கள் கோட்பாடுகளுக்கு அமைவாக நடத்திய முன்பள்ளிகளின் செயற்பாடுகள் வித்தியாசமானதாக அமைந்திருக்கின்றன. ஆசிரியர்கள் தெரிவு செய்தல், கற்பித்தல் முறைகளில்காணப்பட்ட

வேறுபாடுகள், நேரவரையறை மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி, ஏன்கொடுப்பனவுகளும் கூட இதனுள் அடங்கும்.

இவ்வாறான வேறுபாடுகளுக்கு மத்தியில் பல்வேறுகோணங்களில் பயிற்றுப்பட்ட சிறார்கள் அரச பள்ளிகளுக்கு அதாவது ஆண்டு ஒன்றுக்கு செல்லும் தறுவாயில் அவர்கள் தாங்கள் ஏற்கனவே இருந்த தரத்தின் அடிப்படையில் வெவ்வேறு தரங்களின் இணைகின்றனர். இதன் போது ஆண்டு ஒன்றில் கற்பிக்கும் ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியைகள் கூட பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

எனவேதான் சிறார்களின் எதிர்காலவளர்ச்சி கருதி முன்பள்ளிக் கல்வித்திட்டம் ஒரு ஒருங்கிணைந்த கலைத்திட்டத்திற்கு அமைவாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதன் அவசியம்உண்மையானதாக வெளிப்படுகின்றது.

எஸ். வி. ஆர். கஜன்

கடந்தகால முன்பள்ளிச் செயற்பாடுகள் தொடர்பாக தமிழர் தாயகமாவட்டங்களில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சர்வதேச தொண்டு ஸ்தாபனங்களின் நிதி அனுசரணைகள் மூலம் போதியளவு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. (யுனிசெப், SCF நிறுவனங்கள் இதில் முதன்மை வகிக்கின்றன.) அப் பயிற்சிகளைப் பெற்று கற்பித்த ஆசிரியர்கள் பெரும் பாலானோர் மேல்குடியேற்றத்தின் பின் தமது சொந்தஇடங்களுக்கு திரும்பியுள்ளதால் ஏற்கனவே இருந்த பிரதேசங்களில் முன்பள்ளி ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை அவதானிக்க முடிகின்றது.

இது இவ்வாறு இருக்க மீள்குடியேறிய பிரதேசங்களில் புதிதாக முன்பள்ளிகள் பல நிறுவப்பட்டுள்ளதாலும் ஆசிரியப் பற்றாக்குறை நிலவுவது தவிர்க்க முடியாததொன்றாகி விடுகின்றது.

இதனை ஈடுசெய்ய புதிய தகைமையுடைய ஆசிரியர்களை இணைப்பதன் மூலமும் அவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்குவதன் மூலமும் முன்பள்ளி ஆசிரியர் வெற்றிடங்களை சீர்செய்ய முடியும்.

ஆனால் முன்பள்ளி ஆசிரிய வெற்றிடங்கள் ஏற்படுவதற்கு மற்றுமொரு காரணமும் உண்டு. போதிய கொடுப்பனவு இல்லாததே அதன் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. முன்பள்ளிகளை நடாத்தும் ஒவ்வொரு நிறுவனங்களும் தங்களது நிறுவனநிதிநிலைக்கேற்ப கொடுப்பனவுகளை வழங்குகின்றன. உதாரணமாக உள்ளூராட்சி பிரதேசசபைகளினால் நடாத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அரசஆசிரியர் சம்பள அளவுத்திட்டத்துக்கு அமைவாக கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

உள்ளூர் அரச சார் பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அவ்வவ் நிறுவனங்கள் தீர்மானிக்கின்ற கொடுப்பனவுகளுடன் சிலநிறுவனங்களில் ஆகக்குறைந்த கொடுப்பனவுகளும் அதிலும் சில நிறுவனங்கள் நடாத்தும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பல மாதங்களாக குறைந்தளவு கொடுப்பனவுகள் கூட வழங்கப்படாத நிலையும் காணப்பட்டுள்ளன. இது முன்பள்ளி ஆசிரியர்களின்தரப்பிலிருந்து வெளிப்படுகின்ற ஆதங்கம். இதனால் உளரீதியாக பாதிப்படைந்த முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்ந்து தமது பணியினை சீராக செய்ய முடியாது. பயிற்சிகள் பெற்றிருப்பினும் தமது பணிநிலையில் இருந்து இடைவிலகும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன.

இதனை சீர்படுத்த முன்பள்ளிகல்வி மேம்பாட்டு நிலையங்கள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் இறங்கியுள்ள போதிலும் அது வெற்றிபெற்றதாக இதுவரை தகவல்கள் எதுவுமில்லை.

நடந்துமுடிந்த ஆசிரியர் தினத்தின் போது முன்பள்ளிகளை ஒன்றிணைக்கும் அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதி ஒருவர் உரையாற்றியிருந்தார். "முன்பள்ளி ஆசிரியர்கள் முதன்மையானவர்கள். இவர்களின் சேவை பாராட்டுதற்குரியது. நாளைய தலைவர்களான இன்றைய குழந்தைகளை வளப்படுத்தும் பொறுப்பு அவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது" இந்த உரை உண்மையானதுதான்.

அவ்வாறான முன்பள்ளி ஆசிரியர்களின் மேம்பாட்டிலும் அந்நிறுவனம் அதீத அக்கறை எடுக்க முனைந்தால் மட்டும் போதாது, தொடர்ந்து முயற்சிசெய்து அவர்களின் கொடுப்பனவுகளை சீர்படுத்த வேண்டும்.

அப்போதுதான் முன்பள்ளி கல்விமேம்பாடு என்பது எதிர்பார்த்த" இலக்கைஅடையும்! அடையமுடியும்.

எனவே ஒருங்கிணைந்த முன்பள்ளி கல்வித் திட்டத்திற்கமைவாக முன்பள்ளிகளை நடாத்தும் நிறுவனங்களின் புரிந்துணர்வுடன் ஒன்றிணைந்து ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், கொடுப்பனவுகளை உரியநிறுவனங்கள் அனுசரணையுடன் சீராக்கும் தறுவாயில் தான் முன்பள்ளி கலைத்திட்டமும், கல்வித்திட்டமும் உரிய இலக்கை அடையும் என்பது தான் இன்றைய தேவையும், எதிர்பார்ப்புமாகும்.

சரண்யாவின் கடிதத்திற்கு பதில்க்கடிதம்...

அரச தாதிய உத்தியோகத்தர்கள் பற்றிய தவறான தகவல்கள் பற்றிய விடயம்.

17-10-2003 அன்று வெள்ளிநாதம் பத்திரிகையில் 7ம் பக்கத்தில் 2வது பந்தியில் வெளியிடப்பட்ட பூ.சரண்யா எழுதிய கடிதம் தொடர்பான "நிரந்தர நியமனத்துக்காய் ஏங்கும் வைத்தியசாலை தொண்டர்கள்." எனும் தலையங்கத்தின் கீழ்வந்த கடிதத்தில் சில தவறுகள் காணப்படுகின்றன.

அவை பின்வருமாறு :-

01. யுத்த பிரதேசத்திற்கு தாதிமார் பணிபுரிய தயங்கிய வேளையில் தொண்டர் சேவையில் ஈடுபட்டமை.

02. வைத்தியர்களோடு இக்கட்டான நிலையில் தாதியருக்கு பதிலாக தொண்டர்கள் பணி யாற்றியுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது முற்றிலும் தவறான தகவல் என்பதை தாதியர் களாகிய நாங்கள் பூ.சரண்யா என்பவருக்கு தெரிவிப்பதுடன் கடுமையான கண்டனத்தையும், விசனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆனால் தாதிக்குப் பதிலாக ஒரு போதும் தொண்டர்கள் பணியாற்றமுடியாது. யுத்த பிரதேசத்தில் தாதிபணிபுரிய தயங்குவதும் இல்லை. தவறான தகவல்கள் வெளியிட்ட பூ.சரண்யா என்பவர் கிளி/முல்லை தாதிய உத்தியோகத்தர்களுக்கு தகுந்த விளக்கம் அளிக்க வேண்டும்

இவ்வண்ணம்:

கிளி/முல்லை மாவட்ட அரசதாதியஉத்தியோகத்தர்கள்

கு.சந்திரமோகன். (தா/உ)

கு. ஜெயராஜன். (தா/உ)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சமூக நோக்குடைய இலக்கியங்கள்

ஈழத்தின் தமிழ்க்கவிதை மரபினை நோக்கும்போது ஆரம் பத்தில் அவை பெரும்பாலும் சமய நிலைப்பட்டனவாகவே திகழ்ந்தன. கிறிஸ்தவ மதப்பிரசார இயக்கத்தின் தாக்கமும் அதனை முகங்கொடுத்த சைவசமய எழுச்சியும் பத்தொன் பதாம் நூற்றாண்டில் சமயம் சார்ந்த இலக்கியங்களுக்கே முக்கியத் துவம் கொடுத்தன. சமயப் பாது காப்பு, சமய வளர்ச்சி அநுட்டா னங்கள் என்பனவே தமிழ் இலக் கியங்களில் பேசப்பட்டன.

சமயம் சார் இலக்கியங் கள். பெரும்பாலும் புராணம் என்றே அழைக்கப்பட்டன. புராணம், உலகத்தோற்ற ஒடுக்கங்கள், மனு வந்தரமும், முனிவர் வரலாறும், அரசமரபும் அவர் சரிதமும் கூறும் ஒரு இலக்கிய வடிவமாகவே ஆரம் பத்தில் கூறப்பட்டது. புராணம் என் னும் சொல் ஈழத்தில் பயன் படுத்தப்பட்டபோது அது தல மான்மியம், தெய்வ அடியார்கள் வரலாறு, விரதமகிமை போன் றவற்றை குறிப்பதாக அமைந்து விட்டது.

சமய நிலைப்பட்ட இலக்கியங்கள் பெரும்பாலும் முக்கியத்துவம் பெற்ற பத்தொன்ப தாம் நூற்றாண்டில் எழுந்த உலகியல் சார்ந்த நூல்களும் புராணம் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டன. ஈழத்துப் புலவர் மூவர் புராணம் என்னும் இலக்கிய வடிவத்தின் பொருளை மாற்றி யமைத்துவிட்டனர். அச்சுவேலி நீ.காசிநாதப் புலவர், கோப்பாய் வே. இராமலிங்கம், வண்ணார் பண்ணைச் சுப்பையனார் என் போரே இவர் களாவர்.

தால புராணம்

இந்த நூல் அச்சுவேலி நீ.காசிநாதப் புலவரால் இயற் றப்பட்டது. பணங்காய்ப் பாரதம் என் பது இந்த நூலின் மற்றொரு பெயராகும். புலவர் ஒரு சோதி டராகவும் இலக்கிய ஆற்றலுடை யவராகவும் திகழ்ந்தார். தால புராணம் தற்போது கிடைக்க வில்லை. பாவலர் சரித்திர தீபக (1886) ஆசிரியர் ஆர்னல் சதா சிவம்பிள்ளை இதிலுள்ள விருத் தங்கள் சிலவற்றைத் தாம் பார்த் ததாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும் உதாரணத்துக்கேனும் ஒரு விருத் தத்தைத் தமது நூலில் தரவில்லை. "கற்பக விருட்சம் எனப் பெயரிய தெய்வ விருட்சத்துக்கு இலக்காய் எம்மூரிலிருக்கும் பனைமரப் பெருமையும் அவற்றின் பிரயோசன நயங் களுமே அப்பாடற்பொரு ளாகத் துணிகிறோம். பனைப் பெருமை கூறினும் ஓர் போது ஒருவகை கேலிப் பாடலாகவும் இருக்கலாம்" எனப் பாவலர் தீபக ஆசிரியர் கூறுகின்றார். 20ஆம் நூற்றாண்டில் நவாலியூர் சோம சுந்தரப்புலவர் 'தாலவிலாசம்' என் னும் காவியத்தைப் பாடியுள்ளார். கும்ப கோணம் காசிநாதப் புலவர் கலிவெண்பா யாப்பில் தால புரா ணம் என்னும் நூலை இயற்றி யுள்ளதாகவும் அறியப்படுகிறது.

கோட்டுப்புராணம்

கோப்பாய் வே.இராம லிங்கம் கோட்டுப் புராணத்தை இயற்றினார். நீதிமன்றத்தைக் குறிக்கும் COURT என்னும் சொல் தமிழில் பேச்சு வழக்கில் கோடு என்று அழைக்கப்படுகின்றது. சட்ட வாக்கம், சட்ட அமுலாக்கம், நீதி பரிபாலனம் என்னும் மூவகை அதிகாரங்களையும் தனித்தனியா கப் பிரித்து நோக்கும் பண்பு பிரித் தானிய அரசின் சிறப்பம்சமாகும். நீதிமன்றத்தை சட்டம் இயற்று வோரோ, அமுலாக்குவோரோ கட்டுப்படுத்த முடியாது. இதனால் நீதிமன்றங்கள் சுயமாக இயங்கும் நடு நிலையிலிருந்து நீதி வழங்கும் என்றெல்லாம் சொல்லப்படு கின்றது. வழக்குகள் நெடுங்கால மாக இழுத்தடிக்கப்படுவது, சட்டத் தரணிகள் வழக்காளியிடமும் எதிரி யிடமும் ஈவிரக்கமின்றி பணங் கறப்பது என்பவற்றால் பொது மக்கள் அலுத்துக்கொள்கின்றனர். இதனால் "கோட்டுக்குப்போறியோ கேட்டுக்குப் போறியோ?" என்ற முதுமொழியும் பிறந்துவிட்டது.

இவற்றைக்கண்ணுற்ற புலவர் கோட்டு நடவடிக்கைக ளைக் கேலிசெய்யும் முறையில் கோட்டுப் புராணத்தைப் பாடியுள் ளார். கோட்டினை ஒரு கூத்துக் களரிக்கு ஒப்பிடுகின்றார் புலவர். நீதிபதி கூத்துப்பார்க்கும் முதியவர் வழக்காளியும் எதிரியும் கூத்தாடும் குரங்குகள் அவர்களை



ஆட்டுவிக்கின்ற கயிறுதான் வழக்கு நட்டுவாங்கம் செய்பவர்கள் சட்டத்தரணிகள். அவர்கள் வயிறு வளர்ப்பதற்கே இந்த வேடத்தை தருகின்றனர் என்னும் பொருள் படும் பாடல்:

கோடொரு களரி அதிலுறுந் துரையோ
கூத்துப் பார்த்திருந்திடு மூப்பு
ஆடுறு குரங்கோ வழக்கர்கள் ஆவர்
அவையிடை அவர்களைக் கொண்டு
நாடொறும் ஆட்டும் கயிறு தான் வழக்கு
நட்டுவப்பணிக்கனோ தரணி
வாடுறு வயிறு வளர்ப்பதற் கெடுத்த
வஞ்சனை வேடமென் றுணரே
அங்கதச் சுவை பொதிந்த

கோட்டுப் புராணத்தில் ஒரு சில பாடல்களே கிடைத்துள்ளன.

கனகி புராணம்

கனகிபுராணம் வண்ணார் பண்ணை நட்டுவச் சுப்பையனாரால் பாடப்பட்டது. இதன் பாட்டு டைத் தலைவி புலவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த கணிகை யாகும். கனகிசயமரம், கனகி சுயம்வரம் என்னும் பெயராலும் இந்நூல் அழைக்கப்படுகின்றது. ஏறக்குறைய நானூறு விருத்தப் பாவாலானது இப்பனுவல். ஆனால் தற்போது சில பாடல் களே கிடைத்துள்ளன. 1937 ஆம் ஆண்டில் நவாலியூர் ந.சி.கந் தையாபிள்ளை கனகிபுராணம் (தெரிகவிகள்) என்னும் நூலை வெளியிட்டார். நீர்வேலி சிற் சபேசன் என்பவர் தேடிப் பெற்றிருந்த பாடல்களையே ந.சி.கந்தையா பிள்ளை அவர்கள் சென்னை தியாகராய நகர் ஒற்றுமை ஆபீஸ் மூலம் அச்சிட்டு வெளியிட்டார். இவர்பதிப்பித்த நூலில் 29 பாடல்கள் இடம் பெறு கின்றன. பிள்ளையார் காப்பு, நாட்டுப்படலம் சுயம்வரப்படலம், வெட்டைகாண் படலம் என்னும் பிரிவுகளையுடையது இப்புராணம். இப் பகுப்பு முறை நூலாசிரியரு டையதா, பதிப்பாசிரியருடையதா என்பது தெரியவில்லை. இந் நூற்பிரதிகள் கிடைத்தற்கரிதாக இருந்தமையால் வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் அவர்கள் மீண்டும் பதிப்பிக்கும் முயற்சியில் ஏட்டுப் பிரதிகளைத் தேடினார். வவுனியா நகரசபைத்தலைவர் திரு. பி.தர்ம லிங்கம் அவர்களிடம் கையெழுத் துப்பிரதியாக இருந்த பாடல் களையும் பெற்றுப் புதிய பதிப் பொன்றைச் செய்தார். இவரது பதிப்பு சிவங்கருணாலய பாண்டி யனாரின் உரையுடன் கூடியது. இப்பதிப்பில் 25பாடல்களும் அநு பந்தத்தில் 10 பாடல்களும் இடம் பெறுகின்றன.

சுயம்வரம் என்பது ஒரு இராசகுமாரி பல தேசத்து இராச குமாரர்களுள் ஒரு வரைக் கணவனாகத் தெரிவுசெய்யும் முறை யாகும். இராச குமாரர்களை தோழி அரசகுமாரிக்கு அறிமுகப்படுத் துவாள். கனகி புரா ணத்தின் தலை வியோ ஒரு கணிகை மாது. தனது லாவண் யத்தாலும் கலை யாற்றலாலும் இலங்கை, இந்திய ஆடவர் பலரைத் தன்காம வலையில் சிக்க வைத்தவள். கனகியிடம் வரும் ஆடவரைத் தோழி அறிமுகப்படுத் துவது போல் சுயம்வரப் படலப் பாடல்கள் அமைந்துள்ளன. நாட் டுப்படலப்பாடல்களும் கவிச்சுவை நிரம்பி யவை. கனகி புரா ணம் அங்க தச்சுவை (நையாண்டி) பொருந்தியது. காப் பியத்தின் பெயர்கூட ஒரு நையாண்டி யாகவே இடப்பட் டுள்ளது. சாதாரணமாகப் புராணத் தில் பக்திச்சுவையே மிகுந்திருக் கும். ஆனால் இப்புராணத்தில் காமச்சுவையே மிகுதியாகக் காணப்படுகின்றன. மிகுதியான பாடல் விரசமாக இருந்தபோதும் கவி நயம் வாய்ந்தவை.

கனகி புராணத்தின் நையாண்டிப் பண்பைக்காட்டும் பாடல்களுள் வகை மாதிரிக்கு ஒன்றைப் பார்ப் போம்.

பனம்பழம் ஒன்று கனிந்து நிலத்தில் விழுகின்றது. இந்தப் பழத்தைக் கைப்பற்றிக்கொள்ளப் பலர் விழுந்தடித்துப் போட்டி போடுகின்றனர். வேலும் கத்தியும் கொண்டு வெற்றி பெறுவதற் காகச் சண்டை செய்கின்றனர். இப்படி யான வளப்பம் பொருந்திய நாட் டைச்சேர்ந்த நியூட்டன் என்பவர் சுயம்வரத்திற்கு வந்திருக்கிறான். அவன் கனகி மீது மயங்கி அவளை அடையத் துடிப்பவன். மால்பற்றிய நெஞ்சினன். ஒரு பனம் பழத்திற்காகப் பலர் போட்டியிடும் நாட்டை வளநாடு எனக்குறிப்பதே ஒரு நையாண்டிதான். நியூட்டன் என்றவுடன் புவியீர்ப்பைக்கண்டு பிடித்த வெள்ளைக்கார விஞ் ஞானி சேர்.ஐசாக் நியூட்டனின் நினைவுவரலாம்இவன் வெள்ளைக் காரன் அல்லன். இவன் கன்னங் கரியவன் நீலக்கருங்கார் மேகநிற நியூட்டன் சூல்கொண்ட கருமேகம் இவன் நிறத்துக்குப் பிச்சைவாங்க வேண்டும். என்றிங்ஙனம் அவனை அறிமுகப்படுத்துகிறாள் தோழி.

தாலக்கனியொன்றினுக்காகத்
தரைமேல் மாந்தர் பலர் திரண்டு
வேல்கத்திகள் கொண்டு எறிந்து மிக
விசயம் பொருதும் வள நாடன்
மால் பற்றிய நெஞ்சினன் ஆகி
வந்தான் கனகே மன்றலுக்கு
நீலக் கருங்கார் மேகநிற
நியூட்டன் இவன்காண் நேரிழையே

தாலக்கனி-பனம்பழம் மால்-மயக்கம். கனகிபுராணத்தில் நாட்டுப் படலத்தில் உள்ள செய்யுள் ஒன் றின் அழகினை விரித்து இலங்கை வானொலியில் க.ச. அருள்நந்தி அவர்கள் பேசினார்கள்.

பெண்ணம் பெரிய துளையிட்ட கல் ஒன்றில் திமிர் புரியும் பசுக்கன்று மேய்சலுக்காகக் கட்டப்பட்டிருந்தது. அந்த முல்லைநிலத்தின் வழியே ஒருவர் கறுப்புக்குடை பிடித்துக் கொண்டுவந்தார். அதனைப்பசுக் கன்று கண்டதும் சினமடைந்து வாலைச்சுழற்றி மூசிக்கொண்டு கல்லையும் இழுத்துக்கொண்டு காட்டினுள் ஓடுகின்றது.

புல்லைமேய்ந் தங்குநின்று
திமிர்புரி இடபக்கன்று
முல்லைசார் வழியதாக முடி
மிசை குடையைக்கொண்டு
செல்லுவார் தம்மைக்கண்டு
சினந்து வால் எடுத்து மூசி
கல்லையும் கயிற்றினோடு
காட்டிடை இழுத்துச்செல்லும்

முல்லைமணி

இந்தப்பாடலை நீர்வேலி சிற்சபேசனே இயற்றிக் கனகி புராணத்துள் சொருவிட்டார் எனப் பின்பு தெரியவந்ததாக அருள் நந்தி அவர்கள் கூறுகின்றார்கள்.

தால புராணமும், கோட்டுப் புராணமும் அழிந்துபோக கனகி புராணத்தின் சில செய்யுள் களாவது தொகுக்கப்பட்டு நூல் உருப்பெற்றதையிட்டு நாம் மகிழ் வெய்தலாம். இந்த நூல்கள் எழுந்த காலத்தில் நடைமுறையிலிருந்த இறுக்கமான சமயநோக்கே இவற் றைப் புறக்கணிப்பதற்கும் மறைந்து போவதற்கும் காரணமாக அமைந்தது போலும்.

சமய நிலைப்பட்ட இலக் கியங்கள் பெரும்பாலும் முக் கியத்துவம் பெற்ற பத்தொன் பதாம் நூற்றாண்டில் எழுந்த உலகியல் சார்ந்த நூல்களும் புராணம் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டன. ஈழத்துப் புலவர் மூவர் புராணம் என்னும் இலக்கி யவடிவத்தின் பொருளை மாற்றி யமைத்து விட்டனர். அச்சுவேலி நீ.காசி நாதப் புலவர், கோப்பாய் வே. இராமலிங்கம், வண்ணார் பண்ணைச் சுப்பையனார் என் போரே இவர்களாவர்.

01.11.2003 அன்று மகளிர் படையணிகளின் ஆதரவில்..... நிதர்சனம் மகளிர் பிரிவின் உருவாக்கத்தில் வெளிவருகின்றது.....

தமிழீழவிடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் ஆரம்பகால வரலாற்றைச் சித்தரிக்கும் விவரணம்.....பாகம் – 01

(7ஆம் பக்கம் தொடர்ச்சி...)

சிங்களப்படையினரின் சுற்றி வளைப்புக்கள் நடைபெறும் போதெல்லாம் ஊர் மக்கள் தமது வீடுகளை, சொத்துக்களை விட்டுவிட்டு காட்டுக்குள் பாதுகாப்பைத்தேடிக் கொள்வார்கள். காடுகளைவிட்டு ஊர்வரும் போது அனைத்தும் எரிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் அலங்கோலமாகக் காட்சியளிக்கும். இந்நிலையிலும் கூட தம்மிடம் எஞ்சியதைக்கொண்டு உணவு சமைத்துப் போராளிகளுக்குக் கொடுத்தும் இராணுவம் வெளியேறியதை உறுதிசெய்து போராளிகளைப் பாதுகாப்பதிலும் ஈடுபட்டார்கள்.

இப்படியான சூழலில் 1990 இல் அமைதி நிலவியது. மூதூர் தளபதியாக குணம் பொறுப்பேற்றார். அரசன் அரசியல் பணிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார். அவ்வேளை பதுமன் திருமலை மாவட்டத் தளபதியாக விளங்கினார்.

போர் ஓய்வு விலகிய சில நாட்களின் பிற்பாடு கடலால் தரை இறங்கிய சிங்கள விசேட படையினரை கட்டைபறிச்சான் பாலத்தில் வைத்து தளபதி குணத்தின் தலைமையில் போராளிகளால் தாக்குதல் மேற்கொள் ளப்பட்டு 52 விசேட படையினர் கொல்லப்பட்டனர்.

இதன் பிற்பாடு பெரும் எடுப்பிலான சிங்களப்படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டதும் இடப்பெயர்வு அவலங்கள். படுகொலைகளை ஊர்மக்கள் சந்தித்தார்கள்.

ஊர்மக்கள் மத்தியில் அச்சமும், பீதியும் நிறைந்திருந்தன. ஊர் பாதைகளில் இரவு நேரங்களில் நடமாடவே மக்கள் பயந்தனர். தொழிலுக்குச் சென்ற கணவனை ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனைவி, மகனை எதிர்பார்க்கும் பெற்றோர் என நிலைமை மாறியது.

முன்னணிப் போராளிகளான குஞ்சன், கபிலப்பா, கண்ணதாசன், சுரேன், நிமால், விசு, ஆசீர், யேசு அம்மான் மற்றும் திருமலை அரசியல் பொறுப்பாளர் ரூபண்ணன் ஆகியோர் அப்பா வீடு சென்று வருவார்கள்.

அச்சமயங்களில் அப்பா கடலில் வலை பார்க்கச்சென்று முதலில் போராளிகளுக்கான மீனைக் கொண்டுவந்து நாகம்மாவிடம் கொடுத்துவிட்டபிற்பாடே முழுவலையையும்பார்க்கச்செல்வார்.

சிங்களப் படையினரின் நடமாட்டங்கள் தொடர்பான செய்திகளையும் வெளியேறிய செய்திகளையும் போராளிகளுக்கு வழங்கும் பணியிலும் ஈடுபட்டே வந்தார்.

அப்பா இழப்புக்களை தொடர்ந்தும் சந்தித்தபோதும் நம்பிக்கை இழக்காத மனநிலையில் இருந்ததினால் புகைகாற்றில் கலந்துவிடுவது போல துன்பதுயர மனநிலை மெல்ல மெல்ல மறைந்துவிடும்.

ஒருநாள் பகல் வெடிச்சத்தங்கள் ஊரைக் கதிகலங்கச் செய்தன. ஒன்றும் அறியாத மக்கள் சிதறி ஓடினார்கள். இதற்கு மத்தியில் யேசு அம்மான் பாதுகாப்புத்தேடி அப்பாவிடம் வந்து சேர்ந்தார். அப்பா யேசு அம்மானை பாதுகாப்பாக அழைத்துச் சென்றார். அதில் கபூர், கெனடி இருவரும் வீரச்சாவடைந்தார்கள்.

காலநகர்வில் விடுதலைப் போர் ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில் புதிய வரலாற்று மாறுதல்களில் காலடி வைத்திருக்கின்றது. விடுதலைப்புலிகளது பலத்தினால் ஏற்பட்ட இந்த அமைதிக்காலத்தில் அப்பாவும் ஒய்வாக இருந்து வருகின்றார்.

இச்சூழலில் மூத்த போராளியான சஞ்சய் அப்பாவினது வீட்டிற்கு சென்றபோது நாகம்மா "என்ர பிரவி வந்து விட்டியா" என்றபடியே சஞ்சய்ஐ அணைத்துக் கொண்டார். அப்போது அப்பா தன் மகனிடம் வெளியூர் சென்றுவிட்டார்.

அப்பா குடும்பத்தினர், ஊர் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு எப்படி என்ற கற்பனைக்கே நேரமில்லாது தன்னுயிரே தம்மிடமில்லாது தவித்து வாழ்ந்த காலத்து நினைவுகளைப் பகிர்ந்துகொள்வதா? வரலாற்றுப் பக்கங்களில் மீண்டும் புரட்டிப்படிக்க முடியாத சில இரத்தக்கறைபடிந்த ஊரில் நடைபெற்ற கொடுமைகளைப் பகிர்ந்துகொள்வதா?

என நினைத்து நீண்ட கால இடைவெளிக்குப்பின் கண்ட மகிழ்ச்சிக் கணத்தில் அவைகள் மறைந்தே போயின.

அப்பாவினது வாழ்க்கை நிகழ்வுகளும், அவர்களுடைய அர்ப்பணிப்புக்களும் சந்ததி சந்ததியாக எடுத்துச்சொல்லப்பட வேண்டியவை.

அவர்களுடைய தினசரி வாழ்க்கையே இலட்சியம் ததும்பு வழியும் வகையில் அமைந்தது. தியாகத்தையே உயிர்மூச்சாகக் கொண்டது ஒழுக்கம் கட்டுப்பாடு இனத்திற்காக செய்த ஈகம் போராளிகளின் பால் பற்றுதல் போன்ற உரம்மிக்க அப்பாவினது குணங்கள் சரித்திரத்தில் உயர்ந்த நிலைக்கு இட்டுச் சென்றது.

"வடமாகாணத்தின் மாபெரும் கணனிக் காட்சியறை"
நொதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டட்
NORTHERN TECHNOLOGY(PVT)LTD
சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
இலகு தவணைக்கட்டண முறை
யாழ்ப்பாணத்தில்:-
இல:20,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021-222 5653
வவுனியாவில்:-
இல:-52,2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
T.P:-024-2221649
மன்னாரில்:-
இல:-31A,ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.
(தி:8539)
"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"

மானவனை மதிப்பதிலே, கல்வியின் இரகசியம் அடங்கியுள்ளது. – ரால்ப் வால்டோ எமெர்ஸன்.

அனுமார் பதில்கள்

● வணக்கம் அனுமார் அவர்களே! மாமி மாமாவுக்கு பசுப்பால் கொடுக்கும் போது அதற்குள் எறும்பு ஒன்று மிதந்து கிடந்தது. அதனால் அங்கு பெரிய தகராறு. ஒருநாள் மாமா பனங்கள்ளுக் குடிக்கும்போது அதனுள் பல்லி இறந்து கிடந்ததே?

செ.சோபனா,
புதுக்குடியிருப்பு.

போதை தரும் விடயங்கள் எல்லாவற்றிலும் சுத்தம் 2ஆம் பட்சம்.

●அறிவுள்ள ஒரு ஆண் அழகுள்ள ஒரு பெண்ணைத் திருமணம் முடித்தால் பிறக்கின்ற பிள்ளை அறிவுடனும் அழகுடனும் பிறக்குமாமே? உண்மையா?

ஏ.நிலக்ஷி
வட்டக்கச்சி

இதற்கு அறிஞர் பேனாட் ஷாவின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் தான் நினைவுக்கு வருகிறது. ஒரு விழாவில் அறிஞர் பேனாட்ஷாவைப் பார்த்து அழகான பெண் ஒருவர் கேட்டாராம், நானும், நீங்களும் திருமணம் செய்து கொண்டால் என்னைப் போன்ற அழகும், உங்களைப் போன்ற அறிவும் நிரம்பிய பிள்ளை பிறக்குமல்லவா? எனக் கேட்டாராம். அதற்கு பேனாட்ஷா உம்மைப்போன்ற அறிவும், என்னைப் போன்ற அழகும் கொண்டபிள்ளை பிறந்துவிட்டால் என்ன செய்வது என்றாராம்.

புதுக்குடியிருப்பு

முதலாவது குழந்தைக் காகப் பாடியது இரண்டாவது யாம் அறியோம்.

● அனுமாரே! மனித வாழ்க்கையில் சந்தோசமான காலம் மாணவப் பருவமா? அல்லது மணவாழ்வுப் பருவமா?

இ.விமலாம்பிகை
விசுவமடு.

கடந்துபோன பருவங்களின் நினைவுகள்.

● சந்திரிகாவின் கொழும்புப் பேரணி ஏன் தோற்றுப்போனது.

வசந்தன்,
உடையார்கட்டு.

வெல்லமாட்டார் என்று மக்கள் விளங்கிக்கொண்டதால்.

● புலிகள் இடைக்கால நிர்வாக சபை வரையில் பலர் எதிர்பார்த்ததில் எதைத் தவிர்த்து விடுவார்கள்.

மோகன்,
மானிப்பாய்.

நிச்சயமாகத் தனிநாட்டை.

● சந்திரிகாவின் வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்திக்காமல் அவமதிக்கும் போக்கைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பரமேஸ்,
மன்னார்

ஆங்கிலேயரின் பழமொழி ஒன்று 'குறைகுடம் கூத்தாடும்' என்றிருக்கிறது.

● தமிழர்கள் ஒன்று திரண்டு நிற்கவேண்டிய இன்றைய சூழலில் சங்கரியார் இப்படிப் பண்ணுவது ஏதனால்?

கண்ணன்,
சுவிஸ்

"ஆட்டுவித்தால் ஆடாதார் யார்தான் உண்டு கண்ணா? ஆசையெனும் தொட்டிலிலே யார்தான் ஆடார் கண்ணா"

● அனுமாரே! கூட்டணியின் இத்தனைக் குத்துக்கரணங்களுக்கும் அதன் முக்கியஸ்த்தர்கள் எல்லோரும் தானே பொறுப்பு. அப்படியிருக்க சில தலைவர்களுடன் புலிகள் இப்பொழுதும் அனுசரித்துப் போக முயற்சிக்கிறார்களே இதை என்னவென்று சொல்வது?

சிவராசா,
வவுனியா.

இதை எங்கதூரில் சொல்வார்கள் 'குளத்தோடு கோபிச் சுக்குண்டி கழுவாமல் இருக்க முடியாதென்று'

சாணக்கியா
காகிதாதிகள் விற்பனை நிலையம்
வன்னியில்...
என்றும்
நியாயவிலையில்
பெற்றுக்கொள்ள...
பாடசாலை
உபகரணங்கள்
மற்றும்
அச்சகங்களுக்கு
தேவையான
பொருட்கள்
என்பவற்றை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
உகந்த
இடம்!
சாணக்கியா
யாழ்சாலை, கிளிநொச்சி.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –41

நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –41

.....

.....

.....

.....

பெயர் : .....
முகவரி : .....
.....

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –40

சி.சிறிதேவி
இல.76,
வைத்தியசாலை வீதி,
முழங்காவில்.

பரிசுக்குரிய வரிகள்

மாட்டை வெட்டி தலை எடுக்க பானையுடைத்த
மாதனமுத்தா புதல்வனல்ல இவன்
மானத் தமிழனின் உணர்வுப் பொங்கலை
உற்றுப்பார்க்கும் தமிழ்த்தாய்ப் புதல்வன் இவன்.

பாராட்டுக்குரிய வரிகள்

அன்னை அணைப்பில் மழலை மொழிபேசி
மார் முலையில் வாய் வைக்க வேண்டிய நீ
யார் அணைப்பும் இன்றி
நீரற்ற குடத்தில் வாய் வைப்பது ஏன்?

மு.ராணி,
புதுக்குடியிருப்பு.

தண்ணீர்த் தாகம்
தலைமேல் எடுத்தாலும்
மண்ணின் தாகத்தை
மழலை நீ மறக்காதே.

S.சிவா,
பருத்தித்துறை.

வாழ்விலே ஏதுமில்லை
வறுமையைத் தவிர;
வெள்ளிக்குடத்திலே ஏதுமில்லை
வெறுமையைத் தவிர.

செ.நிசந்தி,
திருவையாறு.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தை- இது
மாப்பால் தானும் குடிக்கக் கிடையாமல்
எப்பால் ஏனும் குடிக்க எண்ணி
இப்பால் குடிக்க முயல்கிறது.

திருமகள்-குமாரசாமி,
பொன்னாவெளி,பூநகரி..

குடத்தில் தண்ணீருக்காய் தவிக்கும் பாலகனே-நீ வாழும்
இடத்தைப் பார்த்து ஏங்கித்தவிக்கிறது எம்மிதயம்
இட்லெயர்வால் ஏற்பட்ட கொடுமை-இது
தொடர் கதையாய் தொடர்வது மடமை.

இ.இரத்தினசிங்கம்,
ஜெயந்திநகர்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.

புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

☞ சட்டம் முடியும் இடத்தில், கொடுங்கோல் ஆரம்பம் தொடங்கும். –வில்லியம் பிட் (மூத்தவர்)

ரயினோ அதிர்ஷ்டத்திற்கு மேல் அதிர்ஷ்டம்!

40 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் நம்பிக்கையை வென்றெடுத்த ரயினோ அஸ்பெஸ்டஸ் தகடுகளை வாங்கி, பெறுமதி மிக்க பரிசுகளை வெல்லுங்கள்.

முடிவுதிகதி 23 டிசம்பர் 2003

* புத்தம் புதிய மாருதிகார்
* 2 புத்தம் புதிய125cc மோட்டார் சைக்கிள்கள்
* 10, 2கதவு குளிர்சாதனப் பெட்டிகள்
* 10, 21தட்டையான திரையிலான வர்ணத் தொலைக்காட்சிகள்
* 10, சலவை இயந்திரங்கள்

நிபந்தனைகள் நடுவர்களின் முடிவு இறுதியானது

இப்போட்டியில் ரயினோ ரூஃபிங் புரடக்ட்ஸ் லிமிற்றெற்றினதும், ட்ரைஅட் அட்வர்டைஸிங் (பிறைவேற்) லிமிற்றெற்றினதும் அலுவலர்களும், அவர்களது உறவினர்களும் பங்குபற்றமுடியாது.

பெயர்:.....

விலாசம்:.....

விற்பனை நிலையத்தின் பெயர்:.....

விற்பனை நிலையத்தின் விலாசம்:.....

இக்கூப்பனை திரப்பி 2003 டிசம்பர் 15க்கு முன்னர் உங்கள் சிட்டையின் (Bill) புகைப்படப் பிரதியுடன் கீழேயுள்ள விலாசத்திற்கு தயவில் அனுப்பி வையுங்கள்.

RHINO

ரயினோ ரூஃபிங் ப்ரடக்ட்ஸ் லிமிற்றெற்

752, பேஸ்லைன் வீதி, கொழும்பு-09.

தொலைபேசி -2693694,2674765 பக்ஸ்: 2667267

40 வருட மேன்மையான சேவை

1வது முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்டது

தினசரி, பண்டிகைத் தேவைகளுக்கு எங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்

எங்கும் இல்லாத குறைந்த விலையில் தரமான பொருட்கள் ஒரே கூரையின் கீழ் பெற்றிட...

விலைக் கழிவுகள், சலுகைகள் ஒன்றை வாங்கி மற்றையதை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

* மளிகைப் பொருட்கள்.
* வெளிநாட்டுப் பழவகைகள்.
* ஐஸ்கிறீம் வகைகள்.
* மருந்து, பால்மா வகைகள்.
* தங்க நகை ஆபரணங்கள்.
* சிகை அலங்காரப் பொருட்கள்.
* வாசனைப்பொருட்கள் (சென்ற்).
* வீட்டுப்பாவனைப் பொருட்கள்.
* அன்பளிப்புப் பொருட்கள்.
* கவரிங், அழகுசாதனப் பொருட்கள்.
* இலத்திரனியல் பொருட்கள்.
* இன்னும் பல பல...

விரையுங்கள்! விரையுங்கள்!! இன்றே...

உங்கள் தினசரித் தேவைகளுக்கு

ஒருதடவை விஜயம் செய்து பாருங்கள் மீண்டும் மீண்டும் வாத்தூண்டும்...

Annai Nagaa Food City

அன்னை நாகா புட் சிற்றி

175, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Tel: 021-222 5515
Fax:021-222 5223

இப் பத்திரிகை கிளிநொச்சி சமுநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.